O-2MSM.V
N20
149452
149452

2007-3

SHAKESPEARE'S

AS YOU LIKE IT

IN TAMIL

விரும்பிய விதமே

By

Rao Sahib P. Sambandam

(27)

Accn NO
149452

Pages. 128

[illegible]

O 73msm, V
N20
149659

874.842

SHAKESPEARE'S

# 'AS YOU LIKE IT'

IN TAMIL

OFFICE OF THE ... 9 - AUG 1920 MADRAS.

BY

Rao Sahib P. SAMBANDAM, B.A., B.L.

*Author of "The Two Sisters," "The Bandit Chief," "Manohara," "Blind Ambition," "Fate and Love," "Sarangadhara," "The Demon Land," "Galava," "Amaladitya," "The Fair Ghost," "Ratnavali," "The Two Friends," "Magapathi," "The Golden Fetters," "The Good Fairy," "Markandeya," "The Merchant of Vanipura," "Simhalanatha," "The Eye of Love," "Siruthondar," "True Love," "The Tragedy of Silence," "Pushpavalli," "Vijaya Rangam," "Sabapathy," "Farces," "As We Sow-So We Reap," "The Curse of Oorvasi," "Geetha Manjari," "Lord Buddha" "Harischandra" etc. in Tamil, and "Harischandra," and "Yayath" in English.*

SECOND EDITION

Madras:
PRINTED BY S. MURTHY & CO., AT THE "KAPALEE" PRESS.
305, THAMBU CHETTY STREET.

1920

[...ght] [All rights reserved.

PRICE PER COPY, Re. 1.

874.8112
9 - AUG 1920
MADRAS.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

MY PARENTS

P. VIJAYARANGA MUDALIAR,

AND

P. MANICKAVELU AMMAL.

# PREFACE.

## (TO THE FIRST EDITION)

A rough adaptation of "As you Like it" was made by me for stage purposes several years ago. But it was only recently that I was able to revise it completely in its present form, and hence the delay in printing this work.

I must mention here, that I have omitted the character of Hymen, as being extraneous to Shakespeare's work and also for the reason that the idea is foreign to Indian thought. I have also omitted to translate a few lines, which would be considered obscene according to present day ideas though not so during Shakespeare's time.

I shall always be thankful to my readers for any suggestions tending to improve this adaptation in any respect.

I am afraid I have to repeat once again, a warning to Societies Amateur and Professional that wish to stage any of my works, that they must take beforehand my permission to do so, as I have reserved all rights in my works.

The Author.

# விரும்பிய விதமே

## நாடக பாத்திரங்கள்

| | |
|---|---|
| குலசேகரன் | அரசினின்றும் துரத்தப்பட்டு அடவியில் வாழும் அரசன். |
| பிரதாபதீரன் | குலசேகரன் தம்பி, அவனது ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டவன். |
| ஹேமநாதன், ஜகந்நாதன் | காட்டில் குலசேகரனுடன் வாழ்ந்து வரும் அவனது மந்திரிகள். |
| லாவண்யன் | பிரதாபதீரன் சபையில் வாழும் ஓர் மந்திரி. |
| சாரளன் | பிரதாபதீரனுடைய சமஸ்தான மல்லன். |
| ஹலவீரன், ஜகந்நாதன், அமரசிம்ஹன் | ரணவீர பாஸ்கரருடைய பிள்ளைகள். |
| தாமன், தனரேனன் | ஹலவீரன் வேலையாட்கள். |
| அம்சுதன் | ஓர் விதூஷகன். |
| மார்த்தாண்ட ஐயர் | ஓர் புரோஹிதர். |
| நந்துக்கோனன், செல்வக்கோனன் | இடையர்கள். |
| வில்லியன் | ஆதிரையின்மீது காதல்கொண்ட ஓர் நாட்டுப்புறத்தான். |
| ராஜீவாட்சி | குலசேகரன் மகள். |
| சுசீலை | பிரதாபதீரன் மகள். |
| பத்மினி | ஓர் இடைச்சி. |
| ஆதிரை | ஓர் நாட்டுப் புறத்துப் பெண். |

குலசேகரன் மந்திரிகள், பிரதாபதீரன் மந்திரிகள், வேலைக்காரர்கள்,
காட்டுவாசிகள், சேவகர்கள் முதலியோர்.

கதை நிகழிடம் :—முதலில் ஹலவீரன் வீட்டருகிலும், பிறகு சிலகாலம் பிரதாபதீரன் அரண்மனையிலும், பெரும்பாகம் அருங் காட்டிலும்,

9 - AUG 1920
MADRAS

உ

# விரும்பிய விதமே

## முதல் அங்கம்.

### முதல் காட்சி.

இடம்:—ஹலவீரனுடைய வீட்டைச் சார்ந்த ஓர் பொழில்.

அமரசிம்ஹனும் தாமனும் வருகிறார்கள்.

எனக்கு ஞாபக மிருக்கிறபடி, தாமா, இப்படித்தான் நேர்ந்தது; தன் மரண சாஸனத்தினால அற்பமாய் ஒரு ஆயிரம் பொன் எனக்கென்று ஏற்படுத்தி, நீ சொல்லுகிறபடி, தன தானையின்மீது என்னை முன்னுக்குக் கொண்டுவரும்படி என் தமயனுக்குக் கட்டளையிட்டுச் சென்றார்; அதிலிருந்து ஆரம்பித்தது என் துயரமெல்லாம். என் தமயன் ஜகந்நாதனை பள்ளிக்குக் கிரமமா யனுப்புகிறான், அங்கு அவன் பெறும் பயிற்சியைப்பற்றி எல்லோரும் புகழ்ந்து பேசுகின்றனர், என்னையோ வென்றால் மடயனைப்போல் வீட்டி லடைத்து வைக்கிறான்; உண்மையைக் கூறுமிடத்து, இங்கே வீட்டில் சோம்பேறியாய்த் திரியச் சும்மா விட்டிருக்கிறான்; உயர் குலத் துதித்த என்னை வளர்த்துவரும் விதம் இதுதானோ? மாடுகளை வளர்ப்பதற்கும் இதற்கும் மற்றென்ன பேதம்? என்னைவிட அவனது குதிரைகளை நன்றாய் வளர்த்துவருகிறான்; அவைகளை அழகுறப் போஷிப்பதன்றி, அதிக கூலி கொடுத்து குதிரைக்காரர்களைக்கொண்டு அவைகளைப் பழக்கியும் வருகிறான்; அவன் தம்பியாகிய நானோ, அவனா லடைந்த பயன், வளர்ச்சியன்றி வேறொன் றில்லை. அதன்பொருட்டு, அவனது குப்பை

மேடுகளி லிருக்கும் கோழி முதலியன அவனுக்கு எவ்வளவு நன்றி பாராட்டவேண்டுமோ அவ்வளவு பாராட்ட வேண்டும் நானும். ஒன்றும் செய்யாம லிருக்கிற இந்தப் பேருபகாரத்துடன் விடாது, சுபாவத்தினால் நான் பெற்றிருக்கும் சிறிது குணத்தையும் தன் மேற்பார்வையினால் குன்றச் செய்கிறான். அவனது உழவாட்களுடன் உண்ணும்படி விடுகிறான்; சகோதரனுக் குரிய சுதந்தரம் கொடுக்கின்றா னில்லை; இவ்வாறு பழக்கி என் உயர்குடிப் பிறப்பின் நற் குணத்தை யெல்லாம் தன்னா லியன்ற அளவு நாச மாக்குகிறான். தாமா, இதுதான் எனக்குக் கவலையைத் தருகிறது; என்னுள் ளிருக்கும் என் தந்தையின் அருங் குணமானது இந்த விலங்கை யொழித்து வெளிப்பட உந்துகிறது. இனி இதைப் பொறுக்கமாட்டேன் நான், இதைத் தவிர்ப்பதற்குத் தக்கதோர் மார்க்கம் இன்னும் தோன்றாதிருப்பினும்.

தா. அதோ வருகிறார் என் எஜமான், உமது தமயன்.

அ. தாமா, ஒரு பக்கமா யிரு. அவன் என்னை எப்படி ஆட்டி வைக்கிறான் என்பதைக் கேட்பாய.

ஆலிவர் வருகிறான்.

ஒற. என்னடா செய்கிறா யிங்கே?

அ. ஒன்று மில்லை. ஏதாவது செய்ய எனக்குக் கற்பித்திருக்கிறாயா?

ஒற. வீணாகக் காலங் கழிக்கிறாயோ?

அ. தங்கள் சகோதரனுக்குத் தாங்கள் கற்பித்த சோம்பேறித்தனம் என்ற வேலையை மிகவும் சுருசுருப்பாய்ப் பார்த்து வருகிறேன்.

ஒற. ஏனடா, ஏதாவது வேலை செய்கிறதுதானே? ஏன் சும்மா இருக்கிறாய்?

அ. என்ன வேலை செய்வது? உனது ஆடுமாடுகளை மேய்த்து அவைகளுடன் வைக்கோல் தின்னவா? என்னுடைய ஆஸ்தி



யையெல்லாம் என்ன நான் அழித்துவிட்டது, இவ்வாறு ஏழ்மையடைய?

ஒற. அடே, நீ யிப்பொழுது எங்கே இருக்கிறாய் தெரியுமா உனக்கு?

அ. ஓ! நன்றாய்த் தெரியும், இங்கே தங்களுடைய தோட்டத்தில்.

ஒற. அடே, யார் எதிரில் நிற்கிறாய் தெரியுமா?

அ. என்னெதிரில் நிற்பவன் என்னை அறிவதைவிட நான் அவனை நன்றா யறிவேன். நீ யென் தமயன் என்பதை நன்றா யறிவேன். அவ்வாறே உதிர சம்பந்தத்தினால் நீ யென்னை உன் தம்பியென் றறியவேண்டும். தொன்று தொட்டுவரும் உலக மதிப்பின்படி நீ யென் முன் பிறந்தோனாகையால் எனக்கு மேம்பட்டவனா யிருக்கவேண்டும், ஆயினும் உனக்கும் எனக்கும் இடையில் இன்னும் இருபது அண்ணன் தம்பிகள் பிறந்திருந்தபோதிலும் நம் மிருவருடைய உதிரமும் ஒன்றே யென்பதை யது மாறாது. எனக்கு முன்னால் பிறந்தமையால் என்னைவிட அதிக சமீபமா யிருந்தபோதிலும், நமது தந்தையின் சுபாவம் உன்னிடம் எவ்வளவுண்டோ அவ்வளவு என்னிடமு முண்டு.

ஒற. என்னடா பயலே?

அ. போதும், போதும், மூத்த அண்ணா, இந்த மூடத்தனம் இனி வேண்டாம்.

ஒற. என்னைத் தீண்டுகிறாயா பாதகா?

அ. நான் பாதக னன்று; ரணவீர்சபாலர்ருடைய கடைசி மைந்தன்; அவ ரெனது தந்தை; அப்படிப்பட்ட தந்தை பாதகனைப் பெற்றாரென்று சொல்லும்பாபியே பஞ்சமாபாதகன். நீ எனது தமயனா யில்லாவிட்டால் இக் கரத்தை யுன கழுத்தினின்றும் எடுத்திடுமுன் மற்றொரு கரத்தால் அந் நாவை

யறுத்திருப்பேன் அங்ஙனம் கூறியதற்காக; உன்னையே நீ பழித்துப் பேசினாய்.

தா. [முன் வந்து] ஐஐயோ! எஜமான்கள் கொஞ்சம் பொறுத்துக்கொள்ளவேண்டும். பழய எஜமான் ஞாபகத்தின் பொருட்டாவது கொஞ்சம் ஒற்றுமையா யிருக்கலாகாதா?

ஒற. விடடா என்னை!

அ. எனக்கு மனம் வந்தபொழுதே விடுவேன். முன்பு நான் சொல்வதைக் கேள். நமது தந்தை இறக்கும்பொழுது வேண்டிய கலைகளைக் கற்பித்து என்னை விற்பன்னனாக்கும்படி கட்டளையிட்டுச் சென்றார்; என் அந்தஸ்துக் குரிய அருங் குணத்தை எல்லாம் அடியுடன் அழித்து, கன்று மேய்க்கவும் உதவாத சடமாக்கினை யென்னை. என் தந்தையின் ஆண்மைக் குணம் என்னிடம் அதிகமாய் வளர்ந்துளது, இதை நான் இனிச் சகியேன். ஆகவே என் குடிப்பிறப்பிற் கேற்ற ஏதேனுந் தொழிலையாவது கற்பி, அல்லது நமது தந்தை மரண சாஸனப்படி எனக்கு வைத்துவிட்டுப் போன என் பங்கு ஆஸ்தியை எனக்குக் கொடுத்துவிடு; நான் எங்கேயாவது போய் என் அதிர்ஷ்டத்தை [illegible]றேன்.

ஒற. அப்புறம் என்ன செய்யப்போகிறாய் அந்த ஆஸ்தி தொலைந்தவுடன் நீ? பிச்சை யெடுப்பாயா? சரி! அப்படியே ஆகட்டும், வா வீட்டிற்கு, உன் பாகத்தை வாங்கிக்கொண்டு தொலைந்து போ. உன் தொந்தரை வேண்டாம் எனக்கு இனி; விடு, என்னை.

அ. என் வழிக்கு வந்த பின் உன்னைத் தொந்தரை செய்வானேன் நான்?

ஒற. கிழப் பிணமே! நீயுந் தொலைந்து போ அவனுடன்.

தா. கிழப் பிணமா! ஐயா, இத்தனை காலம் உங்களுக்காக உழைத்ததற்கு கிழப் பிண மென்ற பட்டப் பெயர்தானா கிடைக்க



வேண்டும்? வாஸ்தவம்தான், வேலை செய்தே கிழவனாய்ப் போனேன். பிணமாகிற காலமு மாச்சு. எனது பழய எஜமானை சுவாமி ரட்சிப்பாராக! பழய எஜமான் இப்படி சொல்லியிருப்பாரா ஒரு பேச்சு?

[அமரசிம்ஹனுந் தாமனும் போகிறார்கள்]

ஒற. அப்படியா சமாசாரம்? என்னை எதிர்க்கும் ஸ்திதிக்கு வந்துவிட்டாயா? ஆகட்டும், அந்தக் கொழுப்பை யடக்குகிறேன். உன் ஆஸ்தி ஆயிரம் பொன்னில் அரை பொன்னுந் தருவதில்லை—யார் அங்கே? தனசேனா?

தனசேனன் வருகிறான்.

த. எஜமான் கூப்பிட்டாரா?

ஒற. என்னைப் பார்க்கவேண்டுமென்று மஹாராஜாவின் மல்லயுத்தக்காரன் சாரளன் வந்திருந்தானல்லவா?

த. வாயிலில் கார்த்துக்கொண்டிருக்கிறான், தம்மைக் காண வேண்டுகிறான்.

ஒற. அவனைக் கூப்பிடு உள்ளே. [தனசேனன் போகிறான்] இதுதான் சரியான மார்க்கம். நாளைத் தினந்தான் மல்லயுத்தம்.

சாரளன் வருகிறான்.

சா. நமஸ்காரம், ஐயா.

ஒற. வாராய், சாரளா. புதிய அரசன் அரண்மனையில் புதுமை ஏதாவதுண்டோ?

சா. அரண்மனையில் புதிய சமாசாரம் ஒன்று மில்லை, எல்லாம் பழய சமாசாரந்தான். பழய ராஜா, அவர் தம்பியாகிய புதிய ராஜாவால் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டதுதான். அவரிடம் பிரீதி அதிகம் வைத்த மூன்று நான்கு மந்திரிகள் அவரைப் பின் தொடர்ந்து சென்றார்கள். அப்படிப்பட்ட

வர்களுடைய நிலங்களையும் வருமானத்தையும் ராஜாங்கத்துக்கு ஜப்தி செய்துவிடுகிறபடியால், புதிய ராஜா அவர்கள் இஷ்டப்படி போக விடையளிக்கிறார்.

ஹ. பழய ராஜாவுடன் அவருடைய குமாரத்தி ராஜ்வாக்ஷியும் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டாளா, தெரியுமா உனக்கு?

சா. இல்லை, இல்லை; தொட்டிலி விட்ட காலம்தொட்டு ஒன்றாய் வளர்ந்தமையால், புதிய ராஜாவின் மகள், பழய அரசன் மகளை நாட்டைவிட் டோட்டினால், தானும் உடன் போயிருப்பாள், அல்லது அவளை விட்டுப் பிரிந்து இங்கேயே தங்கும்படிச் செய்திருந்தால் தன்னுயிரை விட்டிருப்பாள்; அவ்வளவு பிரீதி யுடையவர்களாக இருக்கிறார்கள் அவ்விரண்டு பெயரும். ஆகவே ராஜ்வாக்ஷி அரண்மனையிலேயே வளர்ந்து வருகிறாள். அவர்களைப்போ லொருவர்க் கொருவர் பக்ஷம் வைத்துள்ள இரண்டு பெண்கள் உலகிற் கிடைப்பதரிது. புதிய ராஜாவும் தன் பெண்ணிடம் வைத்துள்ள பிரீதியை அவளிடமும் வைத்திருக்கிறார்.

ஹ. பழய ராஜா இப்பொழு தெங்கே வசிக்கிறாராம்?

சா. அப்பொழுதே அருங் காடடைந்ததாகச் சொல்லுகிறார்கள். அங்கே அநேகருடன் ஆநந்தமாகத் தான் வசிப்பதாகக் கேள்வி. தினம் அவரிடம் உயர் குலத துதித்த சீமான்களனேகர் போய்ச் சேர்கின்றனராம். அவர்களெல்லாம் பாண்டவர்கள் வன வாசஞ் செய்ததுபோல் சத்காலக்ஷேபம் செய்துகொண்டு சந்தோஷமாய்க் காலங் கழிக்கிறார்களாம்.

ஹ. நாளைத்தினம் நீ புதிய ராஜாவின் தர்பார்முன் மல்லயுத்தம் செய்யப்போகிறாயா?

சா. ஆமாம்; அதைப்பற்றியே தங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வந்தேன். என்னுடன் ஒரு கை பார்க்கவேண்டுமென்று மாறு வேடம் பூண்டு உமது சகோதரர் அமரசிம்ஹன் வர யத்தனித்திருப்பதாக ரகசியமா யெனக்குத் தெரியவந்தது.



நாளைத்தினம் நான் பௌரஷத்தின்பேரில் மல்லுத்தம் செய்வது. ஆகவே தன் எலும்பு உடையாது என்னிடமிருந்து தப்பிப் பிழைப்பவன் கெட்டிக்காரனாய்த்தான் இருக்கவேண்டும். உம்முடைய தம்பியோ இளம் வய துடையவர், இன்னும் தேகம் முதிர்ந்தவ ரல்ல. என்னை எதிர்த்தால் எப்படியும் நான் அவரைத் தோல்வி யடையச் செய்யவேண்டி வரும். உம்மீ துள்ள பிரீதியினால் அவ்வாறு அவரை முறியடித்தல் எனக் கிஷ்டமில்லை. அதற்காகத்தான், உம்மிடமுள்ள அன்பினால், இங்கே உமக் கிதைத் தெரிவிக்க வந்தது. உமது தம்பி யங்கே வராம லிருக்கும்படி பார்த்துக் கொள்ளும், இல்லா விட்டால் அவர் தானாகத் தன் தலைமீது போட்டுக்கொள்ளும் அவமானத்தைப் பொறுக்கவேண்டும்; ஏனெனில் எனது விருப்பத்திற்கு விரோதமாக, அவர் அதைத்தானாகத் தேடிக்கொள்வ தாகும்.

ஒா. சாரளா, என்னிடத்தி லுள்ள அன்பின்பொருட்டு உனக்கு மிகவும் வந்தனம் செய்கிறேன். இதை நான் மறவாது பிரதி செய்வே னென்பதை நீ அறிவாய். இவ்விதமாக என் தம்பி எண்ணங்கொண் டிருப்பது எனக்கு முன்பே தெரியவந்தது. என்னா லானமட்டும் நான் ரகசியமாக இந்த யோசனையை விட்டு விடும்படி பிரயத்னம் செய்துபார்த்தேன். அவன் ஒரே பிடிவாதமா யிருக்கிறான். சாரளா, நான் உன்னிடம் ஒன்று கூறுகிறேன். அவனைப்போல் பிடிவாத முள்ள பயலை இப் பிரபஞ்சம் முழுதும் தேடியுங் காணமாட்டாய் நீ. அவனது பேராசைக்கு இந்த உலகமே போதாது. எவனாவது எந்த வித்தையிலாவது அவனைவிட கெட்டிக்காரனா யிருந்தால் பொறுக்கமாட்டான்; அவனவனை அந்தந்த வித்தையில் தோற்கடிக்கவேண்டும் என்கிற துர் எண்ணம் எட்பொழுதும்; சொந்தத் தமயனாகிய எனக்கே குது மார்க்கமாய்த் தீங்கிழைக்க வேண்டுமென்று ஏர்நேரமும் யோசனை; ஆகவே உன்னிஷ்டப்படி செய், அப்பா.

நீ அவன் கையை ஒடித்தாலும் சரி, கழுத்தை முறித்தாலும் சரி. எனக்காக வேண்டியதில்லை. ஆனாலும் ஒரு வார்த்தை. நீ மிகவும் ஜாக்ரதையா யிருக்கவேண்டும், நீ ஏதாவது கொஞ்சமேனும் அவனை அவமானம் செய்தாயோ, அல்லது உன்னை நாளை அவன் நன்றாய்த் தோற்கடிக்காமற் போனானோ உன் உயிருக்கே கண்டந்தான். நேரில் உன்னைக்கொல்வது அசாத்திய மானாலும், விஷத்தினாலேயோ மற்றெவ்விதத்தினாலேயோ, சூது மார்க்கமாய் உன் உயிருக்கு உலை வைப்பான்; உன் உயிரைப் போக்குமளவும் உன்னைவிடான், உனக்கு உறுதியாய்ச் சொல்கிறேன். இவ்வளவு சிறு வயதில் இத்தனைத் துர்க் குணங்கள் ஒருங்கே குடிகொண்டிருக்கும் ஜன்மத்தை இந்த ஈரேழ் பதினான் குலகங்களிலும் காண்பதரிது; அதைப்பற்றிப் பேசலும் எனக்கும் துக்கத்தை விளைக்கிறது. சகோதர வாஞ்சையால் ஒருவாறாக அவனைப்பற்றி கூறினேன் என்று நினை. உண்மையை உள்ளபடி உரைப்பேனாயின் வெட்கத்தாலும் துக்கத்தாலும் வெய்துயிர்க்கவேண்டும்; நீயும் உள்ளத்தில் இடி விழுந்தாற்போ லாவாய்.

சா. அம்மட்டும் இங்கு வந்து உம்மைக் கண்டது மிகவும் சந்தோஷ மாச்சுது. நாளைத்தினம் உம்முடைய தம்பி என்னையெதிர்த்தால் அவருக்குச் செய்யவேண்டிய மரியாதை செய்வேன். அவ ருயிருடன் என் கையினின்றுந் தப்பிப் பிழைத்தால்,நான் மறுபடியும் எந்தப் பரிசின்பொருட்டும் மல்லயுத்தம் செய்வ தில்லை. இது சத்தியம்! நான் உத்தரவு பெற்றுக்கொள்கிறேன். [போகிறான்.]

ஓம. போய்வா சாரளா—சரி! இனி நம்முடையவனைத் தூண்டிவிட வேண்டும். இதனுடன் சனி ஒழியு மென்று நம்புகிறேன். என்ன காரணம் பற்றியோ அறிகிலேன், அவனைப் பார்க்கும் பொழுதெல்லாம் பற்றி யெரிகிற தெனக்கு. ஆயினும் சாந்த குணமுள்ளவன், பள்ளிக்குச் செல்லாமலே பல



கலைகளையும் கற்றான் எவ்விதமோ; நற்குண முடையவன், நல்ல எண்ண முடையவன்; எல்லோரும் வசியமானவர் போல் அவனிடம் மிகுந்த பிரீதி வைத்திருக்கின்றனர்; அவனை நன்றா யறிந்த என் பரிஜனங்களே என்னைவிட அவனை அதிகமாகப் பாராட்டி, என்னை நன்கு மதியா திருக்கின்றனர். இனி அம்மாதிரி இருக்கவிட லாகாது. இந்த மல்யுத்தக்காரன் எல்லாவற்றையும் நாளை சரிப்படுத்திவிடுவான். நாம் ஒன்றும் செய்யவேண்டிய தில்லை. நம்முடையவனை நாளை மல் யுத்தத்திற்குக் கட்டாயமாகப் போகும்படி தூண்டிவிட வேண்டியதுதான்; அதன்பொருட்டுப் போகிறேன் அவனிடம். [போகிறான்.]

காட்சி முடிகிறது.

---

## இரண்டாம் காட்சி.

இடம்—மஹாராஜாவின் அரண்மனையி லோர் முற்றம்.

ராஜீவாட்சியும் சுசீலையும் வருகிறார்கள்.

சு. ராஜீவா, என் கண்ணல்ல, நான் வேண்டுகிறேன் என்றாவது கொஞ்சம் சந்தோஷமா யிருக்க லாகாதா?

ரா. கண்ணே, சுசீலா, நான் இருக்கவேண்டியதைவிட அதிக சந்தோஷ முள்ளவளாகத்தா னிருக்கிறேன்; இதைவிட இன்னும் எப்படிச் சந்தோஷ முடையவளா யிருப்பேன்? பெற்ற தந்தை பெருங் காடேகியதைச் சற்றே மறந்திருக்க மந்திரமொன்று நீ கற்றுக்கொடுக்கு மளவும் நான் அபரிமிதமான சந்தோஷத்தி லிருக்கும்படி நீ கேட்க லாகாது.

சு. இதனால், நான் உன்மீது பட்சம் வைத்திருப்பதுபோல், நீ என்மீது அவ்வளவு பட்சம் வைத்திருக்கிறா யில்லையென்று எனக்கு நன்றாய்த் தெரிகிறது. எனது பெரிய தந்தையாகிய, இந் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட உன் தந்தை, உன்.

சிறிய தந்தையாகிய என் தந்தை மஹாராஜாவை, நாட்டை விட்டு காட்டிற்கு ஓட்டினரென வைத்துக்கொள்வோம்; அப்பொழுதும் நீ மாத்திரம் என்னைப் பிரியாது என்னுடனிருப்பாயாகில், உன் தந்தையையே யென் தந்தையாகப் பாவித்து உண்மையில் நான் சந்தோஷமுள்ளவளாயிருக்கக் கற்றிருப்பேன்; நீயும் அப்படித்தான் இருப்பாய், உண்மையில் எனக்குன்மீதிருக்கும் பட்சம் எங்ஙனம் நற்குணத்தோடு கூடியிருக்கிறதோ, அங்ஙனமே உனக்கு என்மீதுள்ள பட்சமும் இருக்குமாயின்.

ரா. சரி, என்னுடைய துர்ப்பாக்கிய ஸ்திதியை மறந்து, உன்னுடைய நல்ல ஸ்திதியைக் கண்டாவது நானும் உளம் மகிழ்ந்திருக்கிறேன்.

சு. என்னையன்றி என் தந்தைக்கு வேறு சந்ததியில்லையென்பது உனக்குத் தெரிந்த விஷயமே; இனி அவருக்கு வேறு சந்ததி யுண்டாகுமென்பதும் துர்லபம். உண்மையில் அவருக்குப் பிற்காலம் இந்த ராஜ்யம் உன்னுடையதே; ஏனெனில் துன்ப வழியாய் உன் தந்தையிடமிருந்து அவர் அபகரித்துக் கொண்ட ராஜ்யத்தை அன்பு வழியாக நான் உனக்குத் தருவேன், ஆணைப்படி தருவேன். இந்த ஆணையினின்றும் நான் தவறுவேனாயின் அந்த அரு நரகில் நான் விழக்கடவேன். ஆகவே, கண்ணே, ராஜீவா, என் கண்ணல்ல, சந்தோஷமாயிரு.

ரா. இனிமேல் அப்படியே யிருக்கிறேன்-தங்காய், இனிவேடிக்கையாகப் பொழுது போக்க யுக்தி செய்கிறேன்; ஏதோ பார்க்கலாம்; காதல் கொள்வதைப்பற்றி என்ன நினைக்கிறாய்?

சு. ஆம், நான் வேண்டுகிறேன் அப்படியே செய்; அதைக் கொண்டு விளையாடுவோம்; ஆயினும் ஒருவன்மீதும் உண்மையில் காதல் கொள்ளலாகாது; வேடிக்கையைத் தரும் விநோதமாகக் கொள்வதிலும், உனது மானத்திற்கு மருள்



ஒன்றின்றி உன்னை மீட்டுக்கொள்ளும்படியிருக்கவேண்டும்.

ரா. ஆனால், வேறெதைப்பற்றி விளையாடுவோம்?

சு. நாம் உட்கார்ந்து, உத்தமியாகிய அதிர்ஷ்ட லட்சுமியை உலகத்திலுள்ளவர் எல்லோரையும் ஒரே கண்ணாய்ப் பார்க்கும் பொருட்டு ஏளனம் செய்வோம்.

ரா அங்ஙனம் செய்யவேண்டுமென்பதுதான் என் கோரிக்கையும்; அந்தப் பதிவிரதைக்குப் பாத்திரம் அறிந்து பிச்சையிடத் தெரிகிறதில்லை: அதிலும் ஆடவர்களுக்குக் கொடுப்பதிற்றான் தயாள குணமுடைய அந்த அம்மாளுக்குக் கண்ணே தெரிகிறதில்லை.

சு. அது உண்மைதான்; கட்டழகைக் கொடுக்குமிடத்து அதற்கேற்ற கற்பினைக் கொடுப்பதில்லை; அக் கற்பினைக் கொடுக்குமிடத்தோ அவலட்சணத்தையுங்கூட கொடுக்கிறாள்.

ரா. அன்று, அதிர்ஷ்ட லட்சுமியின் வேலையைப்பற்றி பேசுவதை விட்டு சுபாவத்தின் வேலையைப்பற்றி பேசப்போகிறாய் இப்பொழுது. அதிர்ஷ்டத்தின் மாட்சிமை உலகில் ஐஸ்வர்யத்தைக் கொடுப்பதாகும், சுபாவத்திற்குரிய அழகினைக் கொடுப்பதிலன்று.

சு. அப்படியல்ல, சுபாவமானது ஒரு அழகியைச் சிருஷ்டித்தால், அவள் அதிர்ஷ்டவசத்தால் அக்கினியில் விழலாகாதா?—சுபாவமானது நாம் அதிர்ஷ்டத்தை அவமதித்துப் பேச அறிவினைக் கொடுத்திருந்தபோதிலும், அதிர்ஷ்டமானது நமது தர்க்கத்தைத் தடுத்திட, இந்த அறிவிலியை அனுப்பவில்லையா?

அர்சுதன் வருகிறான்.

ரா இவ் விஷயத்தில் அதிர்ஷ்டமானது சுபாவத்தின்மீது அதிக குரூரமாயிருக்கிறது, ஏனெனில் அதிர்ஷ்டமானது,

சுபாவத்திற்குச் சொந்தமான இவனைக்கொண்டு நமக்குச் சுபாவமான புத்தியைத் தடுக்கிறதே.

சு. ஒருவேளை இது அதிர்ஷ்டத்தின் வேலையா யில்லாது, சுபாவத்தின் வேலையா யிருக்கலாம் ; ஏனெனில் அப்படிப்பட்ட தேவதைகளைக் குறித்துப் பேச நமது சுபாவமான புத்தி தக்கபடி கூர்மையா யில்லையெனக் கண்டறிந்து, சாணையிலிட்டதுபோல அதனைக் கூராக்குவதற்காக, அனுப்பித்திருக்கலாம் இவனை ; ஏனெனில் எப்பொழுதும் மடயனுடைய மடத்தனம் புத்திசாலியின் புத்தியை சாணையிலிட்டதுபோல் கூராக்குகிறது.—அப்பா, புத்திசாலி, எங்கே திரிகிறா யிப்படி ?

அச். அம்மணி, தாங்கள் தங்களுடைய தகப்பனாரிடம் வந்து சேரவேண்டும்.

சு. அதற்காக உன்னைத் தூது அனுப்பினாரா ?

அச். இல்லை, என் ஆணைப்படி ; போய் உங்களை அழைத்துவரும்படி சொன்னாரெனக்கு.

ரா. இந்த ஆணையை யெங்கே கற்றாய், அப்பா ?

அச். ஒரு பெரிய மனுஷ்யரிட மிருந்து ; அவர் என்ன செய்தார், தன் பிள்ளையின்மீது ஆணைப்படி, தோசை நன்றா யிருந்ததாகவும், அதன் துவையல் நன்றாயில்லை யென்றும் சத்தியம் செய்தார் ; ஆயினும் நான் ஸ்தாபித்தபடி, தோசை நன்றா யில்லை, துவையல் நன்றா யிருந்தது ; அப்படி யிருந்தும் அவர் ஆணைபிசக வில்லை.

சு. உனது அறிவின் குவியலில் அதனை எப்படி ரூபிக்கிறாய் ?

ரா. ஆம், உண்மையில் உனது வாய்ப் பூட்டினைத் திறந்து உனது புத்தியை வெளியே விடு.

அச். ஏதோ கொஞ்சம் நீங்கள் இரண்டு பெயரும் சரியாக நில்லுங்கள் ; நின்று உங்கள் மீசைகளை முறுக்கி, நான் ஒரு

போக்கிரி யென்று சத்தியம் செய்யுங்கள், பார்ப்போம்.

சு. எங்களுக்கு மீசை மாத்திர மிருந்தால் அப்படித்தா னென்று சத்தியம் செய்வோம்.

அச். என்னிடம் போக்கிரித்தன மிருந்தால் அது வாஸ்தவம் என்று ஒப்புக்கொண் டிருப்பேன். ஆயினும் நீங்க ளில்லாததைக் கொண்டு சத்தியம் செய்தால், நீங்கள் அசத்தியவாதிகளல்ல. அப்படியே தன் பிள்ளையின்மீது ஆணையிட்டுச் சத்தியம் செய்த அந்தப் பெரிய மனுஷ்யரும் பொய் பேசவில்லை; ஏனெனில் அவருக்குப் பிள்ளையே கிடையாது; அப்படியேதாவது பிள்ளை பிறந் திருந்தாலும், அந்தத் தோசையையும் துவையலையும் அவர் பாராததற்கு முன்பாகவே பொய் சத்தியம் செய்து பரலோக மனுப்பி யிருக்கவேண்டும்.

சு. உண்மையைக் கூறு, யாரைச் சுட்டிப் பேசுகிறாய் ?

அச். பிரதாபதீர மஹாராஜாவாகிய உம்முடைய தந்தை அன்பு வைத்திருக்கும் ஒருவரைப்பற்றிதான்.

சு. என் தந்தை அன்பு வைத்திருந்தால் அந்த மரியாதையே அவருக்குப் போதுமானது. நீ அவரைப்பற்றி அதிகமாய்ப் பேசாதே; பேசுவையானால் என்றைக்காவது ஒரு நாள் தக்கபடி பூசை கிடைக்கும் உனக்கு.

அச். என்ன அநியாயம்! புத்திசாலிகள் மடத்தனமாகச் செய்யலாம், அதை மடயர்கள் புத்திசாலித்தனமாக எடுத்துக் கூறக்கூடாது.

சு. வாஸ்தவமாய் நீ கூறுவது உண்மைதான். மடயர்களுக் கிருக்கும் கொஞ்சம் புத்தியானது மழுக்கப்பட்டபின், புத்திசாலிகளுக் கிருக்கும் சிறிது மடத்தனமானது வெகு ஆடம்பரமாய்க் காட்டுகிறது.—இதோ வருகிறார் லாவண்யர்.

ரா. வாய் நிரம்ப சமாசாரத்துடன்.

சு. காக்கைகள் குஞ்சுகளுக்கு உண்பிப்பதுபோல் நமக்கு அதை ஊட்டுவார்.

ரா. ஆயின் நாம் விஷயம் நிரம்பினவர்களாவோம்.

சு. நல்லதாயிற்று மிகவும், நல்ல விலை போவோம் ஆனால்.

லாவண்யன் வருகிறான்.

சுதினம் லாவண்யரே, என்ன விசேஷம்?

லா. அழகிய அம்மணி, வெகு வேடிக்கை! நீங்கள் பார்க்காமற் போய் விட்டீர்களே!

சு. வேடிக்கையா? அது என்ன வர்ணமாயிருக்கும் அந்த வேடிக்கை?

லா. என்ன வர்ணமா என்று கேட்டீர்கள் அம்மணி? உங்களுக்கென்ன பதில் உரைப்பது?

ரா. சொல்லுமே, உம்முடைய ஆடையைப்போல் வெண்மையாயிருக்குமா? உம்முடைய மீசையைப்போல் கறுப்பாயிருக்குமா? உம்முடைய மோதிரத்தைப்போல் சிகப்பாயிருக்குமா?

அச். அல்லது உம்முடைய உயரம்போல் நெட்டையா, தடியைப்போல் குட்டையா, தலையைப்போல் மொட்டையா, முகத்தைப்போல் சொட்டையா, சொல்லும்?

ரா. அல்லது இவனைப்போல் கட்டையா?

லா. ராஜகுமாரிகளே, நீங்கள் சொல்லுவது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. நான் சொல்லவந்தது,—மல் யுத்தத்தைப் பற்றி, அதை நீங்கள் பார்க்காமற் போனீர்களே—வெகு வேடிக்கை!

ரா. என்ன மல் யுத்தம்? அதைப்பற்றி இனியாவது சொல்லும்.

லா. நான் அதன் ஆரம்பத்தைச் சொல்லுகிறேன். முடிவு இருக்கிறதே அதுதான் ஒரு வேடிக்கை! உங்களுக்கு இஷ்டமிருந்தால் அதை நீங்கள் நேராகப் பார்க்கலாம். முக்கியமான



கடைசி யுத்தம் இன்னும் முடியவில்லை. இங்கேதான், நீங்களிருக்குமிடம், கடைசி மல் யுத்தம் புரிய வருகிறார்கள். வெகு வேடிக்கையாயிருக்கும்.

சு. வெகு வேடிக்கையிருக்கட்டும். அந்த பாழாய்ப்போன சமாசாரத்தைச் சொல்லுங்கள்.

லா. சொல்லட்டுமா?

சு. ஆரம்பியும். ஒரே ஒரு ஊரிலே—

லா. ஒரு கிழவன். அவனுக்கு மூன்று பிள்ளைகள்—

அச். பார்த்தீர்களா? அதுதான் ஒரு வேடிக்கை! கிழவனுக்கு மூன்று பிள்ளைகளென்றால்!

லா. மூன்று பெயரும் நல்ல யௌவனமுடையவர்கள், பலாட்டியாள். முதலில் மூத்தவன் நம்முடைய அரண்மனைமல் யுத்தக்காரன் சாரளனுடன் போர் செய்தான். அந்த சாரளன் ஒரு நிமிஷத்தில் அவனைத் தோற்கடித்து அவனுடைய விலா எலும்பு மூன்றையொடித்தான். ஆகவே அவன் பிழைப்பது மிகவுங் கடினம். இரண்டாவது பிள்ளையையும் அப்படியே தோற்கடித்தான். அப்படியே மூன்றாவது பிள்ளையையும். அதோ கிடக்கிறார்கள் அவர்கள். கிழவனான அவர்களுடைய தகப்பன் இதைக் கண்டு கோவென்று கதறி அழுதுகொண்டிருக்கிறான்; அதைக் கண்டு பரிதாபப்பட்டு எல்லோரும் அந்தத் தகப்பனுடன் விசனப்படுகிறார்கள். வெகு வேடிக்கை!

ரா. ஐயோ, பாவம்!

அச். அதிருக்கட்டும் ஐயா, ராஜ குமாரிகள் பார்க்காமற்போன வெகு வேடிக்கை என்ன ஐயா, அது?

லா. ஏன், இப்பொழுது சொன்னேனே, அதுதான்.

அச். இப்படித்தான் மனிதர்கள் வரவர புத்திசாலிகளாகிறார்கள். விலா எலும்பை ஒடிப்பது ராஜகுமாரிகள் பார்க்கத் தகுந்த

வேடிக்கை என்று இப்பொழுது தான் நான் கேட்டறிந்தேன் முதல் முதல்.

சு. நானும் அப்படியே, உண்மையில்.

ரா. அது போனால் போகட்டும்.—தன் விலா எலும்பு ஒடியும் வேடிக்கையைக் காணவேண்டுமென்று விரும்புவோன் வேறு எவனாவது உள்ளனா? அந்தமாதிரி ஆகவேண்டுமென்று ஆசைப்படுபவன் யாராவது உண்டா இன்னும்?—தங்காய், இந்த மல் யுத்தத்தை நாம் பார்க்கலாமா?

லா. நீங்களிங்கேயே யிருக்கும் பக்ஷத்தில் பார்க்க வேண்டியது தான் இதுதான் கடைசி மல் யுத்தத்திற்குக் குறிக்கப்பட்ட இடம்; அதை முடித்திட அவர்களெல்லாம் சித்தமா யிருக்கிறார்கள்.

சு. ஏதோ எல்லோரும் வருகிறார்கள். இங்கேயே யிருந்து பார்ப்போம் அதை.

வாத்யகோஷம்.

பிரதாபதீரன், மந்திரிகள், அமரசிம்ஹன், சாரளன்,

சேவகர்கள் வருகிறார்கள்.

பி. சரி, வாருங்கள்! சொல்லியுங் கேட்காவிட்டால் அவன் துணிவுக்குத் தக்கபடி கஷ்டம் அனுபவிக்கட்டும்.

ரா. அதோ நிற்கும் மனிதனா?

லா. ஆம், அம்மணி; அவன் தான்.

சு. ஐயோ, பாவம்! மிகவும் இளம் பருவம்! ஆனால் பார்க்கக் காம்பீரமாகத்தான் காண்கிறான்.

பி. என்ன இது? சுசீலா, ராஜீவா, மல் யுத்தம் பார்க்கவா மெல்ல வந்தீர்க ளிங்கே?

ரா. ஆம், மஹாராஜா; நாங்கள் பார்ப்பதற்கு உத்தரவு கொடுக்க வேண்டும்.



பி. இது உங்களுக்கு அவ்வளவு வேடிக்கையா யிராது என்று நான் கூறவேண்டும்; இரண்டு பெயருக்கும் அவ்வளவு பேத மிருக்கிறது. எதிர்ப்பவனுடைய இளம் பருவத்தைக் கருதி என்னா லியன்ற அளவு வேண்டாமென்று தடுத்துப்பார்த்தேன், அவன் கேட்பதைக் காணோம்; நீங்கள் வேண்டினால் ஒருவேளை இசைவானோ என்னவோ, அவனுடன் பேசிப் பாருங்கள் நீங்கள்.

சு. ஐயா, லாவண்யரே, அவரை யிங்கே கூப்பிடுங்கள்.

பி. பேசிப்பாருங்கள். நான் ஒரு பக்கமாகப் போய் இருக்கிறேன்.

[ஒருபுறம் போகிறான்.]

லா. ஐயா, உம்மை ராஜ குமாரிகள் காணவேண்டி அழைக்கிறார்கள்.

அ. இதோ, என் கடமைப்படி மரியாதையுடன் காண்கிறேன் அவர்களை.

ரா. ஐயா, வாலிபனே, நீர் சாரளனை மற்போருக் கழைத்தீரா?

அ. அழகிய ராஜகுமாரி, அப்படி யன்று. அவன்தான் யார் வந்தபோதிலும் எதிர்ப்பதாக வீரம் கூறியிருக்கிறான். மற்றவர்களைப்போல் வந்திருக்கிறேன் நானும், அவனை எதிர்த்து என் யௌவனத்தின் பலத்தைப் பார்த்திட.

சு. ஐயா, உமது சௌர்யத்திற்குத் தகுந்த தேக வளர்ச்சி யுமக்கில்லை. இந்த மனிதனுடைய பலத்தின் குரூரமான திறத்தை நேரிற் கண்டிருக்கிறீர். உமது கண்களைக்கொண்டு உம்மையே காணக் கூடுமாயின், அல்லது உமது புத்தியைக் கொண்டு உம்மையே நீர் அறிவதானால், இந்தச் சாகசத்தின் பயமானது உமக்கு ஈடானவர்களுடன் நீர் யுத்தம் செய்யும்படி உமக்குப் போதிக்கும். உமது நலத்தைக் கோரியே, உம்மைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு இதை விட்டுவிடும்படி உம்மை வேண்டுகிறோம்.

ரா. அங்ஙனமே செய்யும், ஐயா வாலிபனே, அப்படிச் செய்வதினால் உமது சௌர்யமானது ஈனமாக மதிக்கப்படாது. மஹாராஜாவிடம் நாங்கள் வேண்டி இந்த மல் யுத்தம் இனிமேல் நடக்காதபடி நிறுத்திவிடுகிறோம்.

அ. உங்களை நான் வேண்டிக்கொள்கிறேன்; உங்களுடைய கடினமான எண்ணங்களால் என்னைத் தண்டியாதீர்கள். உத்தம அரசிளங் குமரிகளாகிய உங்களுடைய வேண்டுகோளை நான் மறுப்பது பெரும் பிழைதான் என்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நான் இந்தப் பரீட்சையில் வெற்றி பெறும்படி உத்தமிகளாகிய நீங்கள் உமது மன தார வாழ்த்துங்கள். நான் இதில் தோல்வி யடைந்தால் துர் அதிர்ஷ்டமுடைய ஒருவன் அவமானப் பட்டதாகும். மடிந்தாலோ மடியச் சித்தமா யிருக்கிறவன் ஒருவன் மடிந்த தாகும். என் சிநேகிதர்களுக்கு நான் ஒரு கஷ்டமும் வைக்கமாட்டேன், ஏனெனில் எனக்காகத் துக்கப்படக்கூடியவர்கள் ஒருவருமில்லை. உலகத்திற்கும் ஒரு கெடுதி செய்யமாட்டேன், ஏனெனில் அதில் எனக் கொன்றும் இல்லை. இருப்பது பூமி பாரம்; இதைவிட்டுப் போவே னாயின் அந்தப் பாரம் நீங்கும்; அவ்வளவுதான்

ரா. எனக் குள்ள சிறிது பலமும் உமக் குதவியாய் இருக்குமாக.

சு. அதற்குத் துணையாக என் பலமும் சேருமாக.

ரா. ஐயா,—போய்வாரும்; ஜகதீசன் உமக்கு வெற்றி யளித்து, நான் எண்ணியது தவறென ரூபிப்பாராக!

சு. போய்வாரும், உமது மனோபீஷ்டம் பூர்த்தி யாகுமாக!

சா. எங்கே? தன் தாயா ரான மண்ணிடம் மறுபடியும் போய்ச் சேரவேண்டுமென்று அதிக ஆவல் கொண்டிருக்கிற பிள்ளையாண்டான் எங்கே?

அ. சித்தம், ஐயா. ஆயினும் அந்த யோசனை இதற்குள்ளாக இல்லை அவனிடம்.



பி. ஒரே முறைதான் யுத்தம் செய்யவேண்டும் நீங்கள்.

சா. அப்படியே. முதன் முறை வேண்டாமென்று தடுப்பதற்கு இவ்வளவு கஷ்டம் எடுத்துக்கொண்ட நீங்கள் இரண்டாம் முறை வேண்டும்படியான ஸ்திதியிலிருக்கமாட்டார். நான் உத்தரவாதம்.

அ. என்னைத் தோற்கடித்த பிறகு நீ என்னை ஏளனம் செய்ய யோசிக்கிறாய்; ஆகவே அதற்குமுன் ஏளனம் செய்வது நியாமல்ல. ஆரம்பி உன் வேலையை.

ரா. இந்த இளைஞருக்குப் பீமனே வந்து உதவி புரிவானாக!

சு. கண்ணுக்குத் தெரியாமல் நான் இருக்கக்கூடுமாயின் இந்தத் தடியன் காலைப் பிடித் திழுத்துவிடுவேன்.

[அமரசிம்ஹனும் சாரளனும் குஸ்தி. பிடிக்கிறார்கள்.]

ரா. ஓஹா! என்ன உத்தம னான வாலிபன்!

சு. இடியைத் திடீரென்று கீழே விழச்செய்யும்படியான சக்தி என் கண்களுக் கிருக்குமாயின், யார் கீழே விழுவார்கள் என்று சொல்லிவிடுவேன்.

[சாரளன் தோற்கடிக்கப்படுகிறான்; பெருங்கூச்சல்.]

பி. போதும், போதும்.

அ. ஆம், மஹாராஜா! தங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இன்னும் எனக்கு மூச்சு ஆறவில்லை.

பி. சாரளா, என்னவா யிருக்கிறாய்?

லா. மஹாராஜா, அவன் பேசுவது அசாத்தியம்.

பி. அவனை அப்படியே தூக்கிக் கொண்டுபோங்கள்.—

[சாரளனைத் தூக்கிக்கொண்டு போகிறார்கள்.]

அப்பா, வாலிபனே, உன் பெயர் என்ன?

அ. எம் இறையே, என் பெயர் அமரசிம்ஹன்; நான் ரணவீர பரஸ்கரருடைய கடைசி குமாரன்.

பி. சீ! நீ வேறு யாருடைய மகனாகவாவது பிறந்திருக்கலாகாதா? உலகமானது உன் தந்தையை உத்தமபுருஷனாகத்தான் எண்ணியது, ஆயினும் எப்பொழுதும் எனக்குப் பகைவனாகவே அவரை நான் கண்டேன். இந்த சாகசம் செய்ததற்கு வேறு வம்சத்தில் உதித்தவனாயிருந்தால் எனக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்திருப்பாய்; போய் வா நீ; தைரியசாலிதான் நீ, தவறில்லை, உன் தந்தை வேறொருவன் என்று எனக்கு உரைத்திருப்பையாயின் நான் சந்தோஷப்பட்டிருப்பேன்.

[பிரதாபதீரன் லாவண்யன் அச்சுதன் பரிஜனங்கள் போகிறார்கள்.

சு. ராஜீவா, நான் என் தகப்பனாராயிருந்தால் இப்படிச் செய்வேனா?

அ. ரணவீரருடைய மகனாய்—கடைசி மைந்தனாய்—பிறந்தது எனக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கிறது. அப்பெயரைமாற்றி பிரதாபதீரருடைய ஸ்வீகார புத்திரனாவதற்கும் விரும்பேன் நான்.

ரா. என் தந்தை ரணவீரரைத் தன் உயிரெனப் பாவித்து அவரிடம் பிரியம் வைத்திருந்தார்; உலக முழுவதும் அவர் எண்ணியதுபோலவே எண்ணியது; இவர் ரணவீரருடைய மைந்தனென்பதை முன்பே நான் அறிந்திருந்தால், இந்த சாகசத்திற்கு அவர் துணிவதன்முன், வார்த்தைகளால் வேண்டியதுடன் கண்களினால் நீர் சொரிந்திருப்பேன்.

சு. கண்ணே, ராஜீவா, நாமாவது அவரிடம் சென்று அவரது வீரத்தை மெச்சி, மனம் மகிழச்செய்வோம்; என் தந்தையின் கடுமையும் பொறாமையும் என் மனத்தைப் புண்படுத்துகிறது—ஐயா, உம்முடைய வார்த்தையின்படி ஜெயம் பெற்றீர்: இவ்விஷயத்தில் சொன்னதற்குமேல் செய்து



முடித்ததுபோல், உமது காதலிலும் உமது வார்த்தையைக் காப்பாற்றுவீராயின், உமது காதலி அதிர்ஷ்டசாலியாயிருப்பாள்.

ரா. ஐயா, [தன் கழுத்திலிருந்த ஒரு ஹாரத்தைக் கழற்றிக் கொடுத்து.] இதை என்பொருட்டு அணியும்; அதிர்ஷ்ட ஹீனமுடைய எனது கையிலில்லாத குறை ஒன்றே, இல்லாவிடின் இதைப் பார்க்கிலும் சிறந்த பரிசு உமக்குக் கொடுத்திருப்பேன்—தங்காய், போகலாமா நாம்?

சு. ஆம்,—சுந்தர குமாரா, நாங்கள் போய்வருகிறோம்.

அ. உங்களுக்கு நான் வந்தனம் செய்கிறேனென்று என்னால் சொல்ல முடியாதா? என் அறிவும் ஆவியும் என்னை விட்டகன்றன, இங்கே நிற்பதெல்லாம் உயிரும் உணர்ச்சியுமில்லாத வெறுங் கட்டையே.

ரா. நம்மை அழைக்கிறார் திரும்ப, என் அதிர்ஷ்டத்துடன் என் நாணமும் என்னை விட்டகன்றது; என்ன வேண்டுமென்று அவரைக் கேட்டு வருகிறேன்.—ஐயா, அழைத்தீரா நீர்? ஐயா, நீர் நன்றாய் மல் யுத்தம் புரிந்தீர், நீர் ஜெயித்தது உமது பகைவரைமாத்திரம் அன்று.

சு. நாம் போகலாமா, அக்காள்?

ரா. இதோ வந்துவிட்டேன்—நான் வருகிறேன்.

[சுசீலையும் ராஜீவாட்சியும் போகிறார்கள்.]

அ. என்ன காரணத்தினால் என் நா எழாதபடி என் வாயானது பூட்டப்பட்டதே? அவளுடன் பேச வாய் திறக்கவும் முடியாமற்போயது; நான் ஏதாவது பேசுவேனென்று என்னருகில் அவள் வந்தபோதிலும்.— ஐயோ! அமரசிம்ஹா, அமரசிம்ஹா, ஜெயிக்கப்பட்டாய், ஜெயிக்கப்பட்டாய்! மும்மதத்து மொய்ம்பனாகிய மல் யுத்தனை வென்ற நீ, அநிச்சமனைய மெல்லியலாள் அங் கண் பார்வையால் ஜெயிக்கப்பட்டாய், ஜெயிக்கப்பட்டாய்!

மறுபடியும் லாவண்யன் வருகிறான்.

லா. ஐயா, நேச மார்க்கத்தில் இவ்விடத்தை விட்டு வரும்படியாக உமக்குப் புத்திமதி கூறுகிறேன். எல்லோருடைய நன்கு மதிப்பையும், அன்பையும், புகழ்ச்சியையும் பெற்றபோதிலும், மஹாராஜாமாத்திரம், நீர் செய்ததை யெல்லாம் மாறுகக் கொள்ளுகிறார்; அவர் தற்காலத்திலிருக்கும் ஸ்திதி அப்படிப்பட்டது. அவர் குணம் ஒரு மாதிரியானது. அவர் எப்படிப்பட்டவர் என்பதை நான் வாய்விட்டுச் சொல்வதை விட நீரே ஊகித் தறிவது மேலாகும்.

அ. ஐயா; உமக்கு வந்தனம் செய்கிறேன்; ஆயினும் ஒரு வார்த்தை எனக் குரைக்கும்படி வேண்டுகிறேன் உம்மை; இப்பொழுது இங்கிருந்து மல் யுத்தம் பார்த்த இருவரில் யார் மஹாராஜாவின் குமாரத்தி?

லா. குணத்தைக் கருதுமிடத்து, இருவரு மல்ல; ஆயினும் சிறியவளே மஹாராஜாவின் குமாரத்தி. மற்றொருத்தி காட்டிற்குத் துரத்தப்பட்ட அரசன் புதல்வி, தன் புதல்விக்குத் துணையாக அவளையும் அரண்மனையில் வைத்திருக்கிறார் அவள் தகப்பனுடைய ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்ட சிற்றப்பன். அவர்கள் ஒருவர்மீ தொருவர் பாராட்டும் அன்பு உடன் பிறந்த அக்காள் தங்கைகளுக்கு மிராது. ஆனால் ஒரு விஷயம் உமக்குக் கூறுகிறேன்; கொஞ்ச காலமாக மஹாராஜாவுக்குத் தன் தமயன் குமாரத்தியின்மீது வெறுப்பு உண்டாயிருக்கிறது; இதற்கு வேறொரு காரணமு மில்லை; ஜனங்களெல்லாம் அவளது நற்குணத்தை மெச்சி, அவளது நற்றந்தையின்பொருட்டு மிகுந்த பட்ச முள்ளவர்களா யிருக்கிறார்கள் அவள் விஷயத்தில், என்பதுதான். என் னுயிர்மீதாணைப்படி, என்றைக்காவ தொரு நாள் அவருக்கு இப்பெண்ணின்மீது இருக்கும் இந்த வெறுப்பு திடீரென்று வெளிப்படுமென்று எண்ணுகிறேன். ஐயா, நீர் போய்வாரும்.



இந்தப் பாழும் ஊரி லில்லாது வேறெவ்விடத்திலாவது சந்தித்தால் உம்மை நன்று யறிந்து உமது அன்பைப் பெற விரும்புவேன் நான்.

அ. ஐயா, நான் உமக்கு மிகவும் கிருதக்ஞனா யிருக்கிறேன்; வாரும். [லாவண்யன் போகிறான்.]

இங்ஙனம் நான் உலையினின்றும் தீயில் விழவேண்டும்; கொடுங் கோன் மன்னனிடமிருந்து கொடிய அண்ணனிடம் போகவேண்டும்:—ஆயினும், என் ஆருயிராம் அணங்கே, ராஜீவாட்சி! [போகிறான்.]

காட்சி முடிகிறது.

---

## மூன்றாவது காட்சி.

இடம்:—அரண்மனையி லோர் அறை.

ராஜீவாட்சியும், சுசீலையும் வருகிறார்கள்.

சு. என்னடி, ராஜீவா, நான் கூப்பிடுகிறேன், ஸ்வாமி நம்மை ரக்ஷிப்பாராக! ஒரு வார்த்தையும் பேசமாட்டாயா?

ரா. நாயின்மீது விட்டெறியவும் என்னிடம் ஒரு வார்த்தை யில்லை.

சு. இல்லை, உன் விலையிலா வார்த்தைகள் நாய்களின்மீது விட்டெறியத் தக்கன வல்ல, அவைகளில் சிலவற்றை என்னிடம் எறி. வா, இப்படி யிருப்பதற்கு உன் நியாயங்களை யெல்லாம் என்மீது சுமத்தி என்னை முடமாக்கு.

ரா. ஆயின் நம் மிருவரையும் வைத்தியனிடம் அனுப்பவேண்டியது தான், ஒருத்தி நியாய மதிகமாய்ச் சுமந்து முடமானதற்காகவும், மற்றொருத்தி நியாயமே யின்றி பயித்தியம் பிடித்ததற்காகவும்.

சு. அது இருக்கட்டும். இந்தத் துக்கமெல்லாம் உன் தந்தைக்காகவா?

ரா. இல்லை, கொஞ்சம் என் தங்கையின் பெண்ணுக்காக,—ஈசனே! இந்த உலகமெல்லாம் என்ன முள்ளங் காடா யிருக்கிறது!

சு. அக்காள், இவைகளெல்லாம் முட்களல்ல, நாயுருவிகள்; வேடிக்கைக்காக உன்மீது விசி யெறியப்பட்டன; நடந்து தேய்ந்த பாதைகளில் நாம் நடக்காவிட்டால் இவைகளெல்லாம் நமது ஆடைகளிலேயே ஒட்டிக்கொள்ளும்.

ரா. உடையி லிருந்தால் இவைகளை உதறிவிடுவேன். இவைகள் என் ஹிருதயத்தி லிருக்கின்றன.

சு. வெளியில் பிடித்துத் தள்ளிவிடு.

ரா. என்னால் முடியும் விஷயமானால் முயன்று பார்ப்பேன்.

சு. வா, வா; உன்னைப் பிடிக்கும் இவைகளுடன் மல் யுத்தம் புரிந்துபார்.

ரா. நான் என்ன செய்வேன்! என்னைப்பார்க்கிலும் பல முடைய மல்லர் கையிற் பட்டு என் மனம் தத்தளிக்கிறதே.

சு. ஹா! நல்ல யோசனை! ஒரு முறை தவறிப்போனாலும் மறு முறை திமிறிப் பார்!—இந்த வேடிக்கைகளையெல்லாம் ஒரு புறம் ஒதுக்கிவிட்டு இனி வாஸ்தவமாய்ப் பேசுவோம். ராஜீ வா, ரணவீரருடைய கடைசிமைந்தன்மீது கண்டவுடன் திடீரென்று நீ காதல் கொள்ளும்படி எங்ஙனம் சாத்ய மாச்சுது?

ரா. என் தந்தை மஹாராஜா, அவர் தந்தையை உயிரெனப் பாவித்தா ரல்லவா?

சு. ஆகவே நீ அவருடைய பிள்ளையை உன் உயிரெனப் பாவிக்க வேண்டுமோ? அந்த நியாயப் பிரகாரம், என் தந்தை அவர் தந்தையின்மீது மிகவும் துவேஷம் வைத்தார்; ஆகவே, நான் அவர்மீது துவேஷம் வைக்கவேண்டும், அல்லவா? ஆயினும் நான் அப்படித் துவேஷம் வைக்கிறேனா அமரசிம்ஹர்மீது?

ரா. இல்லை, உண்மையே; தங்காய், என்பொருட்டு அவர்மீது துவேஷம் வையாதே.



ஏன் வைக்க லாகாது நான்? நான் அப்படிச் செய்வதற்குத் தகுந்த பாத்திர மல்லவா அவர்?

ரா. அதற்காகவே நான் அவர்மீது அன்பு வைக்கிறேன். நான் அன்பு பாராட்டுங் காரணத்தைக் கொண்டு, நீ அவர்மீது அன்பு வைப்பாய்.—இதோ பார், மஹாராஜா வருகிறார்.

சு. கண்கள் நிரம்ப கோபத்துடன்.

*மந்திரிகள் புடை சூழ பிரதாபதீர மஹாராஜன் வருகிறான்.*

பி. ராஜீவாட்சி, உன்னால் எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு விரைவினில், என்னுடைய அரண்மனையை விட்டு உடனே வெளியே போகவேண்டும் நீ.

ரா. யார்? நானா அண்ணா?

பி. ஆம், நீதான். இன்னும் பத்துத் தினங்களுக்குள்ளாக என் அரண்மனைக்கு ஆறு காதத்திற்கு அருகாமையில் அகப்படுவாயாயின் நீ மரிக்கவேண்டியதுதான் அதன்பொருட்டு.

ரா. மஹாராஜா, உம்மை வேண்டிக்கொள்கிறேன், நான் என்ன தப்பிதம் செய்தேனென்பதை நான் அறியும்படி செய்யும்; சிற்றப்பா, என்னிடம் அறிவென்ப திருப்பதானால், என் இச்சையை நா னறிந்திருந்தால், நா னிப்பொழுது கனவு காணாவிட்டால், எனக்குப் பயித்தியம் பிடித்திராவிட்டால்—அப்படி யில்லையென்று நான் நம்புகிறேன்—மனத்தில் உதித்திடும் எண்ணத்திலும் நான் உமது சந்நிதானத்திற்குத் துரோகம் கருதினவ ளல்லவே.

பி. இப்படித்தான் எல்லாத் துரோகிகளும் மேலுக்குப் பேசுவார்கள்; கூறும் வார்த்தையைக் கொண்டு குற்ற மின்மையை நிர்ணயிப்பதானால், இவ்வுலகில் குற்றவாளிகளெல்லாம் குணவான்களே! உன்னிடம் எனக்கு நம்பிக்கை யில்லை, அந்த ஒரு காரணமே போதுமானது உனக்கு.

ரா. ஆயினும் நீர் என்னிடம் நம்பிக்கை வையாதது என்னை உமக்குத் துரோகி யாக்குமோ? இவ்வாறு இருக்கக் கூடுமென்று எதைக் கொண்டு எண்ணினீர், என்னிடம் கூறும்.

பி. நீ நின் தந்தையின் மகள்; அக் காரண மொன்றே போதும்.

ரா. என் தந்தையின் ராஜ்யத்தைத் தாம் கைப்பற்றிய காலத்தும் அவரது மகளாகத்தானே இருந்தேன் நான். தாங்கள் அவரை யருங் காட்டிற்கு ஓட்டிய காலத்தும் அவரது மகளாகத்தானே யிருந்தேன் நான். அரசே, துரோகமானது தந்தையினிடமிருந்து ஒரு தையல் சுபாவத்தில் பெறுங் குண மல்லவே, அல்லது நமது நண்பரிடமிருந்து அக்குணத்தை நாம் வகிப்பதாயினும், அதனால் எனக்கென்ன? என்னுடைய தந்தை யுமக்குத் துரோகஞ் செய்யவில்லையே! ஆகவே, மஹாராஜா, என் ஏழ்மையானது என்னைத்துரோகியாக்குமென் றெண்ணி என்மீது நவமான சந்தேகங் கொள்ளாதீர்.

சு. என் அருமையாம் அரசே, நான் சொல்வதைச் சற்றே கேளும்.

பி. ஆம், சுசீலா, உன்பொருட்டே இவளை யிதுவரையில் இவ்வரண்மனையில் வசிக்கவிட்டது. இல்லாவிட்டால் அப்பொழுதே யிவள் தந்தையுடன் இவளையுந் துரத்திவிட் டிருப்பேன்.

சு. அந்தச் சமயத்தில் இவள் இங்கிருக்கட்டுமென்று நான் வேண்ட வில்லையே; நீராக இச்சைப்பட்டு பச்சாத்தாபங் கொண்டு இருக்கச்செய்தீர். அக்காலம் நான் அவளது அரிய குணத்தை நன்றா யறியாதபடி சிறியவளா யிருந்தேன்; இப்பொழுதோ அவளது நற்குணத்தை நன்றா யறிந்தேன். அவளை நீர் துரோகியென வெண்ணினால், என்னையும் அப்படியே யெண்ண வேண்டியதுதான்; ஒரே காலத்தில் நாங்கள் எப்பொழுதும் உறங்கினோம், ஒரே காலத்தில் எழுந்திருந்தோம், ஒரே காலத்தில் உண்டோம், ஒரே காலத்தில்



விளையாடினோம், ஒரே காலத்தில் படித்தோம்; நாங்கள் எங்கு சென்றபோதிலும், ஒன்றைவிட் டொன்று பிரியாத கின்னர மிதுனங்களைப்போல் ஜோடியாய்ப் பிரியாது சென்றோம்.

பி. சுசீலா, அவள் திருட்டுக் குணம் உனக்கொன்றும் தெரியாது. அவள் ஒன்றும் பேசாமல், மௌனமாயிருந்து எல்லாவற்றையும் பொறுத்திருப்பதே, ஜனங்களை அவள்மீது பரிதாபப்பட்டு பட்சம் பாராட்டும்படி செய்கிறது. நீதான் பயித்தியக்காரி! அவள் உனது நற் பெயரை அபகரிக்கிறாள். அவள் ஒழிந்தால்தான், நீ நன்றாய்ப் பிரகாசித்து உன்னுடைய நற் குணங்களெல்லாம் அதிகமாய் விளங்கும். ஆகவே, வாயைத் திறவாதே. நான் அவளுக்குச் செய்த ஆக்கினையை ஹரிஹரப் பிரம்மாதிகள் வந்தாலும் மாற்ற மாட்டேன்.—அவள் இந் நாட்டை விட்டுப் போகவேண்டியதுதான்.

சு. ஆனால், மஹாராஜா, அந்தத் தண்டனையை யெனக்கும் விதியும்; அவளைப் பிரிந்து அரை க்ஷணமும் அவனியில் ஆவியோ டிரேன்.

பி. நீ ஒரு பைத்தியக்காரி.—ராஜீவாட்சி, நீ புறப்படச் சித்தஞ் செய். நான் குறித்த தவணைக் கப்புறம் தங்கியிருப்பாயாயின், என் அரசின்மீது ஆணைப்படி, என் ஆக்கினையை நிறைவேற்றி, உன் ஆவியைப் போக்குவேன்.

[மந்திரிகளுடன் போகிறான்.]

சு. கண்ணே, ராஜீவா, நீ யெங்கே போகப்போகிறாய்? நாம் நமது தந்தைகளை மாற்றிக்கொள்ளலாமா? என்னுடைய தந்தையை உனக்குக் கொடுத்துவிடுகிறேன். நான் சொல்வதைக் கேள், என்னைவிட அதிகமாய் நீ துக்கப்படக் காரணமில்லை.

ரா. நான் துக்கப்படக் காரணம் அதிகம் உண்டு.

சு. அக்காள், நீ அப்படியிருக்கக் காரணம் இல்லை. நான் வேண்டிக்கொள்கிறேன், சந்தோஷமா யிரு. மஹாராஜா அவர்

மகளாகிய என்னை இந்நாட்டை விட்டுத் துரத்தியிருக்கிறார் என்பதை அறியாயா நீ ?

ரா. அவர் செய்ய வில்லை அங்ஙனம்.

சு. இல்லை! செய்ய வில்லையா ? ஆயின், நீயும் நானும் ஒன்று என்பதை எனக்குக் கற்பிக்குங் காதல், உன்னிடம் சிறிது மில்லை. நாம் ஒருவரைவிட் டொருவர் பிரிவோமா ? கண்ணே, நம்மைப் பிரித்திட முடியுமா? ஒரு காலும் முடியாது, என் தந்தை தனக்கு வேறொரு மகளைத் தேடிக்கொள்ளட்டும்; ஆகவே நாம் இருவரும் எங்கே பறந்துபோவோம் என்பதை யோசிப்போம்; எங்கே செல்வது, என்னென்ன எடுத்துக்கொண்டு போவது, எல்லாவற்றையும்; இந்தத் துர் அதிர்ஷ்டத்தை நீயே தாங்க முயலவேண்டாம், என்னை விட்டுவிட்டு நீ மாத்திரம் உன்னுடைய துக்கத்தை வகிக்க வேண்டுமென்னும் எண்ணம் வேண்டாம். நமது அருந்துயரத்தைக் கண்டு அநுதாபப்படும் இந்த ஆகாயவாணியின் மீது ஆணைப்படி, நீ என்ன வேண்டுமென்றாலும் சொல், நான் உன்னுடன் எப்படியும் போவேன்.

ரா. ஐயோ! நாம் எங்கே போவது?

சு. அருங் காட்டை யடைந்து அங்கே எனது பெரிய தந்தையைத் தேடுவோம்.

ரா. ஐயோ! பெண்களாகிய நாம் அத்தனை தூரம் போவதென்றால் வழியில் நமக்கு என்னென்ன கஷ்டங்கள் நேரிடுமோ ? காசைவிடக் கட்டழகே கள்வர்களை அதிகமாய்த் தூண்டுமே.

சு. நான் எளிய ஜனங்களைப்போல் அற்பமான ஆடை யணிந்து முகத்தில் ஏதாவது வர்ணத்தைப் பூசிக்கொள்கிறேன். நீயும் அப்படியே செய். அப்படி நாம் பிரயாணம் போவோமாயின் நம்மை யொருவரும் எதிர்க்கமாட்டார்கள்.



சாதாரணமா யிருப்பதைவிட நான் கொஞ்சம் அதிக உயரமா யிருப்பதால் ஒரு ஆடவனைப்போல் நான் முற்றிலும் ஆடை தரிப்பேனாயின், நலமாயிராதா? வீரம் பொருந்திய உடைவா ளொன்று இடையிற் செருகி, காட்டுப் பன்றியை வேட்டையாடும் ஈட்டியொன்று கையிற் கொள்கிறேன்; ஹிருதயத்தில் பெண்களுக் குரிய அச்சம் எவ்வளவுதான் ஒளிந்திருந்தபோதிலும், வெளிக்கு மாத்திரம் வீரர்களுக்கு உரிய வேஷத்தை மேற்கொள்வோம் ; எத்தனைப் பயங்காளிகளான ஆடவர் வெளிக்குத் தைரியசாலிகளைப்போல் முகத்தில் காட்டி உள்ளே யிருப்பதை மறைக்கிறார்கள், அதுபோல நாமும் செய்வோம்.

சு. நீ ஆடவன் ஆனால் உன்னை நான் என்னவென் றழைப்பது ?

ரா. கோலத்திற்குத் தக்க பெயரைப் புனையவேண்டும்; ஆகவே, பத்திரம், என்னைக் கன்னிமாடனென் றழை. உன்னை நானென்னவென் றழைப்பது ?

சு. என் பெய ரென் தற்கால நிலைமைக்குப் பொருந்தியதா யிருக்க வேண்டும். ஆகவே இனி நான் சுசீலை யல்ல, நான் இனி அநலை.

ரா. ஆனால் தங்காய், உனது தந்தை யரண்மனையினின்றும் நம்முடைய விகட விதூஷகனை நம்முடன் மெல்ல அழைத்துக்கொண்டு போக முயன்றா லென்ன ? நமது வழிப் பிரயாணத்திற்கு வாய்த்த துணையா யிருக்கமாட்டானா ?

சு. உலகத்தில் எங்கு வேண்டுமென்றாலும் என்னைப் பின் தொடர்வான் அவன். அவனை அழைத்துவர வேண்டிய வேலையை என்னிடம் விட்டுவிடு. நாம் போய் நம்முடைய ஆபரணங்கள் செல்வம் எல்லாம் சேர்த்து எடுத்துக்கொள்வோம். நான் ஓடிப்போய்விட்டதாகக் கண்டவுடன் எப்படியும் எங்குந் தேட ஆரம்பிப்பார்கள்; ஆகவே அவர்கள் கண்ணிற் படாதபடி நாம் கரந்து செல்லத் தகுந்த சமயமும்

தக்க மார்க்கமும் யோசிக்கவேண்டும். போவோம் நாம் சுக மாய்! நம்மை யிந் நாட்டை விட்டுத் துரத்தவில்லை, இப் பாழுஞ் சிறையை விட்டு நாம் சுதந்தரர்களாய் விடுபட்டுப் போகிறோம்.

காட்சி முடிகிறது.

---

# இரண்டாவது அங்கம்.

## முதல் காட்சி.

இடம்—அருங் காடு.

வேடர்கள் கோலத்துடன் குலசேகர மஹாராஜன், ஹேமநாதன், இன்னும் சில மந்திரிகள் வருகிறார்கள்.

கு. ஆ! நாட்டின்கண் வாழ்வைத் துறந்து நம்மோடு இக் காட்டின்கண் வந்து வசிக்கும் நண்பர்காள், இவ் வாழ்வு, முதுமையாம் பழக்கத்தினால், வேஷ மனோ டம்பத்துடன் வாழ்வதினும், அதிக சந்தோஷத்தைத் தருகிற தல்லவா? அழுக்கா றுடைய அற்ப மந்திரிகள் மத்தியில் வாழ்வதை விட, இம் மரங்கள் மத்தியில் அபாய மின்றி வாழ்வது மேலன்றோ? வெயிலின் கொடுமையும் மழையின் குளிருமே யன்றி வேறொன்றிற்கும் இங்கு நாம் அஞ்ச வேண்டியதில்லை. குளிர்ந்த மாரிக் காலத்து மழைக் காற்றானது கடோமாய்க் கடிப்பதுபோல் என்மீது வீசி, என் னுடலைச் சிலிர்க்கச் செய்யுங்கால், நான் நகைத்து, 'இது முகஸ் துதியம்புவதன்று; இவைகள் எனது தற்கால ஸ்திதியை யெனக்குப் பரிவுடன் ஞாபகப்படுத்தும் நன் மந்திரிகள்' எனக் கூறுகிறேன். அகோரமான படு விஷ முடைய பாம்பின் தலை மீதும் மன்னர் மதிக்கும் மாணிக்க மிருப்பதுபோல், எப் படிப்பட்ட துரதிர்ஷ்டத்திலும் நமக்கு நலம் தரும் இனிய



நன்மை யிருக்கிறது. ஜனக் கவலை நண்ணா நம்முடைய இக் கானக வாழ்க்கையில், அசலமாம் விருக்ஷங்கள் அறைவன நல் வார்த்தை, ஓடும் அருவிகளும் ஓதும் அறிவு, உபயோக மற்ற கற்களும் உபதேசிக்கும் ஞானம், கண்படு மெதினுங் காணுவோம் நலம். இதைவிட்டு மாற மன மில்லை யெனக்கு.

ஹே. துரதிர்ஷ்டத்தின் கொடுமையைத் தூயதாம் இனிய நலமாக மாற்றும் ஆற்றலுடைய தமது சுகமே சுகம்!

கு. வாருங்கள், இன்றைத்தினம் நம துணவிற்கு வேண்டிய மான்களை வதைப்போம். ஆயினும் இவ் வாரண்யப் பிரதேசத்தின் சுதந்தர வாசிகளாகிய இப் பேதைப் புள்ளிமான்கள் அவைகளின் சொந்த ராஜ்யத்திலேயே, அர்த்த சந்திர பாணங்களால் தங்களுடைய வட்டமான இடைகள் சேதிக்கப்படுவது, எனக்கு வருத்தத்தைத் தருகிறது.

மு. ம. ஆம், மஹாராஜா, இதற்காக நமது சோகை பிடித்த ஜகந்நாதர் மிகவும் துக்கப்படுகிறார். இவ்விஷயத்தில், உம்மை நாட்டை விட்டுத் துரத்திய உமது தம்பியைவிட, நீர் இங்கு அதிக கொடுங் கோலாக அரசு செலுத்துவதாகச் சத்தியம் செய்கிறார். இன்றைத்தினம் நானும் ஹேமநாதரும் பின் புறமா யொளிந்து சென்று, இக் கானகத்தூடே கரைந்து செல்லும் சிற்றாற்றின் ஓரத்தில் தனது விழுதுகள்தொங்கும் தொன்மையாம் வடவால விருக்ஷமொன்றின் அடியில் படுத்திருக்கக் கண்டோம் அவரை. அப்பொழுது, அங்கு, வேடர்களின் குறியால் காயப்பட்டு வெந் துயு றடைந்து, தன் னினத்தைவிட்டுப் பிரிந்து வெருண்டோடிவந்த பேதை மா னொன்று வந்து சேர்ந்தது. அரசே, தன் சர்மமானது வெடித்துப் போவதேபோல் துரதிர்ஷ்டம்பிடித்த அப் பிராணி நெட்டுயிர்ப்பெறிந்து கதறியது; அதன் அழகிய கண்களினின்றும் கண்ணீரானது மூக்கின் வழியால் தாரைதாரையாகப் பார்த்தவர் பரிதாபப்படும்படி பெருகியது வேகமாய்;

இங்ஙனம், நமது சோகைபிடித்த ஜகந்நாதரால் அதிகமாய்க் குறிக்கப்பட்ட அம் மூட மான், வேகமா யோடும் அவ் வாற்றி னோரத்தில் தன் கண்ணீரால் அதன் பிரவாகத்தை அதிகப்படுத்திக்கொண்டு நின்றது.

கு. ஜகந்நாதன் என்ன சொன்னான்? இக் காட்சியைக் கண்டு வேதாந்தம் பேச ஆரம்பிக்க வில்லையா அவன்?

மு. ம. ஆம், ஆம்; அதைக் கண்டு ஆயிரம் உத்பிரேக்ஷைகள் செய்தார். முதலில், ஜலம் பூரணமாகப் பாயும் ஆற்றில் தன் கண்ணீரை விடுவதற்காக, "பேதை மானே, உள்ளவனுக்கே அதிகமாய்க் கொடுக்கும் உலகத்து மூடரைப்போல், நீர் அதிகமாக உடைய ஆற்றிற்கே உனது கண்ணீரைக் கொடுக்கிறாய்" என்றார். பிறகு, மிருதுவாம் தோலையுடையதனது தோழர்களால் கைவிடப்பட்டு தனியே யிருப்பதைப் பார்த்து, "நியாயம்தான், துர் அதிர்ஷ்டமானது இவ்வாறு நண்பர்களைப் பிரிக்கிறது" என்றார்; பிறகு, சற்றேனும் நின்று இதைக் கவனியாது, வாய் நிரம்பப் புல்லுடன் குதித்தோடும் கவலை யற்ற மான் கூட்ட மொன்றைக் கண்டு, "ஆம், செல்லுங்கள் விரைந்து, செல்வச் செறுக் குடை கொழுத்த குடிகளே! இதுதான் தற்கால வழக்கம்; கையி லுள்ள காசையெல்லாம் இழந்த அப் பேதையை நீங்கள் ஏன் கவனிக்க வேண்டும்" என் றுரைத்தார் ஜகந்நாதர். இவ்வாறே, நாடு நகரம் அரண்மனை, நாம் வாழும் இவ் வாழ்க்கை, எல்லாவற்றையும் தனது வசையால் ஊடுருவினார். ஜகதீசன் அவைகளுக் கென்று ஏற்படுத்திய, அவைகள் பிறந்து வளர்ந்த இருப்பிடங்களிலேயே, இவ் வன விலங்குகளை நாம் வெருட்டி அவைகளைக்கொல்வதினால், நாமெல்லாம் கொடியவர்களென்றும், குரூரர்க ளென்றும், கொடுங்கோல் அரசு புரியவர்களைப் பார்க்கிலும் கெட்டவர்களென்றும் பிரமாணம் செய்கிறார்.

கு. இம்மாதிரியான யோசனையிலா அவனை விட்டு வந்தீர்கள்?



இ. ம. ஆம், மஹாராஜா; கதறி யழும் மானைக் கண்டு கண்ணீர் விட்டுக் கவலைப்படும் சமயத்தில்தான் அவரை விட்டு வந்தோம்.

கு. அந்த இடத்தைக் காட்டுங்கள் எனக்கு. இம்மாதிரியான சோகம் பிடித்திருக்கும் சமயங்களில் அவனுடன் வாதாடுவது எனக்கு விருப்பத்தைத் தருகிறது; ஏனெனில் அச்சமயங்களில் அவன் வார்த்தைகளில் விஷய மதிகமா யிருக்கும்.

மு. ம. தங்களை நேராக அழைத்துப் போகிறேன் அவரிடம்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---

## இரண்டாம் காட்சி.

இடம்—அரண்மனையி லோர் அறை.

பிரதாபதீர மஹாராஜன், மந்திரிகள், சேவகர்கள் வருகின்றனர்.

பி. என்ன ஆச்சரியம்! அவர்களை ஒருவனும் பார்க்க வில்லையா? அங்ஙனம் இராது; எனது அரண்மனையி லிருக்கப்பட்ட கொடியர்கள் சிலர் இதற்கு ஒப்பி உடந்தையா யிருக்க வேண்டும்.

மு. ம. அவர்களைப் பார்த்ததாக நான் ஒருவரிடமும் கேள்விப்பட வில்லை. அவர்களது சயனக் கிருக தாதியர் அவர்கள் படுக்கையில் படுத்தபொழுது பார்த்தனர்; பிறகு அதி காலையில் பார்க்கும்பொழுது படுக்கையில் அவர்க ளில்லாதிருப்பதைக் கண்டனர்.

இ. ம. மஹாராஜா, அவன் செய்யும் பரிஹாசங்களைக் கேட்டு தாம் பன்முறை நகைத்த நமது படுக்காளி விதூஷகனும் காணாமற்போயிருக்கிறான். ராஜகுமாரிகளுடைய தோழியாகிய சபரி, கொஞ்ச நாளைக்கு முன்பாக பல முடைய சாரளனை மல்ல யுத்தத்தில் தோற்கடித்த இளைஞனது எழிலையும் வன்

மையையும், தமது மகளும் ராஜீவாட்சியும் புகழ்ந்து பேசியதை ரகசியமாகக் கேட்டதாக ஒப்புக்கொள்ளுகிறாள். அவர்களிருவரும் எங்கு போனபோதிலும் அவ் வாலிபனும் அவர்களுடன்தானிருக்கவேண்டுமென்று நம்புகிறாள்.

பி. அவனது தமயனுக்குச் சொல்லியனுப்புங்கள், அந்த வாலிபனை இங்கு அழைத்துவாருங்கள்; அவன் அகப்படாவிட்டால், அவனது அண்ணனை என்முன் கொண்டுவாருங்கள்; நான் அவனை அனுப்பி எப்படியாவது அவனைப் பிடித்துவரும்படி செய்கிறேன்; உடனே செய்யுங்கள் இதை; எப்படியாவது அஞ்சாது தேடி விசாரித்து கண்டுபிடித்துக் கொண்டுவர வேண்டும் மூடத்தனமாய் ஓடிப்போன இந்தப் பெண்களை.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---

## மூன்றாம் காட்சி.

இடம்—ஹலவீரன் வீட்டிற்கு எதிர்.

அமரசிம்ஹனும், தாமனும் சந்திக்கின்றனர்.

அ. யார் அங்கே?

தா. என்ன! என் சின்ன எஜமானா? ஐயோ! என் நல்ல எஜமானே! என் இனிய எஜமானே! உம்மைப் பார்க்கும்பொழுதெல்லாம் என் பழய எஜமான் ரகுவீரருடைய ஞாபகம் வருகிறதே! ஏன், ஏன் இங்கே வந்தீர்கள்? நீர் ஏன் நற்குணமுடையவராயிருக்கிறீர்? ஏன் ஜனங்கள் எல்லாம் உம்மீது பட்சமாயிருக்கிறார்கள்? குணமும், பலமும், வீரமும் உம்மிடம் ஏன் குடிகொண்டிருக்கின்றன? சித்தவிகாரமுடைய மஹாராஜாவின் மல்ல யுத்தக்காரனான அப்பலவானை, ஜெயிக்கும்படியான மூடத்தனமுடையவராய் ஏன் இருந்தீர்? உமது கீர்த்தி உமக்கு முன்னால் ஓடிவந்து இவ்



வீட்டிற்குள் நுழைந்திருக்கிறது. எஜமானே, சில மனுஷ்யர்களுக்கு அவர்களுடைய நற்குணமே அவர்களுக்கு விரோதிகளாய் வாய்க்கிறது என்பதை அறியீரா? உமது குணமெல்லாம் அப்படியே வாய்த்தது உமக்கு; என் இனிய எஜமானே, உமது நற்குணங்கள் பரிசுத்த மானவைகளாயினும் உம்மைக் கெடுக்கும் துரோகிகளாயினவே. ஐயோ! என்ன உலகம் இது! அழகிய குணங்களெல்லாம் அவைகளைத் தரிப்பவனையே அழிக்கும் ஆலகாலம் ஆகிறதே!

அ. ஏன், என்ன சமாசாரம்?

தா. ஹா! துர் அதிர்ஷ்டம் பிடித்த வாலிபனே, இந்த வீட்டிற்குள் நுழையாதீர்; இந்தக்கூரைக்குள்ளாக உமது நற்குணங்களுக்கெல்லாம் வைரியாய்ப் பிறந்துள்ளவன் வசிக்கிறான். உம்முடைய அண்ணன்—இல்லை, அண்ணன் அன்று—ஆயினும் உமது பிதாவின் பிள்ளை—சீ! பிள்ளை யல்ல—யாரை அவருடைய தந்தை என்று கூறவந்தேனோ, அவருடைய குமாரன் என்று நான் கூறவும் எனக் கிஷ்டமில்லை—உம்முடைய புகழைக் கேள்விப்பட்டு, நீர் வழக்கப்படி உறங்கும் வீட்டை இன்றிரவு கொளுத்தி, அதனுள் இருக்கும் உம்மையும் கொளுத்த எண்ணியிருக்கிறார். அதில் தவறிப்போனாலோ, உமது உயிரைப் போக்க வேறு வழி தேடுவார். அவர் இச் சூதுகளையெல்லாம் யோசித்ததை ரகசியமாய்க் கேட்டறிந்தேன். இது நீர் இருக்கத் தக்க இடமன்று; இது உம்மைக் கொல்லும் கொலைக்களமாம்; இங்கு வர அஞ்சும். இனி, இவ்விடத்தை வெறுத்திடும், இதனுள் நுழையாதீர்.

அ. ஏன் அப்பா, தாமா, என்னை வேறெங்கு போகச்சொல்கிறாய்?

தா. வேறு எங்கு போனாலும் சரிதான்; இங்கு மாத்திரம் வராதிருந்தால் போதும்.

அ. என்ன, நான் வெளியிற் சென்று இரந்துண்ணவேண்டு
மென்று விரும்புகிறாயா? அல்லது தெருவில் நின்று என்
கொடிய வாளை வீசிக் கொள்ளையடித்து திருடனைப்போல்
என் வாழ் நாட்களை இழிவாகக் கழித்திடச் சொல்கிறாயா?
இதுதான் நான் செய்யவேண்டும், இதையன்றி எனக்கு
வேறொன்றும் செய்யத் தெரியாது; ஆயினும் நான் எது
செய்தபோதிலும் இதை மாத்திரம் செய்யேன். அதைவிட,
உதிர சம்பந்தத்தையு மறந்த என் கொடிய அண்ணன் கோ
பத்திற்கு என்னை ஆளாக்குவேன்.

தா. ஆயினும் அங்ஙனம் செய்யவேண்டாம். என்னிடம் ஐந்
நூறு பொன்கள் இருக்கின்றன, உங்கள் தகப்பனாரின்கீழ்
நான் உழைத்த கூலியைச் சேர்த்துவைத்த பொருள். முதிர்
வயதானது ஒருவராலும் கவனிக்கப்படாது மூலையில் கிடக்
கச் செய்யுங் காலத்தில், வேலை செய்வதற்குச் சக்தி யின்றி
என் விர்த்தாப்யத்தில் கை கால்கள் முடங்கிக் கிடக்கும் சம
யத்தில், செவிலித் தாய்போல் எனக்குதவும்பொருட்டு சேர்
த்துவைத்தேன் இப்பொருளை. எடுத்துக்கொள்ளும் அதை.
கருப்பையிலிருக்கும் முட்டையையும், கல்லினுள் இருக்
கும் தேரையையும் போஷிக்கும் கடவுள் என் வயோதிகத்
தில் என்னைக் காப்பாற்றுவார்! இதோ அந்தப் பொன்;
இதை எல்லாம் உமக்குக் கொடுக்கிறேன். உமது வேலையா
ளாக இருக்க உத்தர வளியும் எனக்கு. நான் வயதானவ
னாய்த் தோற்றியபோதிலும் என் தேக வன்மையும் பலமும்
குன்ற வில்லை; என் வாலிபத்தில் தேகத்தின் பலத்தை
யழிக்கும் கொடிய மது முதலியவற்றைக் குடித்து என் ரத்
தத்தைக் கெடுத்தே னில்லை; அன்றியும் என் யௌவனத்தில்
வெட்க மில்லா முகத்தினனாய்ப் பல ஹீனத்தையும் தேகத்
தளர்ச்சியையு முண்டாக்கும் மார்க்கத்தை விரும்பி வரித்தே
னில்லை; ஆகவே கிழ வய தடைந்தபோதிலும் தேகம்
கெடாது, சாயுங் காலத்தை யடைந்தபோதிலும் சக்தி குன்



றாதிருக்கிறேன்; உம்முடன் நானும் வர உத்தர வளியும்,
உம்முடைய வேலைகளைப் பார்ப்பதிலும் உமக் குதவுவதிலும்
என்னிலும் சிறு வய துடைய வாலிபன் செய்யத்தக்க வேலை
யெல்லாம் நான் செய்கிறேன்.

அ. அப்பா தாமா, கூலிக் கின்றி கடமையின் பொருட்டு கஷ்
டப்பட்ட மாறுதலில்லாப் பண்டைக் காலத்துப் பணி
விடையானது, உன்னிடம் என்ன நன்றாய் விளங்குகிறது!
தங்களை விர்த்தி செய்து கொள்ளுவதற் கன்றி கஷ்டப்படு
வார் ஒருவரு மில்லாத இக் காலத்து நடவடிக்கைக்கு ஏற்ற
மனிதன் அன்று நீ; அங்ஙனம் தாங்கள் விரும்பிய பதவியை
அடைந்ததும் அதைக் கொடுத்த வேலையை அதனுடன்
மறந்து விடுகிறார்கள். நீயோ அப்படிப்பட்டவ னல்ல. ஆயி
னும் அப்பா, கிழவா, நீ எவ்வளவுதான் கஷ்டப்பட்டு முயன்
றபோதிலும் ஒரு பலனையும் உனக்கு அளித்திடச் சக்தி
யில்லாத, பட்டுப்போன மரத்தை செம்மைப்படுத்தப் பார்க்
கிறாய், ஆயினும் உன் னிஷ்டப்படி செய்; போவோம் நாம்
ஒன்றாய். உன் சிறு வயதில் நீ சேர்த்துவைத்த பொருளை
யெல்லாம் செலவழிக்குமுன், தாழ்ந்ததா யிருந்தபோதிலும்
நமது மனத்திற்குத் திர்ப்திகரமா யிருக்கும் ஏதாவது வேலை
யில் அமர்வோம்.

தா. எஜமானே, புறப்படும்; உமது உண்மையான ஊழிய
னாய் என் உயிர் போமளவும் உம்மைப் பின் தொடர்கிறேன்.
எனது பதினேழாம் வயது முதல், இப்போதைக்கு ஏறக்
குறைய எண்பதாம் வயது வரையில் இங்கே வசித்தேன்
நான்; இனி நான் வசிக்கப் போகிற தில்லை இங்கு. தமது
பதினேழாம் வயதில் தங்கள் அதிர்ஷ்டத்தைத் தேடப் புறப்
படுவார்கள் அநேகர்; எண்பது வயதான பிறகு எதைச்
செய்வதற்கும் காலம் அல்ல: ஆயினும் என் அதிர்ஷ்ட வச
மானது, எனது எஜமானனுடைய கடனை ஒழித்து சந்தோ

ஷமாய்ச் சாகும்படி செய்தால் அதுவே எனக்கு மேலான வர மளித்த தாகும்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---

## நான்காவது காட்சி.

இடம்—அருங் காடு.

ஆண் உடையில் ராஜீவாட்சியும், ஆயச் சிறுமி உடையில் சுசீலையும், அச்சுதனும் வருகிறார்கள்,

ரா. ஹா! ஈசனே, என் மனது என்ன ஆயாசமா யிருக்கிறது!

அ. என் மனது எக் கேடு கெட்டாலும் எனக்குப் பெரி தல்ல என் கால் ஆயாசமா யில்லாதிருந்தாற் போது மெனக்கு.

ரா. இப்பொழுது எனக் கிருப்பதற்கு, இந்த ஆண் வேஷத்தை யவமதித்து, அப்படியே அரிவையைப்போல் அழுதுவிடு வேன். ஆயினும் அபலையாகிய வுனக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய கடமை ஆண் சிங்கம் போன்ற ஆடவனாகிய என் னுடைய தல்லவா? ஆகவே, அனலா, அதைரியப்படாதே!

சு. ஐயோ! சற்று பொறுங்கள், என்னால் இனி ஒரு அடியும் எடுத்து வைக்க முடியாது.

அ. அம்மா, அந்தமட்டும் அதனோடு நிறுத்தினீர்களே, 'என்னால் முடியாது, என்னைத் தூக்கிக்கொண்டு போங்கள்' என்று சொல்லாமல்! இப்பொழுது என்னைத் தூக்குவதே யெனக்கு கஷ்டமா யிருக்கிறது, போதாக் குறைக்கு உங்களையுந் தூக்க வேண்டுமென்றால்!

ரா. உம்—இது தான் அருங் காடு போலும்.

அ. ஆம், அருங் காட்டில் தான் இருக்கிறேன் இப்பொழுது; அசல் மடையன் நான். நான் வீட்டி லிருந்தபொழுது இதைப் பார்க்கிலும் மேலான இடத்தில் இருந்தேன். ஆயி



னும் பிரயாணிகள் பொறுமை யுடையவரா யிருக்கவேண்டும்.

ரா. ஆம், அப்படித்தான் கொஞ்சம் இரு, நீ நல்லவ னச்சுதே அச்சுதா,—அதோ பார், யாரோ வருகிறார்கள், ஒரு வயோ திகனும் வாலிபனும், ஏதோ முக்கியமான விஷயத்தைப் பற்றி பேசிக்கொண்டு.

நந்தக்கோனும் செல்வக்கோனும் வருகிறார்கள்.

நா. அதுதான் வழி, இன்னும் அவள் உன்னை வெறுத்திடச் செய்ய.

செ. ஹா! கோனாரே, நான் அவள்மேல் எவ்வளவு ஆசை வைத் திருக்கிறேன் என்பது உமக்குத் தெரிந்திருக்குமாயின்!

ந. அப்பா, எனக்குங் கொஞ்சந் தெரியும்; இதற்கு முன்பு நானும் உன்னைப்போல் ஆசைப்பட்டவன்தான்.

செ. இல்லை, கோனாரே, உமது இள வயதில் இரவெல்லாம் கண் விழித்து ஏங்கி வருந்திய உண்மையான காதலனா யிருந்திருந் தபோதிலும், இப்பொழுது வய தாகிவிட்டதால் எல்லாம் மறந்துபோய்விட் டிருப்பீர்; அல்லாமலும் நான் அவள் மேல் ஆசைப்பட்டதுபோல் இந்த அவனியில் ஒருவரும் ஆசைப்பட் டிருக்கமாட்டார்கள் என்று உறுதியாய் எண்ணு கிறேன்; ஏதோ பார்ப்போம், நான் ஆசைப்பட்டதுபோல் நீரும் ஆசைப்பட்டது உண்மையால், அந்த உமது ஆசைப் பெருக்கத்தில் அனைவரும் நகைக்கத் தக்க என்ன என்ன ஆட்டம் ஆடினீர், சொல்லும் கேட்போம்.

ந. ஆயிரம் ஆட்டம் ஆடியிருப்பேன், அதெல்லாம் ஞாபக மிருக்கிறதா இப்பொழுது?.

செ. ஹா! அப்படியானால் நீர்கொண்ட ஆசை மனப் பூர்வமான ஆசையா? அந்த ஆசைப் பெருக்கத்தில் நீர் ஆடிய ஆட்டத் தில் ஒரு அணு அளவு நீர் மறந்தபோதிலும், அந்த ஆசை ஒரு ஆசையா? அல்லது, நான் இப்பொழுது செய்வது

போல், உட்கார்ந்து ஆசை கொண்டவள் அழகைப் புகழ்ந்து, கேட்பவர் செவியைச் சலிக்கச் செய்திரா விட்டால், அந்த ஆசை ஒரு ஆசையா? அல்லது எனது ஆசைப் பெருக்கத்தினால் இப்பொழுது நான் உம்மைவிட்டுப் பிரிந்து திடீரென்று போகிறதுபோல் நீரும் போயிராவிட்டால், அந்த ஆசை ஒரு ஆசையா?—ஆ! பாமினி! பாமினி! பாமினி! [போகிறான்.]

ரா. ஐயோ பாவம்! பேதைக் கோனானே! உன்னுடைய துக்கத்தை ஆராயப்போய் எனது துக்கத்தைக் கிளறிவிட்டேன் துர் அதிர்ஷ்ட வசத்தால்!

அ. நானும் என் துக்கத்தைக் கிளறிவிட்டேன். நான் சின்ன வயதில் காதல் கொண்ட பொழுது, என் காதலியாகிய ஜானகியுடன் இரவில் மற்றொருவன் கண்டு பேசினதற்காக, என் கத்தியைக் கற்பாறையின்மீது மோதி உடைத்து, அவனை அடித்ததாக அதைப் பாவிக்கச்சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது; அன்றியும் அவள் கையிலிருந்த அகப்பைக்கும், அவளுடைய கைகளால் பாலைக் கறந்த பசுவின் மடிக்கும், முத்தமிட்டது ஞாபகத்திற்கு வருகிறது; அன்றியும் அவளை வேண்டுவதற்குப் பதிலாக ஒரு மயிலிடம் சென்று வேண்டி, இரண்டு இரகுகள் அதனிடமிருந்து வாங்கி, அவைகளைக் கொண்டுபோய் அவளிடம் கொடுத்து “இவைகளை என் பொருட்டு அணிவாய்” என்று அழுதுகொண்டே சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. உண்மையான காதலர்களாகிய நாம் ஆடும் ஆட்டங்கள் அதி விந்தையானவை; ஆயினும் உலகத்திலுள்ள பிராணிகளெல்லாம், மரிக்கவேண்டியது எவ்வளவு சுபாவமோ, அப்படியே அவைகளுக்கு அந்த ஆசைப்பேய் பிடித்தால், அலங்கோலமாய்த் தடமாடுவதும் சுபாவமாகும்.

ரா. அச்சுதா, உன்னையும் அறியாதபடி புத்திசாலித் தனமாய்ப் பேசுகிறாய் நீ.



அ. ஆம், என்னுடைய புத்திசாலித்தனம் அதனிடம் நான் போய் முட்டிக்கொண்டால்தான் எனக்குத் தெரியும்.

ரா. ஈசனே! ஈசனே! இந்த இடையனுடைய காதல் என்னுடைய காதலைப்போ லிருக்கிறது!

அ. என்னுடைய காதலைப்போலு மிருக்கிறது! ஆயினும் பழயதா யிருப்பதால் கொஞ்சம் தெவிட்டுகிறது.

சு. உங்களை வேண்டிக்கொள்கிறேன், அதோ அந்த மனிதனை ஒருவர் கேளுங்கள் நமக்கு விலைக்கு உணவு வாங்கிக் கொடுக்க முடியுமாவென்று; பசியால் என் பிராணன் போகிறது.

அ. அப்பா, மடையா!

ரா. சீ! பேசாம லிரு, உன் பந்து அல்ல அவன்.

ந. யார் கூப்பிடுகிறது?

அ. உன்னிலும் உயர்ந்தவர்கள், அப்பா.

ந. அப்படித்தா னிருக்கவேண்டும், இல்லாவிடின் அவர்கள் மிகவும் துரதிர்ஷ்டம் பிடித்தவர்களா யிருக்கவேண்டும்.

ரா. கொஞ்சம் பேசாம லிரு,—ஐயா, வாரும், நமஸ்காரம்.

ந. ஐயா, உங்களுக்கு நமஸ்காரம்.—உங்கள் எல்லோருக்கும் அடியேன் நமஸ்காரம்.

ரா. ஐயா கோனாரே, தர்மத்திற்காவது பொன்னுக்காவது இப் பாழுங் கானில் உணவு உதவுவார் உண்டானால், நாங்கள் சற்று தங்கி உண்டு இளைப் பாறும்படியான இடத்திற்கு அழைத்துக்கொண்டு போம் எங்களை; இதோ, தொலை தூரம் நடந்துவந்து துன்ப முழன்ற இச் சிறுமி பசியால் களைத்துப்போகிறாள்.

ந. ஐயோ! பாவம்! அவர்களைப் பார்க்கும்பொழுது எனக்குப் பரிதாபமா யிருக்கிரது, எனக்காகவன்றி, அவர்கள் பொருட்டாகவாவது, அவர்களுக்கு உதவி செய்யும்படியான நல்ல

ஸ்திதியி லிருக்கலாகாதா நான், எனக் கோருகிறேன். நான் இங்கே ஒரு எஜமான னிடத்தில் ஆடு மேய்க்கும் இடையன். அவைகளை மேய்க்கிறதுமாத்திரம் என் வேலை, அவைகளின் பலனை அனுபவிப்பவன் என் எஜமான்; என் எஜமானனோ, மிகுந்த லோபகுண முடையவன், ஏதோ தர்மம் செய்து மோட்சத்திற்கு வழி தேடவேண்டுமென்னும் எண்ணம் எள்ளளவு மில்லை. போதாக் குறைக்கு, அவர் வீடு ஆடு மாடு மேய்ப்பு நிலம் எல்லாம் கடன்காரர் வந்து ஏலம் போடுகிறார்க ளிப்பொழுது. எங்கள் ஆட்டுப் பட்டியில், அவரில்லாத படியினாலே, இப்பொழுது அரைத் துரும்பும் அகப்படாது நீங்கள் புசிக்க. ஆயினும் அங்கே என்ன இருக்கிறதோ வந்து பாருங்கள், மனப்பூர்வமாய் உங்களுக்கு நல் வரவு கூறி உங்களை அழைத்துப்போகிறேன்.

ரா. அவருடைய ஆடு மாடு மேய்ப்பு நிலங்கள் முதலானவைகளை யார் வாங்கப்போகுறது?

ந. கொஞ்சம் நேரத்திற்கு முன் இங்கே யிருந்தானே ஒரு பிள்ளையாண்டான்—நீங்கள் கூடப் பார்த்தீர்களே—அவன்; அவனுக்கோ எதையும் வாங்கவேண்டு மென்னும் கவலை கொஞ்சமு மில்லை.

ரா. அதில் தவ றொன்று மில்லாவிட்டால், அந்த வீடு ஆடு மாடு நிலம் முதலானவற்றை எங்களுக்காக விலை பேசி வாங்கிக் கொடு, அதன் விலையை நாங்கள் உனக்குத் தருகிறோம்.

சி. உனது சம்பளத்தையும் அதிகப்படுத்துகிறோம். இந்த இடம் எனக் கிசைந்திருக்கிறது; இங்கேயே என் காலத்தைக் கழிக்க இச்சைப்படுகிறேன்.

ந. அதை எப்படியும் விற்கப்போகிறார்கள். வாருங்கள் என்னோடு, விசாரணையின்பேரில், இந் நிலவளம், வியாபார லாபம், இவ்வாழ்க்கை, எல்லாம் உமது மனத்துக்குச்சம்மதமானால்



உங்களுடைய உண்மையான வேலை யாளா யிருந்து, அதை உங்களுக்கு உடனே வாங்கித் தருகிறேன் உங்கள் பொன்னைக் கொண்டு. [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---

## ஐந்தாவது காட்சி.

இடம்—காட்டின் மற்றொரு பாகம்.

ஹேமநாதன், ஜகந்நாதன், முதலானோர் வருகின்றனர்.

ஹே. [பாடுகிறான்.]

பல்லவி.

இங்குநீர் வாரீர்-என்தன் நேயரே இ.

அனுபல்லவி.

தங்கிய கானில்-தரைமீது படுத்து
பொங்கிய வுளத்தால்-புள்ளினைப்போல
சங்கையே யின்றி-சாலவும் பாடிட இ.

சரணம்.

முடுகிடு காற்றும்-மூடிய பனியும்
கடு மழைதா னின்றி-கானக மீதில்
கொடியரைக் காணீர்-கூறிடுவேனே இ.

ஜ. இன்னும், இன்னும்; உங்களை வேண்டிக்கொள்கிறேன், இன்னுங் கொஞ்சம்.

ஹே. அது உங்களுக்குச் சோகம் உண்டாக்கும் ஐயா, ஜகந்நாதரே

ஜ. அதற்கு வந்தனம் செய்கிறேன். இன்னுங் கொஞ்சம், உம்மைக் கேட்டுக் கொள்ளுகிறேன், இன்னும் கொஞ்சம். தேங்காயின் உள் ளிருப்பதை தேரையானது உறிவதேபோல்

சங்கீதத்தினின்றும் சோகத்தை நான் உறிந்திடுவேன். இன்னுங் கொஞ்சம், இன்னும் கொஞ்சம், நான் வேண்டிக்கொள்கிறேன்.

ஹே. என் குரல் கம்மலாயிருக்கிறது ; உமது செவியை யின்புறச் செய்ய என்னால் முடியாதென்று தெரியு மெனக்கு.

ஜ. எனக்கு இன்பம் உண்டாக்கும்படி கேட்கவில்லையே நான் உம்மை; உம்மைப் பாடும்படி கேட்கிறேன், அவ்வளவு தானே; வாரும் இன்னும் கொஞ்சம்; இன்னொரு விருத்தம்; அதன்பெயரென்ன, விருத்தமா வருத்தமா?

ஹே. உம திச்சையின்படி, ஐயா ஜகந்நாதரே.

ஐ. அவைகளின் பெயரை நான் கவனிக்கவேண்டிய கவலையில்லை, எனக்குக் கடன் பட்டவைக ளல்ல அவைகள்; பாடுகிறீரா கொஞ்சம்?

ஹே. நீர் வேண்டுகிறீரே யென்று பாடுகிறேன், நான் விரும்பிப் பாடவில்லை.

ஜ. ஆனால் சரி, எப்பொழுதாவது எந்த மனிதனுக்காவது நான் வந்தனம் செய்வதானால், நான் உமக்கு வந்தனம் செய்கிறேன்; இப்படி ஒருவருக் கொருவர் வந்தனம் செய்துகொள்வது இரண்டு ஆண் குரங்குகள் எதிர்ப்படுவதுபோ லாகும்; மனப்பூர்வமாய் எவனாவது எனக்கு வந்தனம் செய்தால், நான் அவனுக்கு அரைக்காசு கொடுக்க அதற்காக அவன் அவ்வாறு எனக்கு வந்தனம் செய்வதாக எண்ணுகிறேன் நான். வாரும், பாடும் ;—பாடாதவர்க ளெல்லாம் வாயை மூடிக்கொண்டு சும்மாக இருங்கள்.

ஹே. சரி, இதோ பாட்டை முடிக்கிறேன்.—ஐயா, மஹாராஜா இவ் விருக்ஷத்தின் கீழ் போஜனம் கொள்ளுவார், ஆகவே, அதற்குள் எல்லாம் சித்தம் செய்யும்.—ஜகந்நாதரே, காலை முதல் உம்மைக் காணவேண்டுமென்று தேடிக்கொண் டிருந்தார் மஹாராஜா.



ஜ. நானும் காலை முதல் அவரைக் காணக்கூடாதென்று சுற்றி வருகிறேன். அவர் எதற்கும் வாதாடுகிறார், அது எனக்குச் சம்மதி யில்லை. அவர் எத்தனை விஷயங்களைப்பற்றி யோசனை செய்கிறாரோ, அத்தனை விஷயங்களைப்பற்றி நானும் யோசனை செய்கிறேன் ; ஆனால் அவைகளைப் பற்றி டம்பமாய்ப் பேசாது மௌனமாயிருக்கிறேன் நான். வாருங்கள், பாடுங்கள், வாருங்கள்.

எல்லோரும். [பாடுகிறார்கள்]

பல்லவி.

இங்கு நீர் வாரீர்-என்தன் நேயரே இ.

அநுபல்லவி.

காட்டை நாடி-கவலையை விட்டு
பாட்டினைப் பாடி-பகலினில் வாழ்ந்து இ.
வேட்டை யாடி- வாட்டமா யுண்ண

சரணம்.

முடுகிடு காற்றும்-மூடிய பனியும்
கடு மழைதா னின்றி-கானக மீதில் இ.
கொடியரைக் கணீர்-கூறிடுவேனே

ஜ. ஐயா, நான் கவி யல்லாவிட்டாலும் இதே மாதிரி நான் கவியொன்று நேற்றைத்தினம் கற்பனைசெய்தேன்.

ஹே. சொல்லும், அதை நான் பாடுகிறேன்.

ஜ. இப்படிப் போகிறது அது.

நாட்டின்வாழ் வதனை நீத்து நாலுகால் கழுதை போலுங்
காட்டின்வாழ வதனைப் பார்த்து கருத்தழி கசடர் கூறும்
பாட்டின்சீ தரனைப் பற்றி பரவச மடையு மென்பாழ்ங்
—கேட்டையா னென்சொல் கேணே கேளீரே கேளிர் கேளிர்.
டிடும்! டிடும்!

ஹே. அதென்ன டி ?

ஜ. அது தத்திகளின் கூட்டம் கலையத் தமுக் கடிக்கிறது ; தஞ் சாவூர் வழக்கம்.—நான் போய்த் தூங்குகிறேன், சாத்தியப்பட்டால்; சாத்தியப்படாவிட்டால், யோகம் செய்கிறேன்.

ஹே. நான் போய் மஹாராஜாவைத் தேடிக் கண்டுபிடிக்கிறேன் ; அவருடைய போஜனம் சித்தமா யிருக்கிறது.

[எல்லோரும் வெவ்வேருகப் போகிறுர்கள்.]

காட்சி முடிகிறது.

---

## ஆருவது காட்சி.

இடம்—காட்டின் மற்றொரு புறம்.

அமரசிம்ஹனும், தாமனும் வருகின்றனர்.

தா. பிரிய எஜமானே, இனி என்னுல் ஒரு அடி எடுத்து வைக்கவும் முடியாது. ஹா ! உணவின்றி நான் உயிர் விடுகிறேன் ! இதோ, இங்கே படுத்துக்கொள்கிறேன் ; இதுவே யென் சமாதி யாகும். என் இனிய எஜமானே, நீர் சுகமாய் வாழ்வீராக, நான் போகிறேன்.

அ. தாமா, இதென்ன ? சீச்சீ ! இவ்வளவுதாஞ உன் தைரியம் ? கொஞ்சம் உயிரைப் பிடித்துக்கொண் டிரு, மனத்தைத் தைரியப்படுத்து ; கொஞ்சம் உற்சாகமா யிரு, இந்த அகோரமான அரண்யத்தில் ஏதேனும் வன விலங்கு கிடைக்குமாயின், அதற் குணவாக வாவது ஆகிறேன், அல்லது அதை உனக்கு உணவாகக் கொண்டுவருகிறேன். உன் மனத்தில் மரிப்போ மென்கிற நினைப்பை யொழித்துவிட்டு விடு ; இன்னும் உன் தேகத்தில் சக்தி இருக்கிறது. என் பொருட்டாவது கொஞ்சம் தைரியமா யிரு. கொஞ்சம்



நேரம் யமனைச்சற்று தூரத்தில் நிற வை; இதோ க்ஷணத்தில் திரும்பி வந்துவிடுகிறேன் உன்னிடம். நான் வரும் போது உனக்கு ஏதேனும் உணவு கொண்டுவராவிட்டால் நீ உயிர் விட உத்தரவளிக்கிறேன் உனக்கு. நான் திரும்பி வரு முன் மரிப்பா யாயின், நான் படும் கஷ்டத்தை நீ பரிஹஸிப்பதாகும். அது தான் சரி ! இப்பொழுதுதான் முகத்தில் தைரிய முண்டாகிறது ! அரை க்ஷணத்தில் திரும்பி வந்துவிடுகிறேன் உன்னிடம். இங்கே குளிர்ந்த காற்றில் படுத்திருக்கிருய் ; வா, சற்றே மறைவான இடத்திற்குக் கொண்டுபோகிறேன் உன்னை. இக் காட்டில் உயிருள்ள ஜந்து எது இருந்தபோதிலும் நீ உணவின்றி உயிர் விடவேண்டிய நியாயமில்லை. வா, தைரியமா யிரு, தாமா.

[தாமனைத் தூக்கிக்கொண்டு போகிறுன்.

காட்சி முடிகிறது.

---

## ஏழாவது காட்சி.

இடம்—காட்டின் மற்றொரு பாகம்.

போஜனத்திற்கு எல்லாம் சித்தமா யிருக்கிறது.

குலசேகர மஹாராஜன், ஹேமநாதன், மற்று முள்ள மந்திரிகள் வருகிறுர்கள்.

கு. அவன் மிருகமாய் மாறிப்போ யிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்; ஏனெனில் மனித னுருவில் அவனை நான் எங்கும் காணகிலேன்.

மு. ம. மஹாராஜா, அவர் இதுவரையி லிங்குதா னிருந்தார், இப்பொழுது தான் போனுர்; இங்கே சங்கீதம் கேட்டுக்கொண்டு சந்தோஷப்பட்டுக்கொண் டிருந்தார்.

கு. என்ன ! ஒவ்வாத சப்தமெல்லாம் ஒன்று கூடிய அவன் சங்கீதம் கேட்டு சந்தோஷப்பட்டால், நவக் கிரஹங்களும் வக்கரிப்பதைக் காண்போம். விரைவில் போய்க் கண்டு பிடி

யுங்கள் அவனை; நான் ஏதோ பேச விரும்புவதாகக் கூறுங்கள் அவனிடம்.

மு.ம. அந்தக் கஷ்டம் எனக்குக் கொடாதபடி அவராக வருகிறார்.

ஜகந்நாதன் வருகிறான்.

கு. என்ன, ஐயா, ஜகந்நாதரே, என்ன வாழ்வு வந்துவிட்டது உங்களுக்கு? தங்களுடைய தரிசனங் கிடைப்பதே கஷ்டமாயிருக்கிறதே உங்கள் எளிய நண்பர்களுக்கு! அடடா! என்ன முகத்தில நகைப்பு!

ஜ. ஒரு கங்காளி! ஒரு கங்காளி!—இந்த காட்டில் ஒரு கங்காளி அகப்பட்டான் என் கண்முன். அசல் கங்காளி! என்ன உலகம்! என்ன உலகம்!—நான் புசிக்கும் போஜனத்தின்மீதாணைப்படி நான் ஒரு கங்காளியைக் கண்டேன்; அவன் காட்டில் கட்டாந் தரையில், வெயிலில், படுத்துக்கொண்டு, ஆரம்பித்தானையா அதிர்ஷ்ட லட்சுமியை ஏளனம் செய்ய, நன்றாய்ப் பொறுக்கி எடுத்த ஒழுங்காய் அமைக்கப்பட்ட வார்த்தைகளால்—அத்தனைக்கும் அசல் கங்காளி! "என்ன கங்காளி, க்ஷேமந்தானா" என்று விசாரித்தேன். "ஐயா ஜகதீசன் இன்னும் எனக்கு அதிர்ஷ்டத்தை அனுப்பவில்லை—அதுவரையில் என்னைக் கங்காளி என்று அழைக்காதீர்" என்றான். பிறகு தன் வட்டுவத்திலிருந்தும் ஒரு கடியாரத்தை யெடுத்தான், புத்திசாலித்தனமாய்!— "இப்போது பத்து மணி, இதனாலே உலகம் இப்படிப் போகிறது என்று தெரிய வருகிறது நமக்கு. ஒரு மணிக்கு முன்னே ஒன்பது மணியாய் இருந்தது, இன்னும் ஒரு மணிபோனால்பதினொரு மணியாகும். இந்த மாதிரியாக மணி மணியாகப் போகிறது நமது வயது. இப்படி மணி மணியாக நமது ஆயுள் அழிந்துகொண்டே வருகிறது. இதில் ஒரு வேதாந்த ரகஸ்யம்



அடங்கி யிருக்கிறது." காலத்தைக் குறித்து அந்த கங்காளி இந்த வேதாந்த வார்த்தையைக் கூறியதை நான் கேட்டவுடன், எனக் குண்டான நகைப் பிருக்கிறதே சொல்லி முடியாது! கங்காளிகளுக்கும் இவ்வளவு ஆழ்ந் தறியும் சக்தி யிருக்கிறதே யென்று நினைக்க நினைக்க, என் நகைப்பை யடக்க முடியவில்லை; அவன் கடியாரத்தின்படி ஒரு மணி சாவகாசம்சிரித்தேன் இடைவிடாமல்! என்ன உத்தமனான கங்காளி! என்ன யோக்யனான மடையன்! மடைத்தனந்தான் இந்த வுலகத்தில் புத்திசாலித்தனம்.

கு. யார் அந்தக் கங்காளி?

ஜ. என்ன யோக்யனான கங்காளி அவன்! அரண்மனையில் இருந்தவனாம். அவன், அரிவையர் அழகும் இளமையும் உடையவரா யிருந்தால், அதை யறிந்துகொள்ள அவர்களுக்கு அறிவு இருக்கிறதென்கிறான். பிரயாண முடிவில் வற்றலா யுலர்ந்துபோ யிருக்கும் மிகுதியான பணியாரத்தைப் போன்ற அவன் மூளையில், அப்போதைக் கப்போது தான் பார்த் தறிந்த சமாசாரங்களை யெல்லாம் அடக்கிவைத்திருக்கிறான்; அவைகளை சமயம் வரும்பொழுது ஒவ்வொன்றாக எடுத்துவிடுகிறான் வெளியில் கோணமாணலாக! ஆ! நான் ஒரு கங்காளியா யிருக்க லாகாதா!—நான் கங்காளி வேஷம் தரிக்க வேண்டுமென்று பேரவாக் கொண்டிருக்கிறேன்.

கு. அந்த வேஷத்திற்குரிய ஆடையைத் தருகிறேன் உனக்கு.

ஜ. அதுதான் நான் வேண்டுவது; ஆனால் ஒரு சமாசாரம், நீங்க ளெல்லேரும் நான் ஏதோ புத்தி யுடையவனென்று தப்பாக எண்ணுகிறீர்களே, அதைவேருடன் களைந்தெறிந்துவிடவேண்டும். யார்மீதிலும் வீசக் காற்றிற்குச் சுதந்தரமிருப்பதுபோல், யாரைப்பற்றியும் பேச எனக்குச் சுதந்தரமிருக்கவேண்டும். கங்காளிகளுக்கு அந்தச் சுதந்தரம் உண்டு. என் புத்தி யின்மையால் எவர்களை அதிகமாகப்

புண்படுத்துகிறேனே, அவர்கள் அதிகமாய் நகைக்கவேண்டும். ஏன் அப்படிச் செய்யவேண்டும் தெரியுமா உமக்கு? உள்ளங் கை நெல்லிக் கனிபோ லிருக்கிறது காரணம்! கங்காளி புத்திசாலித் தனமாய் ஏதாவது ஒருவன்மீது படும்படியாய்ச் சொன்னால், அது அவன் மனத்தில் உறுத்திய போதிலும், அதை அவன் கவனியாததுபோ லில்லாவிட்டால், மடைத்தன மாகும்; இல்லாவிடின் மடையன் வாறி இறைத்திடும் வார்த்தையினால் புத்திசாலியின் மடைத்தனம் பகுத் தறியப்பட்ட தாகும். எனக்குக் கங்காளி வேஷத்தைத் தரியும்; என் இஷ்டப்படி பேச உத்தரவளியும்; பிடிக்கப் பட்டிருக்கிற இந்த உலகத்தின் உடலை யெல்லாம் நன்றாய் அலம்பிவிடுகிறேன்.—நான் கொடுக்கும் ஔஷதத்தைமாத்திரம் பொறுமையோடு உட்கொள்ளவேண்டும்.

கு. சிச்சீ! நிறுத்து நீ யென்ன செய்வாய், என்று சொல்ல முடியும் என்னால்.

ஜ. நன்மையை யன்றி நான் வேறு என் செய்வேன்? சொல்லும் பார்க்கலாம், பந்தயம்!

து. நீ பாபத்தைப் பழிக்கப்போய்ப் பாதகத்தைப் பெருக்கிவிடுவாய்; ஏனெனில் காமமே உருக்கொண்டதுபோல் விடனாய்க் கண்டவிட மெல்லாம் திரிந்திருக்கிறாய்; நீ யிச்சைப்படி திரிந்தலைந்து கட்டிக்கொண்ட கொடிய ரோகங்களையும், கோரமான கெடுதிகளையும், கொட்டி யளப்பாய் குவலய முழுதும்.

ஜ. ஏன், கர்வத்தை நிந்தித்து, யாதானு மொருவனைச் சுட்டிக் கூறுவ தெவன்? கடலின் மடைதிறந்ததுபோல் பாய்ந்து கண்டதையெல்லாங் கவர்ந்து, அலுத்துத் தானாய்த்தேக்கிட வில்லையா அது? நகரத்து ஸ்திரீ நாணய மின்றி அரசிகளுக் குரிய ஆடையாபரணங்களை யணிகிறாள் என்று கூறுவே னாயின், எந்த நகரத்து ஸ்திரீயைப் பற்றிச் சுட்டிச் சொல்லுகிறேன் சொல்லும் பார்ப்போம். தான் அப்படி யிருந்தால், தன் பக்கத்து வீட்டுக் காரியும் அப்



படியே யிருக்கும்பொழுது, எவள் தன்னைத்தான் கட்டிச் சொல்லுகிறேன் என்று என்னிடம் வந்து கூறக் கூடும்? எந்தப் படுக்காளி, தன்னைக் குறித்துத்தான் நான் கூறுவதாக எண்ணி, தான் அணியும் ஆடை யாபரணங்களைப் பற்றி நீர் வாங்கிக்கொடுத்து ஒன்றுங்கெட்டுப்போக இல்லை, என்று கூறி, நான் எடுத் துரைத்த குற்றத்தைத் தன் குற்றமாகத் தன் தலைமேல் போட்டுக்கொண்டு கூறுவான்? பிறகு பாரும். பிறகு எப்படி? பிறகு என்ன? என் வார்த்தையானது அவனுக்கு எவ்விதம் கெடுதி செய்தது பார்க்கிறேன். அவனுக்கு அது நன்மை பயப்பதானால், அவன் தனக்குத்தானே தவறிழைத்திருக்கவேண்டும். அவன் குற்றவாளியல்லாவிட்டால், என் குறைகூறுதலானது, ஒருவராலும் தன்னுடையதாக ஏற்றுக்கொள்ளப்படாது எதேச்சையாய், ஸ்ராத்தப் பசுவைபோல் ஓடிப்போகிறது.—இது யார் இங்கு வருவது?

உருவிய கத்தியுடன் அமரசிம்ஹன் வருகிறான்.

ஆவணக்காப்பக சென்னை-600 008. 149452

அ. பொறும்! புசியாதீர் இன்னும்.

ஜ. ஏன்? நான் இன்னும் புசிக்கவே யில்லையே.

அ. ஆனால் என் பசியின் கொடுமை தீருமளவும் புசியாதீர் ஒன்றையும்.

O-1 3MSM1V N20

ஜ. உம்—இது என்ன ஜாதிச் சேவல் இது?

கு. யார் அப்பா, உன்னுடைய துயரமானது உனக்கு இவ்வளவு தைரியத்தைக் கொடுத்திருக்கிறதா? அல்லது நீ மரியாதை இல்லாதவனாய்க் காணப்படுவது, நல் நடக்கை என்பதை நீ அவமதிக்கும் காரணம் பற்றியா?

அ. என் உண்மையான ஸ்திதியை உரைத்தீர் முன்பு. என் பசியின் கூரிய கொடுமையே இவ்வாறு நான் காண்பிக்கவேண்டிய மரியாதையை மழுங்கும்படி செய்தது; ஆயினும் நான் காட்டில் பிறந்து வளர்ந்தவனே, நாகரீகம் என்பதை அறிந்

துன்ளேன் கொஞ்சம்.—பொறும் என்று சொல்லுகிறேன்! என்குறை தீருமளவும் இப் பழங்களை யெவனொருவன் தீண்டுகிறானோ அவன் இறக்கவேண்டி வரும்.

ஜ. நியாயத்தை யென்னவோ நீ கேட்கப்போகிற தில்லை, ஆகவே நான் அநியாயமாய் இறக்கவேண்டியதுதான்.

கு. என்னவேண்டு முனக்கு? நீ பலவந்தத்தினால் எம்மை வணங்கச் செய்ய முயல்வதை விட, வணக்கமாய்க் கேட்டு நீ வேண்டியதைப் பெறுவது சுலபமாகும்.

அ. என் பிராணன் போகிறது பசியால், உணவு வேண்டுமெனக்கு.

கு. உட்கார்ந்து உண், சந்தோஷமாய்ச் சாப்பிடு எங்களுடன்.

அ. என்ன அன்பாய் அழைக்கிறீர்! ஐயா, என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இங்கே யெல்லாம் காட்டு முரடர்களென் றெண்ணி பலாத்காரம் செய்ய முயன்று பார்த்தேன். அடைதற் கரிய இவ்வருங்காட்டில், சோகத்தை யூட்டும் விருக்ஷங்களின் நிழலில், வெய்துயிர்த்துக் காலத்தைக் கவலை யின்றிக் கழித்துவரும் நீங்கள் யாராயினும் ஆகுக; நானிலத்தில் நன்னாட்களை அனுபவித்தவர்களாயிருந்தால், கோயில்களுள்ள கிராமங்களில் குடியிருந்தவர்களாயிருந்தால், நல்லோர் விருந்தை நயந்து புசித்தவர்களாயின், கண்ணீரைக் கண்ரெப்பைகளினின்றும் துடைத்தவராயின், பச்சாத்தாபப்படுவது இன்னதென்றும் அதற்கு ஆளாவது இன்னதென்றும் அறிந்தவராயின், என்னுடைய பரிவையே பலாத்காரமாகக் கொள்வீரென்று நம்பி, வெட்கத்துடன் என் கத்தியை உரையிற் போடுகிறேன்.

கு. நாங்கள் நல்வாழ்வு வாழ்ந்தவர்களென்பது உண்மைதான்; கோயில் குளங்களுக்குப்போய்க் கும்பிட்டிருக்கிறோம் ஈசனை. நல்லோரிடம் நல்விருந்தை நயந் துண்டிருக்கிறோம். உளங் கசிந்த கருணையினா லுண்டான கண்ணீரைக் கண்களினின்



றும் துடைத்திருக்கிறோம்; ஆகவே சாந்தமா யுட்கார்ந்து உனது குறைகளைத் தீர்ப்பதற்குத் உதவத்தக்க எங்களிடமுள்ளதை இச்சைப்படிக் கேட்டு வாங்கிக்கொள்.

அ. ஆனால் என்பொருட்டு இன்னும் சற்று பொறுத்திருங்கள் உண்ணாதபடி; என்மீது வைத்த அன்பினால் என்னுடன் அடிமேல் அடி வைத்து, தொலை தூரம் கஷ்டப்பட்டு துன்பமுழன்று வந்த ஓர் வயோதிகன் இருக்கிறான்; பாலூட்டக் கன்றினை நாடும் பசுவினைப்போல் க்ஷண நேரத்தில் ஓடிப்போ யவனை அழைத்து வருகிறேன். மூப்பு பசி யென்கிற இரண்டினாலும் பாதிக்கப்பட்டிருக்கிற அவன் பசியாறுமளவும், நான் ஒரு பருக்கையும் தீண்டமாட்டேன்.

கு. போய் உடனே அவனை அழைத்துவா, நீ திரும்பி வருமளவும் நாங்கள் ஒன்றும் புசியோம்.

அ. ஐயா, உமக்கு வந்தனம் செய்கிறேன். நீர் எனக்குச் செய்யும் உபகாரத்திற்காக ஜகதீசன் உமக்கு அருள்வாராக!

[போகிறான்.]

கு. பார்த்தாயா, இப்பாரில் நாம்தான் துன்ப மனுபவிக்கிறோமென்று எண்ணலாகாது. நாம் ஆடுகிற இக் காட்சியைவிட இன்னும் பதின்மடங்கு துக்ககரமான காட்சிகள் இவ்வுலகமென்னும் பேர் அரங்கத்தில் எத்தனையோ இருக்கின்றன.

ஜ. குவலய மெல்லாம் கூத்தாடு மோர் அரங்கமாகும். இதில் நடமாடும் ஆடவரும் பெண்டிரும் அத்தனை நாடகபாத்திரங்களே யாம். அவர்கள் இவ் வரங்கத்தில் தோன்றி, மறைகின்றனர். ஒவ்வொரு மனிதனும் தன் ஆயுட் காலத்தில் அநேக வேஷங்களைத் தரிக்கிறான் அவனது நடம் ஏழு பருவங்களாகும். முதலில் செவிலித் தாயின் கரத்தில் கூக்குரலிட்டுக் கூவி யழும் குழவி; பிறகு பள்ளிக்குப் பயந்து செல்லும் பாலன்; அதிகாலையில் எழுந்து, பக்கத்

தில் பையுடன், அழுதுகொண்டே, நத்தையைப்போல் நடமாடி பள்ளிக்குச் செல்வான் விருப்பமின்றி. பிறகு காதலன்; பெருந் துருத்தியைப்போல பெரு மூச் செறிந்து கொண்டு, காதலியின் கரும்புருவத்திற்குக் கலி விருத்தம் நூறு பாடுவான். அப்புறம் அதி சூரன்; அடிக் கொரு ஆணையும் அரைமார்பு தாடியும் உடையவனாய் தன் மானத்தைக் காப்பதில் தளரா ஊக்கமுடையவனாய் மூச்சு விடுமுன் சண்டையை மூட்டினவனாய், நீரிற் குமிழிபோல் நிலை பெறாப் புகழை யுத்த களத்தில் தன்னுயிரை ஹானியிற் படுத்தியாவது அடைய முயல்வான். அதன் பின் நியாயாதிபதி; அழகாய் வட்டமாய் வளர்ந்து வரும் தொந்தியும், கோபப் பார்வையோடு கூடிய கண்களும் வாய் நிறைய பழமொழிகளும் வழக்கக் கோட்பாடுகளும் உடையவனாய், தாடியை ஒழுங்காய் வாரி விட்டுக்கொண்டு, அந்த ஆட்டம் ஆடுகிறான். ஆறும் பருவத்தில், மெலிந்த அவயவமும், மூக்குக் கண்ணாடியும், பக்கத்தில் பையும் உடையவனாய் மாறுகிறான்; நன்றாய்க் காப்பாற்றப்பட்ட சிறு பிராயத்து உடை யெல்லாம் சுருங்கிய உடலில் தளர்ந்து தொங்க, கம்பீரமான பெருங்குரல் மறுபடியும் தழதழத்துக் குழவியின் குரல்போல மாறிப் பேசுங்கால் பல தொனிகளுடையதாய்க் காணும் அப்பொழுது. இந்த விந்தையான சங்கதிகளடங்கிய சரித்திரத்தை முடிக்கும் எல்லாவற்றிற்கும் கடைசி காட்சி, முற்றும் துறந்த மறுபடி வரும் குழவிப் பருவமாம்; பற்களில்லாமல், கண்களும் இல்லாமல், காதும் கேட்காமல், உணர்ச்சியுமில்லாமல், ஒன்றுமில்லாமல் போவதேயாம்.

தாமனைத் தாங்கிக்கொண்டு அமாசிம்ஹன் வருகிறான்.

சூ. வாராய்! அப்பா, உன் அருமையாம் சுமையை அருகில் இறக்கு; அவனும் புசிக்கட்டும்.

அ. அவன் பொருட்டு உங்களுக்கு மிகவும் வந்தனம் செய்கிறேன்.



தா. நீர் அங்ஙனம் செய்யவேண்டியது அவசியமே. நான் என் பொருட்டு வந்தனம் செய்ய வாய் திறந்து பேசவும் சக்தியில்லா திருக்கிறேன்.

சூ. வாருங்கள், ஆரம்பியுங்கள் எல்லோரும்.—இதற்குள்ளாக உம்முடைய விர்த்தாந்தங்களை யெல்லாம் கூறும்படியான கஷ்டத்தை யுங்களுக்குக் கொடுக்கமாட்டேன்.—ஏதோ, கொஞ்சம் சங்கீதம்; அப்பா ஹேமநாதா, கொஞ்சம் பாடு.

ஹே. [பாடுகிறான்.]

பல்லவி.

ஹா! கீதம் பாடுவோம் - சங்கீதம் பாடுவோம்
ஏதமின்றி பசுந்தரை மீதுநாமும் படுத்தே.

அநுபல்லவி.

அதிக நட்புதான் அதிக வேஷமாம்
அதிகமான காதல்தானும் அத்தனையும் தவறும்.
ஆதலால் பாடுவீர், இவ் வாழ்வினைப் புகழ்ந்து நீர். ஹா.

சரணங்கள்.

வீசிடுவாயே, மாரி காற்றே நீ
கூசிடாமலே, செய்நன்றி மறக்கும்
ஏசத்தக்க மனிதனைப்போல், இல்லை யுன் பழி.
கடிந்து வீசினும், கண்படாத தால்
படியும் பற்கள், பாதக மிழைத்திடா. ஹா.

முடுகிடுவாயே, மூடுபனியே,
சடுதியினிலே, செய் நலம் மறக்கும்
கொடியரையே போலநீயும், கடிக்க வில்லையே.
கூரிய தாகாது, குளிரச் செய்யினும்
பாரில் நட்பை மறந்த பாவி யரைப்போல். ஹா.

சூ. இரகசியமாய் என் காதில் கூறியபடி, ரணவீரபாஸ்கரனுடைய மைந்தன் நீ என்பது உண்மையானால்—நான் கண்

கொண்டு உற்றுப் பார்க்குமிடத்து உன் முகமும் அவன் முகமும் ஒரே அச்சில் வார்த்ததுபோல் ஒரே சாயலாகத்தானிருக்கிறது.—நீ இங்கு வந்தது எனக்கு மிகவும் சந்தோஷம் ஆச்சுது.—அப்பா, உன் தந்தையின்மீது அன்பு வைத்த அரசன் நான். உன்னைப்பற்றிய மற்ற வரலாறெல்லாம் எனது குகைக்குப்போன பின் என்னிடம் உரைப்பாய்.—ஐயா, கிழவனாரே, உனது எஜமான் வந்தது எவ்வளவு சந்தோஷத்தைத் தந்ததோ அவ்வளவு சந்தோஷத்தைத் தந்தது நீ வந்ததும்; அவன் கையைப் பிடித்து அழைத்து வா. உன் கையைக் கொடு எனக்கு; உனது அதிர்ஷ்ட வசத்தையெல்லாம் ஆதியோடந்தமாக அறிகிறேன்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---

# மூன்றாவது அங்கம்.

## முதல் காட்சி.

---

இடம்—அரண்மனையில் ஓர் அறை.

பிரதாபதீர மஹாராஜன், ஹலவீரன், மந்திரிகள், சேவகர்கள், வருகின்றனர்.

பி. அதற்கப்புறம் அவனைப் பார்த்ததில்லையா? சீ! சீ! அது ஒரு காலும் அப்படியிராது. இப்பொழுது எனக்கிருக்கும் கோபத்திற்கு என்னிடம் கருணையென்பது அதிகமாயிராவிட்டால், நீ நேரி லிருப்பதற்கு எதிரியில்லாத உனது தம்பியை நாடிச் செல்லேன். ஆயினும் பார்த்துக்கொள். அவன் எங்கிருந்தபோதிலும், எப்படியாவது கண்டுபிடி உனது தம்பியை, இராப்பகலாகத் தேடு. இன்னும் பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக அவனை எங்ஙனமாவது, உயிருடனாவது இல்லாமலாவது, கொண்டுவந்து சேர். இல்லாவிடின் என் ராஜ்



யத்தின் எல்லைக்குள்ளாக நீ வாழ்வதற்காகத் திரும்பி வரலாகாது. உன்னுடைய தம்பியை நம் முன் கொண்டு வந்து, நாம் அவன் வாக்குமூலம் விசாரித்து, உன்னைப்பற்றி நாம் என்ன நினைக்கிறோம் என்பதைத் தெரிவித்து உன்னை விடுதலை செய்யும் வரையில், உனது நிலங்கள் முதலிய, உன்னுடையதென்று கூறும்படியான ஜப்தி செய்யத் தகுந்த எல்லாவித சொத்துகளும், நமது ராஜாங்கத்திற்கு ஜப்தி செய்திருக்கிறோம்.

ஹ. ஐயோ! மஹாராஜா! இவ்விஷயத்தில் என் மனத்தைத் தாம் அறிவீராக! நான் பிறந்து இதுவரையில் என் தம்பியின்மீது ஒரு நாளும் பக்ஷம் வைத்தவன் அல்லன்.

பி. ஆகவே, பரமபாதகன் நீ!—சரி, தள்ளுங்கள் அவனை வெளியே! அடே! அத் தொழிலுக் குரிய நமது அதிகாரிகள், இவன் வீடு வாசல் நிலங்கள் முதலிய சொத்துகளுக்கு பட்டி சித்தம் செய்யட்டும்; காலஹரணம் செய்யாமல் இதைச் செய்து, உடனே நாட்டைவிட் டனுப்புங்கள் இவனை.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---

## இரண்டாவது காட்சி.

இடம்—அருங் காடு.

அமரசிம்ஹன் கவியொன் றெழுதப்பட் டுள்ள ஓலையை யெடுத்துக்கொண்டு வருகிறான்.

அ. என் காதலை ரூபிக்கும்பொருட்டு, என் கவியே, அவ்விடத்தில் நீ தொங்கியிருப்பாய்.—திரிலோகமும் புகழும் தாராபதியே, என் ஆவி முற்றுங் கவரும் என் ஆருயிர்க் காதலியின் அழகிய பெயரை, உனது வெண்மையாம் மண்டலத்தினின்றும் பரிசுத்தமான உன் கண்களைக் கொண்டு கருணையுடன் பார்ப்பாயாக! ஹா! ராஜ்வாட்சி! இம் மரங்களே எனது புஸ்தகங்க ளாகும், என் மனத்தில் உள்ளதை யெல்லாம் அவைகளின் பட்டைகளில் செதுக்கிவருகிறேன், இக் காட்டிற்கு வருகிறவர்களுடைய கண்களெல்லாம் உன் அருங் குணத்தின் அத்தாட்சியை எவ்விடமும் கண்டு மகிழும் பொருட்டு.—அமரசிம்ஹா! ஓடோடியும் சென்று ஒவ்வொரு மரத்திலும், அவ் வழகியின், அவ் வருந்ததிக் கொப்பாளின், அருங் குணத்தை எடுத் துரைக்க வொண்ணாதாளின், பெயரைச் செதுக்கிடுவாய்!
[போகிறான்.]

நந்தக்கோனும் அச்சுதனும் வருகிறார்கள்.

ந. ஐயா, அச்சுதரே, இந்த இடையர் வாழ்வு உமக்கு எப்படியிருக்கிறது?

அச். ஐயா, கோனாரே, இந்த வாழ் வென்னவோ, அதைமாத்திரம் யோசித்தால் நல்ல வாழ்வுதான்! ஆனால் அது இடையர் வாழ்வானதுபற்றி, அது கெடுதியா யிருக்கிறது. ஏகாந்தமா யிருக்கிறபடியினாலே, அது மிகவும் எனக் கிஷ்டமா யிருக்கிறது; ஆனால் ஜன நெருக்கத்தி லில்லாமல் ஏதோ மூலையில் இருக்கிறபடியினாலே கஷ்டமாயிருக்கிறது. கழனி புலங்களில்வசிக்கவேண்டி யிருக்கிறபடியினாலே எனக்குச் சந்தோ



ஷத்தைத் தருகிறது; ஆனால் அரண்மனையி லில்லாதபடியினாலே எனக்குத் தொல்லையா யிருக்கிறது. அன்றியும் பார், எனக்கு ஆகாரம் முதலியனவெல்லாம் மிதமா யிருக்கிறபடியினாலே தேக ஆரோக்யத்தைத் தருகிறது, ஆனால் தின்பதற்கு அதிகமாய்க் கிடைக்காதபடி யினாலே, திர்ப்தியா யில்லை என் வயிற்றிற்கு.—ஐயா, கோனாரே, தத்துவ விசாரம் ஏதாவ துண்டா உம்மிடம்?

ந. எனக்குத் தெரிந்ததெல்லாம் இவ்வளவுதான்; ஒருவனுக்கு வியாதி அதிகமானால் வருத்தம் அதிக மாகிறது அவனுக்கு; பணம், சாதனம், பொறுமை, மூன்று மில்லாத ஒருவன் மூன்று நல்ல நண்பர்க ளில்லாதவன்; மழையினுடைய குணம் நனைக்கிறது, நெருப்பின் குணம் சுடுகிறது: நல்ல மேய்ச்சல் நிலங்கள் ஆடுகளைக் கொழுக்கச் செய்கின்றன; இராத்திரியில் இருட்டா யிருப்பதற்கு முக்கியமான காரணம் சூரிய னில்லாம லிருப்பதே யாம்; இந்தச் சமாசாரங்களெல்லாம் ஒருவன் சொல்லியாவது தெரிந்துகொள்ளவேண்டும், சுய புத்தியினாலாவது அறிய வேண்டும்; அந்த இரண்டு மில்லாதவன் இடைய னல்ல, மடையன். அவ்வளவுதானையா.

அச். அப்படிப்பட்டவன் சுபாவ ஞானி. அதிருக்கட்டும்—இடையா, அரண்மனைக்கு எப்பொழுதாவது போயிருக்கிறாயா?

ந. இல்லை, உண்மையில்.

அச். ஆனால் நீ நரகத்துக்குத்தான் போகவேண்டும்.

ந. இல்லை, அப்படி யிராதையா, நான்—

அச். உண்மையில், நெருப்பில் வீழ்ந்த நாகப் பழத்தைப்போல், நீ நரகத்தில் வீழ்ந்து நாச மடையவேண்டியதுதான்.

ந. அரண்மனைக்குப் போகாததற் காகவா? உம்முடைய காரணத்தைக் கூறும்.

அச். ஏன், ஒரு பொழுதும் அரண்மனைக்குப் போ யிராவிட்டால் நீ நடந்துகொள்ளவேண்டிய மார்க்கத்தைப் பார்த்திருக்க

மாட்டாய்; நடக்க வேண்டிய மார்க்கம் பார்த்திராவிட்டால் தப்பான மார்க்கத்திற் செல்வாய்; தப்பான மார்க்கத்திற் சென்றால் பாபமாம்; பாபம் செய்தால் நரகத்திற்குப் போக வேண்டும். அப்பா, இடையா, உன்பாடு கஷ்டந்தான்.

ந. அப்படி ஒருகாலு மில்லை, அச்சுதரே: நாட்டுப்புறத்து நடவடிக்கை எப்படி அரண்மனையில் ஹாஸ்யத்துக்கு இடங் கொடுக்கிறதோ, அப்படியே அரண்மனையின் ஆசார மெல்லாம் நாட்டுப்புறத்தில் நகைப்புக் கிட மாகும்; அரண்மனையில் நாங்கள் நமஸ்காரஞ் செய்வ தில்லை, கையைக் கண்ணில் ஒத்திக் கொள்வது, என்று கூறினீரே: அரண்மனையில் இருப்பவர்கள் இடையர்களானால் அந்த மரியாதை அசங்கியத்திற் கிடமாகும்.

அச். காரணம்? விரைவிற்சொல், என்ன காரணம் பற்றி?

ந. ஏன்? எந் நேரமும் நாங்கள் ஆடு மாடுகளுடன் பழகி வருகிறோம், அவைகளின் அழுக்கு எந் நேரமும் எங்கள் கையி லிருக்கும்.

அச். ஏன்? அரண்மனை வாசிகள் கையில் வியர்வை உண்டாகிற தில்லையா? மனிதனுடைய வியர்வையைப்பார்க்கிலும் மாட்டின் அழுக்கு என்ன கெட்டுப்போய்விட்டது? பிரயோஜன மில்லை, பிரயோஜன மில்லை, வேறே நல்ல காரணத்தைச் சொல்; அப்பா, வா.

ந. அதுவு மல்லாமல் எங்கள் கைகளெல்லாம் கரடு முரடா யிருக்கும்.

அச். அப்படியானால் உங்கள் கண்களில் அவைகள் நன்றாய் உறுத்தும்; பிரயோஜன மில்லை மறுபடியும்; இன்னும் நல்ல காரணத்தைத் தேடிப்பார், வா.

ந. அதல்லாமல், ஆடு மாடுகளின் சாணம் எங்கள் கைகளில் பெரும்பாலும் படிந்திருக்கும்; மாட்டின் சாணத்தையா கண்



ணில் ஒத்திக்கொள்ளச் சொல்கிறீர் எங்களை? அரண்மனை வாசிகளின் கைகளிலோ புனுகு பூசி யிருப்பார்கள்.

அச். ஒன்றும் தெரியாதவன் நீ! இடையர்களுக்குள் எல்லாம் பொறுக்கி யெடுத்த மடையன் நீ! புத்திசாலியாகிய என்னிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள். சாணத்தைவிட புனுகு அசங்கியமானது, ஓர் வித பூனையின் அழுக்குடை மலமாகும்.—இடையா, வேறு காரணத்தைச் சொல்.

ந. உங்களோடே வாதாட என்னால் முடியாது, ஐயா; நான் பேசாமல் உட்காருகிறேன்.

அச். அப்படியே பேசாமல் நரகத்துக்குப் போக இச்சைப் படுகிறாயா? மூடாத்மா, சுவாமி உன்னை ரட்சிப்பாராக! நீ மிகவும் கெட்டுப்போ யிருக்கிறாய்; அவர்தான் உன்னைக் குணப் படுத்த வேண்டும்.

ந. ஐயா, நான் உண்மையாக ஊழியம் செய்பவன்; நான் சாப்பிடுவதைச் சம்பாதிக்கிறேன், உடுத்திக் கொள்வதை விலைக்கு வாங்குகிறேன்; ஒருவரோடும் விரோதப்படுவதில்லை, ஒருவருடைய சந்தோஷத்தைக்குறித்தும் பொறாமைப்படுவதில்லை; மற்றவர்கள் சுகத்தைக்கண்டு சந்தோஷப்படுகிறேன், எனக்கு என்ன கஷ்டம் வந்தாலும் தலை விதி யென்று பொறுத்திருக்கிறேன்; எனக்குப் பெரிய சந்தோஷம் என்னவென்றால், என்னுடைய ஆடு மாடுகள் நன்றாய் மேய்வதையும் குட்டிகள் நன்றாய்ப் பால் குடிப்பதையும் காண்பதேயாம்.—இதோ, என் புதிய எஜமானியின் அண்ணன், கானமேதி வருகிறார்.

ஒரு ஓலையைப் படித்த வண்ணம் ராஜீவாட்சி வருகிறான்.

ரா. சுந்தரியைப் படைத்து மேனோ, ஒளிர்
சந்திரனைப் படைத்தா னேயோ?—அவள்
நயனத்தைப் படைத்து மேனோ
கயல்தனைப் படைத்தா னேயோ?—அவள்

புருவத்தைப் படைத்து மேனோ, வில்
உருவத்தைப் படைத்தானேயோ ?—அவள்
அதரத்தைப் படைத்து மேனோ, அந்த
உதிரத்தைப் படைத்தானேயோ ?—ராத்ரி
வாட்சியைப் படைத்து மேனோ, எனக்கிக்
காட்சியைக் கொடுத்தானேயோ ?

அச். அடடடடடா! இந்த மாதிரி எட்டு வருஷம் இடைவிடாது பாடுவேனே நான், சாப்பிடுகிற வேளை தூங்குகிற வேளை தவிர; கடைக்குப் போகும்பொழுது இடைச்சிகூட இம்மாதிரி பாடிவிடுவாளே.

ரா. ஏதோ பாடு பார்ப்போம்.

அச். இதோ ஒரு மாதிரிக்காக.—

மங்கையைப் படைத்து மேனோ, வன்
மறலியைப் படைத்தானேயோ ?—அந்த
நங்கையைப் படைத்து மேனோ, கொடும்
நஞ்சினைப் படைத்தானேயோ ?—அவன்
அங்கையைப் படைத்து மேனோ, ஒளி
அரவிந்தம் படைத்தானேயோ ?—அவன்
செங்கையைப் படைத்து மேனோ, அச்
செவ்வனல் படைத்தானேயோ ?
கங்கையை யணியு மீசா—நான்
காரண மென்ன சொல்வேன்!

அந்த மாதிரி சும்மா ஓடும். அதிருக்கட்டும்.—இது எங்கே அகப்பட்டது உங்களுக்கு ?

ரா. பொறு, மதிகெட்ட மடையா, ஒரு மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கக் கண்டேன்.

அச். ஆனால் அந்த அழகிய மரம் இந்த அழுகிய பழத்தைத்தான் தருவதுபோலும்.



ரா. அம் மரத்துடன் உன்னை ஒட்டு போடுகிறேன், உன்னுடைய அதனப்பிரசங்கித்தனம் அதற்கும் ஒட்டிக்கொள்ள; பிறகு உன்னைப்போல் அதுவும் பிஞ்சியிலே பழுத்து பாதி முதிர்வதன்முன் அழுகிப்போகும்; அதனப்பிரசங்கிகளுக்கு நேரிடும் கேடு அதுதான்.

அச். நீங்கள் சொல்லி யாச்சுது, தப்போ ஒப்போ இக் காடுதான் தீர்மானிக்கவேண்டும்.

ரா. பொறு! இதோ தங்கை வருகிறாள் ஏதோ படித்துக் கொண்டு; ஒரு பக்கமா யிரு.

*சுசீலை ஒருஓலையைப் படித்தவண்ணம் வருகிறாள்.*

சு. [பாடுகிறாள்.]

காரண மேதீ தாரண்ய மாகச்
சிறந்திடு மானுட ருறைந்திடா ததுவோ ?
அன்றே, அன்றே; குன்றிய மதியேன்
புண்ணியம் பலபல நண்ணிய மொழியின்
ஈட்டஞ் சிலசில பூட்டுவ னின்றே:
நீரினி லெழுத்தினை நேரிய தியாக்கை;
நீரினிற் றிரைபோற் சிரிரிந் திடுமே;
மன்னு வானிடை மின்னல்போன் மாந்தர்
காந்தொளிர் குவரா னிரந்தர மற்று;
நீடிய மரங்களிற் கூடிய கிளைகளில்
அரிவையின் பெயரைத் தெரிய வமைப்பேன்.
நிலவிடு முலகினிற் குலவிய வுத்தம
மேவையு மொருங்காய்ப் பாவை யாக்கிடவே
அனைத்தும் புரப்பான் நினைத்திவ் வணங்கை
கண்ணக னிந்த மண்ணினில் விடுத்தான்:
அன்னம் வெட்கிடு வன்ன நடையும்,
போதி லுறையு மாதிள நகையும்,
அனைத்து வனப்பையு நினைத்துச் சேர்த்து

மங்கையோர் பாகனிக் கங்கையைப் படைத்தான்!
ஒருகா லென்னை முருகார் குழலாள்
திரும்பிப் பார்த்தும் வருந்திடே லென்று
தேரிட யானுங் கூறிடா ளோர்மொழி;
உருகா மனத்தேனைக் கருதாள்! கருதாள்!
நிறைந்து தருக்க ளுறைந்த வனமே!
எல்லா மறிந்து சொல்லாய் நீயே.
வானாத் துயரினுக் காளா யானும்
வீவே னந்தோ வீவே னந்தோ.

ரா. ஹா! கருணைக் கடவுளே!—இதென்ன பாரதமா ராமாயணமா பாடியது? முடிந்ததா? அல்லது இன்னும் ஏதாவது மிகுதி யிருக்கிறதா?

சு. யார் அது? நீயா!—ஐயா கோனாரே, சற்று அப்புறம் போயிரும்.—அச்சுதா, நீயும் போ அவருடன் கடிதினில்.

அச். ஐயா, வாரும்; கடிதினில் போகாவிட்டாலும் கடிதத்தோடாவது போவோம். முழு மரியாதையோடு போவோம்; இல்லாவிட்டால் பாதி சந்திரனோடு போகவேண்டிவரும்.

[அச்சுதனும், நந்தக்கோனும் போகிறார்கள்.]

சு. இப் பாட்டுகளைக் கேட்டனையா நீ?

ரா. நன்றாய்க் கேட்டேன் எல்லாப் பாட்டுகளையும்! கேட்டுக் கேட்டு என் காதெல்லாம் புண்ணா யிருக்கிறது.—அதிலும் ஒவ்வொரு பாட்டிற்கும் அவைகள் தாங்க முடியாதபடி எத்தனை அடிகள்!

சு. அடிமேல் அடி வைத்தால்தானே அம்மியும் நகரும்.

ரா. எத்தனை அடி வைத்தாலும் முடமா யிருந்தால் எப்படி நகரும்?

சு. அதிருக்கட்டும். இக் காட்டு மரங்களிலெல்லாம் உன் பெயர் செதுக்கப்பட்டு, அவைகளின் கிளைகளில் தொங்கும் பாட்டு



களிலெல்லாம் உன் பெயர் வரையப்பட் டிருக்கிறதைக் கேட்க உனக்கு ஆச்சரியத்தைத் தர வில்லையா?

ரா. அந்த ஆச்சரியம் அடங்கி ஆறு நாட்க ளாயின. இதோ ஒரு பனைமரத் தடியில் நான் கண்டு எடுத்ததைப் பார். கம்பனுக்குப் பிற்பாடு எந்த வம்பனும் என்னை இவ்வாறு வர்ணித்த தில்லை.

சு. இந்த வேலை யார் செய்தது தெரியுமா உனக்கு?

ரா. இது செய்தது ஓர் ஆடவனா?

சு. அவன் கழுத்தில் நீ ஒருகால் அணிந்திருந்த ஹாரம் இருக்கிறதா? என்ன முகத்தைத் திருப்பிக்கொள்ளுகிறாய்?

ரா. விளையாட் டிருக்கட்டும். வேண்டுகிறேன் உன்னை, யார் சொல்.

சு. ஈசனே! ஈசனே! காதலர் சந்திப்பது மிகவும் கடினமான விஷயம். ஆயினும் பெரு மலைகளும் பூகம்பங்களினால் பிடுங்கப்பட, அவர்கள் சந்திக்க நேரிடலாம்.

ரா. அதெல்லா மிருக்கட்டும், யார் அது, சொல்.

சு. ஏனடி, உண்மையில் உனக்குத் தெரியாதே?

ரா. தெரியாது, உன்னை மிகவும் நயந்து வேண்டிக்கொள்கிறேன், அது யார் என்று என்னிடம் சொல்.

சு. என்ன ஆச்சரியம்! ஆச்சரியத்திலு மாச்சரியம்! இதைப் பார்க்கிலும் ஆச்சரியம் என்ன இருக்கப்போகிறது? இந்த ஆச்சரியத்தை வர்ணிக்க ஒருவராலும் முடியாது!

ரா. என் வெட்கத்தை வெளியிற் சொல்வது எங்ஙனம்! ஆண் வேடம் தரித்ததினால் ஆடவர்களுக்குரிய குணமும் என்னிடமிருப்பதாக எண்ணுகிறாயா என்ன? அரைக்ஷணம் தாமதிப்பா யாயினும் என் ஆத்திரம் அடங்காது. அவர் யார் என்று விரைவிற் கூறு. வேண்டுகிறேன் உன்னை. கூறி யாவது கொட்டு வெளியில் அவரை; அப்படியாவது உன்

வாய்க்குள் ஒளித்து வைத்திருப்பவர் வெளியே வரட்டும், சிறிய கழுத்தையுடைய புட்டியினின்றும் சிவந்த மது வருவதுபோல—எல்லாம் ஒன்றாயாவது அல்லது ஒன்றுமில்லாமலாவது. உன் வாய் மூடியைத் திறந்துவிடு, அதனுள்ளேயிருக்கும் அமிர்தத்தை நான் கொஞ்சம் பருகட்டும்.

சு. அது இனி உனக் கேன்? யார் வாயமுதம் வேண்டுமோ அவர்தான் வந்துவிட்டாரே!

ரா. போடி! சொல் லென்றால்? எப்படிப்பட்ட மனிதர் அவர்? உயரமா யிருப்பாரா? குட்டையா யிருப்பாரா?

சு. நடுத்தரம்!

ரா. சிவப்பா யிருப்பாரா, கறுப்பா யிருப்பாரா?

சு. மா நிறம்!

ரா. சிறு பிள்ளையா, வய தானவரா?

சு. இரண்டு மல்ல.

ரா. போடி! என்னை வேண்டுமென்றே ஏளனம் செய்கிறாய்!

சு. இல்லை இல்லை! ராதூவா, அன்றைத்தினம் மல்ல யுத்தன் பலத்தையும் உன்னுடைய மனத்தையும் ஒருங்கே ஒரு க்ஷணத்தில் வென்ற உத்தமனாகிய அமரசிம்ஹரே!

ரா. என்ன! ஏளனம் அப்புறம் இருக்கட்டும்; உண்மையை இப்பொழுதாவது உரை, உத்தமியே.

சு. உண்மையில் அவர்தான், அடி!

ரா. அமரசிம்ஹரா?

சு. அமரசிம்ஹரே!

ரா. ஐ ஐயோ! இந்த ஆண்வேடத்தில் அவர் என்னைப் பார்த்துவிட்டால் என்ன செய்வது?—நீ அவரைப் பார்த்தபொழுது என்ன செய்துகொண் டிருந்தார்? என்ன சொன்னார்? எப்படி யிருந்தார்? என்ன உடையில் இருந்தார்? அவர் இங்



கேன் வந்தார்? என்னைப்பற்றி கேட்டாரா? அவர் எங்கே இருக்கிறார்? எப்பொழுது போனார் உன்னைவிட்டு? மறுபடியும் நீ அவரை எப்பொழுது பார்ப்பாய்? ஒரு வார்த்தையில் பதில் சொல் எனக்கு.

சு. அதற்கு, முதலில் நீ ஆதிசேஷனுடைய நாவை இரவல் வாங்கிக்கொடுக்கவேண்டும் எனக்கு!; அப்படிப்பட்ட ஒரு வார்த்தை இவ்வுலகத்தில் ஒருவர் வாயிலும் கொள்ளாது. நீ கேட்டதற் கெல்லாம், இல்லை ஆம் என்று சொல்வதற்கே, ஒரு ராமாயண வினா விடையாகும்.

ரா. அது போனாற்போகிறது. அவருக்கு நானிங்கு ஆரண்யத்திலிருப்பது தெரியுமா? ஆண்வேடத்துடனிருப்பதை அறிவாரோ? அன்றைத்தினம் மல்ல யுத்தம் செய்தபொழுதிருந்த தேக ஆரோக்கியத்துட னிருக்கிறாரா?

சு. காதல் வலைக்குட்பட்டவர்களுடைய கேள்விகளுக்குப் பதில் உரைப்பதைவிட இவ்வண்டத்திலுள்ள அணுக்களையெல்லாம் கணக்கிடலாம்! ஆயினும் நான் கண்டபடி சிலவற்றைக் கூறுகிறேன், கவனமாய்க்கேட்டுக் களிகூறு. நான் பார்த்தபொழுது ஒரு விருட்சத்தின் கீழிருந்தார், அதனின்றும் நழுவிய பழத்தைப்போல்.

ரா. அவ்விருட்சம் அமரருலகத்து அரிச்சந்தானமா யிருக்க வேண்டும் அத்தனை அழகனைப் பெறுவதற்கு!

சு. நான் சொல்வதைக் கேளம்மா கொஞ்சம்.—

ரா. சொல், சொல்.

சு. அங்கே படுத்திருந்தார், ரணகளத்தில் சயனிக்கும் காயம் பட்ட சுத்த வீரனைப்போல்.

ரா. அக் காட்சியைக் காண்பது கஷ்டமா யிருந்தபோதிலும், அந்தத் தரை மிகவும் புண்ணியம் பண்ணி யிருக்கவேண்டும்!—

சு. கொஞ்சம் உன் நாவை அடக்கிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்; அது காலம் அகால மறியாமல் துடிக்கிறது. கையில் வில்லுட னிருந்தார்.

ரா. அந்தோ! மங்கை என் மனத்தை வெல்ல வந்திருக்கிறார்.

சு. உன் பின்பாட் டில்லாமலே என் பாட்டைப் பாடத் தெரியுமெனக்கு. என் பாட்டை முடிக்கிறேனே! அப்புறம் உன் பாட்டை ஆரம்பி.

ரா. அக்காள், நான் பெண்பால் என்றதை மறந்தாயோ? மனத்தில் ஒன்றை நினைத்தால் அதை வாய்திறந்து பேசாமலிருக்க முடியுமோ?—கண் ணல்ல, அப்புறம் சொல்.

சு. நீ எங்கே என்னைப் பேசவிடுகிறாய்? பொறு! அதோ அவரே இங்கு வருகிறார்போ லிருக்கிறதே!—

ரா. ஆம், ஆம்! அவர்தான், நாம் ஒளிந்திருந்து கவனிப்போம் அவரை.

[சிலேயும் ராஜீவாட்சியும் ஒரு பக்கமாய்ப் போகிறார்கள்.]

அமாசிம்ஹனும், ஜகந்நாதரும் வருகிறார்கள்.

ஜ. ஐயா, என்னுடன் சம்பாஷித்ததற்காக வந்தனம் செய்கிறேன். ஆயினும் நான் தனியா யிருந்தால் மிகவும் சந்தோஷ முள்ளவனாயி ருந்திருப்பேன்.

அ. நானும் அப்படியே, ஆயினும் மரியாதையின் பொருட்டு நான் உமக்கு வந்தனம் செய்யவேண்டி வருகிறது.

ஜ. சுவாமி உம்மை ரட்சிப்பாராக! நாம் ஒருவரையொருவர் அதிகமாகச் சந்தியாமலிருந்தால் நலமாயிருக்கும்.

அ. நாம் ஒருவரை யொருவர் பாராமலே இருந்தால் மிகவும் நலமா யிருக்கும்.

ஜ. எனது காட்டி லுள்ள மரங்களிலெல்லாம் உமது பாட்டுகளை



எழுதிப் பாழாக்கா திருக்கும்படி வேண்டுகிறேன் உம்மை நான்.

அ. எனது பாட்டி லுள்ள பதங்களையெல்லாம் பகுத் தறிந்து படிக்கத்தெரியாது பாழாக்காதிருக்கும்படி வேண்டுகிறேன் உம்மை நான்.

ஜ. ராஜீவாட்சியா உமது காதலியின் பெயர்?

அ. ஆம், அப்படித்தான்.

ஜ. அவள் பெயர் எனக் கிஷ்ட மில்லை.

அ. அவள் தாய் தந்தையர் அவளுக்கு அப் பெயரை வைத்தபொழுது உமக்கு இஷ்டமான பெயரை வைக்கவேண்டும் என்னும் யோசனை அவர்களுக் கில்லை.

ஜ. எவ்வளவு உயரமிருப்பாள்?

அ. என் காத லளவு உயரம்.

ஜ. நன்றாய்ப் பதிலுரைக்கிறீர்; எங்கு குருட்டுப்பாடம் செய்தீர் இப்படிப்பதில்களை யெல்லாம்?

அ. இம்மாதிரியான கேள்விகளையெல்லாம் எந்தப் புஸ்தகத்தினின்றுப் குருட்டுப்பாடம் செய்தீரோ அந்தப் புஸ்தகத்தி லிருந் தன்று.

ஜ. புத்திசாலி நீர்; அந்தப் புத்தியை ஜாக்கிரதையாய் வைத்திரும். இல்லாவிட்டால் பறந்தோடிப்போம். வருகிறீரா, நாம் இருவரும் உட்கார்ந்து நம்மை இப் பாழுங் கதிக்குக் கொண்டுவந்த உலகத்தை வெறுப்போ மிருவரும்?

அ. நான் என்னை யன்றி உலகிலுள்ள ஒரு பிராணியையும் வெறுக்கமாட்டேன். என்னிடமே அதிக குற்ற மிருப்பதை நன்றாய் அறிவேன் நான்.

ஜ. உம்மிடத்திலுள்ள முக்கியமான தீய குணம் இம்மாதிரியாகக் காதல் வலைக்குட்பட்டதே

அ. அந்தத் தீய குணத்தை உமது முக்கியமான நற் குணத்துடன் மாற்றிக்கொள்ளமாட்டேன். போய்வாரும், போதும் உமது சகவாசம்.

ஜ. உண்மையை உரைக்குமிடத்து, நான் உம்மைக் கண்டபொழுது, ஒரு மூடனைத் தேடிக்கொண்டிருந்தேன்.

அ. அதோ அந்த ஜலத்தில் மூழ்கிப்போயிருக்கிறான் ஒரு முழு முண்டம்; உற்றுப் பாரும், உள்ளே தெரியும் அவன் உருவம்.

ஜ. அங்கே என்னுருவந்தான் தெரியுமெனக்கு.

அ. அதைத்தான் கூறினேன்.

ஜ. சரி! உம்முடன் இனிப் பேச எனக் கிஷ்டமில்லை! நான் வருகிறேன், ஐயா, காதலரே

அ. சரி! நீர் போகப் புறப்பட்டது சந்தோஷம்! போய் வாரும் ஐயா, சோகை பிடித்தவரே.

[ஜகந்நாதன் போகிறான்.]

சுசீலையும் ராஜீவாட்சியும் முன்னால் வருகிறார்கள்.

ரா. [சுசீலைக்கு ஒரு புறமாக] குறும்பனைப்போல் அவருடன் கலந்து பேசி அவரை என்ன ஆட்டம் ஆட்டிவைக்கிறேன்பார்.—ஐயா, வனவாசியாரே, கேட்கிறதா?

அ. நன்றாய்க் கேட்கிறது,—என்னவேண்டும் உனக்கு?

ரா. என்ன மணி யிருக்கு மிப்பொழுது? கொஞ்சம் தெரிவிக்க வேண்டும்.

அ. என்ன நாழிகை யிருக்குமென்று கேட்டிருக்கவேண்டும். காட்டில் ஏதாவது கடியாரம் இருக்கிறதா மணி பார்த்துச்சொல்ல?

ரா. இவ்வளவுதானா? ஆனால் உண்மையான காதலன் ஒருவனுமில்லை இக்கானகத்தில்; இல்லாவிடின் கணப்பொழுது கணப்பொழுதாய்க் கழிவதை கடியாரத்தைப்போல் கணக்கிட்டு கஷ்டத்தோடு செல்லும் காலத்தைக் கடிந்து கசிந்துருகமாட்டானா?



அ. கடுகிச் செல்லும் காலத்தை என்று ஏன் கூறலாகாது? அங்ஙனம் கூறுவதும் சரி யாகுமல்லவா?

ரா. எவ்விதத்திலும் அவ்வண்ணமாகாது ஐயா, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாகக் காலம் கழிகிறது. சில பெயருக்குச் சுலபமாய் நடக்கிறது, சில பெயருக்கு மெல்ல நகருகிறது, சில பெயருக்கு அதி வேகமாய் ஓடுகிறது, சில பெயருக்கு நகருகிறதே யில்லை.

அ. யாருக்கு மெல்ல நகருகிறது? சொல் பார்ப்போம்.

ரா. ஏன்! கலியாணப் பெண்ணுக்கு, கலியாணம் நிச்சயித்த பிறகு கலியாணமாகிறவரையில் காலமானது மெல்ல நகருகிறது; இடையில் ஏழு தினங்களிருந்தபோதிலும்! அவை கஷ்டத்துடன் கழிவது ஏழு யுகம்போலத் தோன்றும்.

அ. யாருக்குச் சுலபமாய்க் கழிகிறது?

ரா. வடமொழி யறியாத வாத்தியாருக்கும், வயிற்று வலி யில்லாச் செல்வனுக்கும்; ஒருவன் படிக்கத் தெரியாது பக்குவமாய்த் தூங்கலாம், மற்றொருவன் கஷ்டமென்பதில்லாமல் இஷ்டப்படி வாழலாம். ஒருவன் தேகத்தை மெலியச் செய்து கஷ்டப்பட்டு படித்தறியவேண்டிய தொன்றுமில்லை. மற்றொருவன் சலித்திடச் செய்யும் வறுமையின் கஷ்டத்தை அறியாதவனாயிருக்கிறான். ஆகவே இவர்களுக்குக் காலம் சுலபமாய்க் கழிகிறது.

அ. யாருக்கு அதி வேகமாய் ஓடுகிறது?

ரா. தூக்கு மரத்துக்குச் செல்லும் குற்றவாளிக்கு; அவன் அடிமேல் அடி வைத்து எவ்வளவு மெல்லச் சென்றாலும் அதி சீக்கிரத்தில் அங்கே போய்ச் சேர்வதாக எண்ணுகிறான்.

அ. யாருக்கு நகருகிறதே யில்லை?

ரா. நியாய வாதிகளுக்கு விடுமுறை காலத்தில்; அக் காலத்தில் அவர்களுக்கு வேலை யொன்று மில்லையா, ஆகவே அவர்களுக்குக் காலம் போகிறதே தெரிகிற தில்லை அப்பொழுது.

அ. அழகிய வாலிபனே, நீ எங்கே வசிக்கிறாய் ?

ரா. இதோ இருக்கும் இடைச் சிறுமியாகிய என் தங்கையுடன், இக் காட்டின் ஓரத்தில் வசிக்கிறேன்.

அ. இவ்விடத்தில் பிறந்து வளர்ந்தவனா ?

ரா. பிறந்த இடத்திலேயே வசிக்கும் தேரையைப்போல் இவ்விடத்தில்தான் நான் வசிக்கிறேன்.

அ. நாகரீகத்திற்கு வெகு தூரத்தில் இருக்கும் இவ்விடத்தில் நடமாடுபவர்களின் வாக்கினும் உன் வார்த்தை நயமாக இருக்கிறதே ?

ரா. அப்படியே அநேகர் கூறக்கேட்டிருக்கிறேன். சந்யாசியான என் சிறிய தகப்பனார் வயோதிகர் ஒருவர் என்னை வளர்த்து வந்தார்; அவர் தன் சிறு வயதில் பட்டணத்தில் வசித்தவர்; அரண்மனை வாசிகளின் நடவடிக்கை யெல்லாம் நன்றா யறிந்தவர்; அரண்மனையி லிருந்தபொழுது காதல் வலைக்குள் அகப்பட்டவர், காதலைப்பற்றி அவர் பன் முறை கடிந்து கூறியதைக் கேட்டிருக்கிறேன். அப்பா ! அம்மட்டும், பொதுவில் ஸ்திரீகளைக் குறித்து அவர் கூறிய குற்றங்களுக்கெல்லாம் இலக்காக அவனியில் என்னை அணங்காக சிருஷ்டியாததின்பொருட்டு, ஜகதீசனுக்கு ஸ்தோத்திரம் செய்கிறேன்.

அ. ஸ்திரீகளைப்பற்றி முக்கியமான தூஷணமாக அவர் என்ன எடுத் துரைத்தார், ஞாபக மிருக்கிறதா உனக்கு ?

ரா. முக்கியமென்பது ஒன்று மில்லை; ஒரு செல் மற்றொரு செல்லை ஒத்திருப்பதுபோல் எல்லாம் சமமா யிருந்தன, ஒவ்வொரு துர்க் குணமும் அதற்குச் சமானமான மற்றொரு



துர்க்குணத்தை எடுத்துக் கூறும்வரையில் அகோரமானதாய்த்தான் தோன்றும்.

அ. அவைகளில் சிலவற்றை எடுத்துக் கூறு, நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரா. மாட்டேன், நோ யில்லாதவர்களுக்கு என் ஔஷதத்தை விருதாவாகக் கொடுக்கமாட்டேன். இக் காட்டில் யாரோ ஒரு மனிதன் நடமாடுகிறான், அவன் இங்குள்ள எமது இள மரங்களின் பட்டைகளி லெல்லாம் ராஜீவாட்சி என்னும் பெயரைச் செதுக்கி, அவைகளைப் பாழாக்குகிறான். வேல மரங்களி லெல்லாம் வெண்பாக்களையும், அரச மரங்களி லெல்லாம் ஆசிரிய விருத்தங்களையும், கட்டித் தொங்கவிடுகிறான், எல்லாம் இந்த ராஜீவாட்சியைத் தெய்வ மடந்தையாக வர்ணித்து,—இந்தக் காதலால் மதி யற்ற மனிதனை நான் சந்திப்பேனாயின், நானவனுக்குத் தக்க புத்திமதி கூறுவேன். அவன் ஆசை யென்னும் பிசாசு நன்றாய்ப் பற்றியவனாகக் காண்கிறான்.

அ. அந்த ஆசைப் பிசாசத்தினால் ஆட்டப்பட்டவன் நான்தான்; அதை அகற்றும் விதத்தை எனக்குச் சொல்.

ரா. எனது சிறிய தகப்பனார் கூறிய குறிகள் ஒன்றும் உம்மிடத்தில் காணோமே ! காதல் வலையிற் பட்டமனிதனைக் கண்டறியும் விதத்தை எனக்கவர் கற்பித்திருக்கிறார்; நீர் அந்த வலையிற் சிக்கியவர் அன்று என்று உறுதியாய்க் கூறுவேன்.

அ. என்ன குறிகள் அவர் கூறியது ?

ரா. கன்னம் வாடி யிருக்கவேண்டும், அது உமக்கில்லை; கண் மஞ்சளாய்க் குழிந் திருக்கவேண்டும், அது உமக் கில்லை வார்த்தை யாடுவதில் விருப்ப மில்லாதவராயிருக்கவேண்டும், அப்படி யில்லை நீர்; முகத்தில் தாடி வளர்ந்திருக்கவேண்டும், அதுவும் உமக்கில்லை,—ஆனால் ஒரு வேளை சிறிய வயதாகையால் உமக்கது இல்லா திருக்கலாம்; ஆகவே அந்தவிஷயத்

தில் உம்மை மன்னித்துவிடுகிறேன்.—அப்புறம், உமது தலை குட்டை பிரிந்திருக்கவேண்டும்; சோக்காய் கிழிந் திருக்கவேண்டும்; அங்கவஸ்திரம் அவிழ்ந்திருக்கவேண்டும்; பாதரட்சை மாறி யிருக்கவேண்டும்; உம்மிடத்தில், எல்லாம், நீர் ஒன்றையும் கவனியாதபடி அல்லலிற் பட்டதாக எடுத்துக் காட்டவேண்டும். நீர் அப்படிப்பட்டவரன்று; அதை விட்டு உம்மிடத்தில் எல்லாம் சரியாய் ஒழுங்கா யிருக்கிறது. உம்மீதே காதல் கொண்டவராகக் காணப்படுகிறீரே யொழிய வேறொருத்தியின்மீது காதல் வைத்தவராகக் காணோம்.

அ. அழகிய சிறுவனே, உண்மையில் நான் காதல் கொண்டிருக்கிறேன் என்பதை நீ நம்பும்படிச் செய்வதெப்படி?

ரா. நானாவது அதை நம்புவதாவது! அதைவிட நீர் எவள்மீது காதல்கொண்டிருக்கிறீரோ அவள் அதை நம்பும்படிச் செய்யலாம். அவள் அதை வெளியிற் கூறாவிட்டாலும் உள்ளுக்குள் நம்புவாள் என்று நான் கூறக்கூடும்; ஏனெனில் ஸ்திரீகள் மனத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு வெளியில் ஒன்றை உரைக்கும் விஷயங்களில் இது வொன்றாகும்! அதிருக்கட்டும்,—விருட்சங்களி லெல்லாம் ராஜீவாட்சியை அத்தனை வியந்து விருத்தங்களைக் கட்டி வைப்பவர் உண்மையில் தாம்தானா?

அ. என் ராஜீவாட்சியின் அழகிய கரத்தின்மீது ஆணைப்படி, அப்பா, நான்தான் அவன், அந்த அதிர்ஷ்ட ஹீனன் நான்தான்!

ரா. ஆனால் உமது கவிகள் கூறுகிறபடி அவ்வளவு காதல்கொண்டிருக்கிறீரோ நீர்?

அ. அற்ப கவிகளாலாமோ அழி வற்ற என் காதலை அளவிட!

ரா. காதல் என்பது ஓர் வித பயித்தியம், நானுமக்குக் கூறுகிறேன், பயித்தியம் பிடித்தவர்களைக் கை கால்களைக் கட்டி



பத்திரமாய் அடைத்துவைப்பதுபோலவே காதல் கொண்டவர்களையும் கட்டிவைக்கவேண்டும். ஆனால் மனிதர்கள் அப்படி ஏன் சிக்ஷிக்கப்பட்டு சுவஸ்தப்படுகிறதில்லை என்றால், இந்த வியாதி சர்வ சாதாரணமானது; ஆகவே சிக்ஷிக்க வேண்டியவர்களும் அதன் வலையில் சிக்கினவர்களாயிருக்கிறார்கள்; ஆகவே யார் சிக்ஷிப்பது? ஆயினும் தக்க புத்திமதியினால் அப் பயித்தியத்தைப் போக்கலாம் என்பது என் கோட்பாடு.

அ. அப்படி யாரையாவது குணப்படுத்தினையா எப்பொழுதாவது?

ரா. ஆம், ஒருவரை இவ்விதம் குணப்படுத்தினேன். அவர் என்னைத் தன் காதலி என்று எண்ணிக்கொண்டு, தினம் அக்காதலியுடன் எப்படிப் பேசிவருவாரோ, அப்படிப் பேசிவரும்படி கட்டளையிட்டேன். அந்தச் சமயங்களில், சிறுவயதுடையவனாயிருந்தமையால் பெண்பிள்ளையைப்போல் நடித்து வருவேன், துக்கிப்பேன், அடிக்கடி மாறுவேன், ஏக்கங்கொள்வேன், இச்சைப்படுவேன்; ஒருவேளையில் கர்வத்தோ டிருப்பேன், பித்தம் பிடித்ததுபோ லிருப்பேன், மர்க்கடகத்தைப்போல் காரணமின்றி அடிக்கடி மாறுவேன், ஒருவேளை கண்ணீர்விட்டழுவேன், ஒரு வேளை சிரிப்பேன், ஒவ்வொரு குணத்திலும் கொஞ்சம் மேற்கொள்வேன், ஆயினும் உண்மையில் எந்தக் குணத்திற்கும் ஆட்படமாட்டேன்.—பெரும்பாலும் சிறுவர்களும் ஸ்திரீகளும் இத்தகை குணம் வாய்ந்த அத்தனை ஆடுமாடுகளே.—ஒரு சமயம் விரும்புவேன். ஒரு சமயம் வெறுப்பேன், பிறகு அவரைச் சந்தோஷிப்பேன், அப்புறம் ஆணையிட்டு மறுப்பேன்; ஒருவேளை அவருக்காகத் துயரப்படுவேன், பிறகு காறித்துப்புவேன். இம்மாதிரியாக என் காதலரை நான் ஆட்டின ஆட்டத்தில் காதல் என்னும் பயித்தியத்தை விட்டு, மெய்யான பயித்தியத்தின்மீது காதலிக்கச் செய்தது அவரை, அதனால் அவர்

இவ் வுலக வாழ்வை யெல்லாம் வெறுத்தவராய் முடிவில் சன்யாசம் வாங்கிக் கொண்டு தனியாகக் கானகத்தில் வாழ்ந்துவந்தார். இவ்விதமாக சுவஸ்தப்படுத்தினேன் அவரை; இம் மாதிரியாக உம்மையும் குணப்படுத்தி உம்மைப் பற்றியிருக்கும் காதல் என்னும் பேயை இருந்தவிடம் எட்டிப் பாராதபடி ஓட்டி விடுகிறேன் பாரும்; பிறகு உம்முடைய ஹிருதயத்தில் அணுவளவு காதலும் அகப்படுவது அசாத்தியமாம்.

அ. அப்பா, இதிலெல்லாம் சுவஸ்தம் அடையேன் நான்.

ரா. நான் சுவஸ்தப்படுத்துகிறேன் பாருமே; நீர்மாத்திரம் என்னை ராஜீவாட்சி என்றழைத்து, தினம் என்னிருப்பிடம் வந்து அவளுடன் காதலோடு பேசுவதுபோல் என்னுடன் பேசிவாரும்.

அ. என் காதலின்மீ தாணைப்படி அப்படியே ஆகட்டும்; எங்கே உன் வீடு, சொல்.

ரா. வாரும் என்னுடன் அங்கு, அதைக் காண்பிக்கிறேன். வழியில் போகும்பொழுது நீர் எங்கே இருக்கிறீர் என்று எனக்குச் சொல்லவேண்டும்.—போவோமா ?

அ. சந்தோஷமாய்ப் போவோம், அப்பா.

ரா. ஏ! அது உதவாது. என்னை ராஜீவாட்சி என் றழைக்கவேண்டும்.—தங்காய், வருகிறாயா போவோம் ?

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---



## மூன்றாவது காட்சி.

இடம்—காட்டில் மற்றொரு புறம்.

அச்சுதனும், ஆதிரையும் வருகிறார்கள்;

ஜகந்நாதன் சற்று தூரத்தில் அவர்களைக் கவனித்தவண்ணம் நிற்கிறான்.

அச். வா, சீக்கிரம் ஆதிரை; நான் உனது ஆடுகளையெல்லாம் மடக்கிக் கொண்டுவருகிறேன், ஆதிரை. என்ன சொல்லுகிறாய் ஆதிரை ? உனது மனத்திற் கிசைந்த ஆள் நான் தானா? என்னுடைய முகம் உனக்குச் சம்மதமா யிருக்கிறதா?

ஆ. உம் மொகமா ! டீயம்மா ! என்னா மொகம் ?

அச். கம்பர் வம்பர்களின் மத்தியில் கம்பங் கொல்லையைக் காத்ததுபோல், நான் உன்னுடனும் உனது ஆடு மாடுகளுடனும் எனது நாட்களைக் கழிக்கிறேன்.

ஜ. [ஒரு புறமாக] அத்தனை அறிவும் எத்தனை ஹீனமான இடத்தில் வசிக்கிறது!—உலகாளும் மன்னன் ஓட்டைக் குடிசையில் வசிப்பதுபோல்!

அச். ஒருவன் பாடும் கவிகளின் அர்த்தத்தை மற்றவர்கள் தெரிந்து கொள்ளாவிட்டாலும், ஒருவனுடைய புத்தியின் நுட்பமானது மற்றவர்களின் அறிவினால் உய்த் துணரப்படாவிட்டாலும், அதைப் பார்க்கிலும் தௌர்ப்பாக்கியமான ஸ்திதி வேறொன்றும் கிடையாது, அதைவிட உயிர்விடலாம்.—உன்னைக் கற்றறிந்த காரிகையாகச் சிருஷ்டித்திருக்கலாகாதா ஜகதீசன் !

ஆ. கெட்டறிந்த காரிகெ, இன்னா எனக்குத் தெரியலே, அது என்னா நல்லதுதானா, ஒக்கியந்தானா ?

அச். அது எப்படியாவ திருக்கட்டும், நான் உன்னைக் கலியாணம் செய்துகொள்ளுகிறேன். அதற்காக, பக்கத்துக் கிராமப் புரோகிதர் மார்த்தாண்ட ஐயரைப் போய்ப் பார்த்தேன்.

அவர் நமக்குக் கலியாணம் செய்யும்பொருட்டு காட்டில் இவ்விடத்தில் என்னைச் சந்திப்பதாக வாக்களித்தார்.

ஜ. [ஒரு புறமாக] இந்த சந்திப்பைப் பார்க்க நான் மிகவும் ஆவல் கொண்டிருக்கிறேன்.

மார்த்தாண்ட ஐயர் வருகிறார்.

அச். வாருங்கள், மார்த்தாண்ட ஐயர்; ரொம்ப சந்தோஷம் உம்மைச் சந்தித்தது. இந்த மரத்தின் கீழேயே எங்களைக் கலியாணம் செய்துவிடுகிறீரா, அல்லது உங்களுடன் உங்களுடைய கோவிலுக்குப் போகவேண்டுமா?

மா. இந்தப் பெண்ணைத் தாரை வார்த்துக் கொடுக்க ஒருவருமில்லையா இங்கே?

அச். எவனும் தாரை வார்த்த பெண்ணை நான் கலியாணம் செய்து கொள்ளமாட்டேன்.

மா. உண்மையில் அவளைத் தாரை வார்த்துதான் கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் அது சாஸ்திரோக்தமான கலியாணமாகாது.

ஜ. [அவர்கள் எதிரில் வந்து] நடத்தும், நடத்தும். நான் அவளைக் கொடுக்கிறேன்.

அச். வாருங்கள், வாருங்கள். உங்கள் பெயரென்ன? க்ஷேமமா தானே? உங்களைப் பார்த்தது ரொம்ப சந்தோஷம் ஆச்சுது.

ஜ. நீ என்ன கடிமணம் புரியப்போகிறாயா? பயித்தியம்!

அச். ஆம், ஐயா; மாட்டிற்கு முகத்தடி யிருக்கிறது. குதிரைக்குக் கடிவாளம் இருக்கிறது; யானைக்கு அங்குச மிருக்கிறது: அதுபோல மனிதனுக்கு இந்தக் கால்கட்டிருக்கவேண்டும்.

ஜ. கற்றறிந்த உன்னைப்போன்றவன், காட்டில் புதரின்கீழ் பிச்சைக்காரனைப்போலவா கலியாணம் செய்துகொள்ளுகிறது? கோயிலுக்குப்போய், கலியாணம் என்பது இன்னது என்று உனக்கு உரைக்கத் தக்க ஒரு உத்தம பிராம்மணனைப் பார்.



இவன் உங்களுக்குச் சரியாகக் கலியாணம் செய்து வைக்க மாட்டான்.

அச். [ஒரு புறமாக] அப்படியானால் இவன் கலியாணம் செய்து வைப்பதே எனக்குத் திருப்தியாகும். ஏனெனில், கலியாணச் சடங்கைச் செய்ய இவனுக்குச் சரியாகத்தெரியாது, ஆகவே சடங்கு சரியாகப் பூர்த்தியாகாவிட்டால், இவள் என் பெண்ஜாதி யல்லவென்று இவளை விட்டுப் பிரிவதற்குத் தக்க ஓர் சாக்காகும்.

ஜ. வா என்னுடன், உனக்குத் தக்கபடி புத்தி சொல்லுகிறேன்.

அச். வாடி, கண்ணே ஆதிரை, நமக்குக் கலியாண மாகவேண்டும். இல்லாவிட்டால் விபசார மாகும்.—ஐயா, ஐயரவாள், நீர் போய் வாரும்.

ஐயோ! என் நாதா
என் மேல் வாதா
நான் செய்த தீதா?

அன்று—

ஐயா, நமஸ்காரம்
இது திரஸ்காரம்
ஆகவே நீர் போய்வாரும்!

[ஜகந்நாதன், அச்சுதன், ஆதிரை போகிறார்கள்.]

மா. போகட்டும், பெரிதல்ல. இந்தப் படுக்காளிப் பயல்களுடைய பரிஹாசத்திற் கெல்லாம் பயந்து என் உத்தியோகத்தை விட்டுவிடுவேனா என்ன? [போகிறான்.]

காட்சி முடிகிறது.

---

## நான்காம் காட்சி.

இடம்—காட்டில் மற்றொரு புறம்; ஓர் குடிசை எதிரில்.

ராஜீவாட்சியும், சுசீலையும் வருகிறார்கள்.

ரா. என்னுடன் பேசாதே, நான் அழுவேன்.

சு. என் கண்ணல்ல, அழு கொஞ்சம், நான் வேண்டிக்கொள்ளுகிறேன்;—ஆயினும் ஓர் ஆடவனுக்கு அழுகை அமைந்த தன்று என்பதை மாத்திரம் கொஞ்சம் தயவுசெய்து கவனி.

ரா. ஆனால் நான் துக்கப்படக் காரணமில்லையா?

சு. துக்கப்படவேண்டுமென்று விரும்புவோருக்கு எவ்வளவு காரணம் வேண்டுமோ அவ்வளவு காரண மிருக்கிறது!—ஆகவே நீ சுகமாய்த் துக்கப்படு.

ரா. அவரது தலை மயிர் கோரையாயிருக்கிறது. அதனாலேயே அவரது மோசம் செய்யும் குணம் வெளியாகிறது.

சு. அதையேன் வாய்விட்டுச் சொல்கிறாய்? "கோரை குடி கெடுக்கும்" என்று நானும் கேட்டிருக்கிறேன்.

ரா. ஆயினும் உண்மையைக் கூறுமிடத்து வழவழப்பாய் அழகாய்த்தா னிருக்கிறது.

சு. நல்ல காந்தியை யுடையது, "பம்பை பால் வார்க்கும்" என்று கேள்விபட்டதில்லையா?

ரா. அவர் பரிவுடன் முத்த மிடும்பொழுது உடல் முழுதும் பரிசுத்தம் செய்வதுபோலல்லவோ இருக்கிறது.

சு. அப் பரிசுத்த மென்பதே அவரது ஆதாரமாகச் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறதே. அருந்ததியே அவருக்குச் சமானமாக மாட்டாள். அமலம் என்னும் அக்னி அவரிடம் குடிகொண் டிருக்கிறது.

ரா. ஆயினும் இன்று காலை வருவதாகச் சத்தியம் செய்துவிட்டு இன்னும் ஏன் வந்திலர்?



சு. அது சரிதான்.—அவரிடம் மெய்யென்பதேது!

ரா. அப்படி நினைக்கிறாயா நீ?

சு. சந்தேகமென்ன? ஆசாமி யோக்கியர்தான், முடிப்பு கத்தரிக்கமாட்டார், கன்னக் களவுசெய்யமாட்டார்; கன்னிகைகளின் மனத்தைக் களவு செய்வதிலோ நிபுணர். ஆகவே காதலின் உண்மை விஷயத்தில் யானை யுண்ட விளாங்கனி தான்,—உள்ளே ஒன்று மிராது.

ரா. காதல் விஷயத்தில் அவரை நம்பலாகாதென்று கூறுகிறாய்?

சு. காதல் கொண்டிருக்கும் விஷயத்தில் நம்பலாம், ஆனால் அவர் இப்பொழுது காதல் கொண்டில்லை.

ரா. உண்மையில் காதல் கொண்டிருப்பதாகச் சத்தியம் செய்ததை நீ கேட்டாயே?

சு. இருந்தது இருப்பது அல்லவே! அன்றியும் காதலர்களுடைய சத்தியத்தை நம்புவதினும் கட் குடியர்களின் சத்தியத்தை நம்பலாம். இருவருடைய வார்த்தைகளையும் ஒன்றாகத்தான் கணக்கிடவேண்டும்.—அவர் மஹாராஜாவாகிய உன் தந்தையிடம் இருக்கிறார் போலிருக்கிறது இக் காட்டில்.

ரா. நான் நேற்றைத்தினம் மஹாராஜாவைக் கண்டு அவருடன் அதிக நேரம் சம்பாஷித்தேன். உனது குலம் கோத்திரம் என்னவென்று கேட்டார் என்னை. உமது குல கோத்திரத்திற்குத் தாழ்ந்த தன்று எனக் கூறினேன். அதற் கவர் நகைத்து அனுப்பிவிட்டார் என்னை. ஆயினும் அமரசிம்ஹரைப்போல் ஓர் ஆடவன் இருக்கும்பொழுது பிதாக்களைப் பற்றிப் பேசுவானேன் நாம்?

சு. ஆம், ஆம்; அதிலும் உன் காதலன் என்ன தைரியசாலி! என்ன தைரியமான பாட்டுகள் எழுதுகிறார்! தைரியமாகப் பேசுகிறார்! தைரியமாகச் சத்தியம் செய்கிறார்! தைரியமாக அவைகளினின்றும் தவறுகிறார், தன் காதலியின் மனம்

இரண்டு துண்டாகப் பிளந்துபோகும்படி!—வகை யறியாத வாள்வீரன் ஒருவன் வாளை வீசத் தெரியாது கேடயத்தில் மோதி இரண்டு துண்டமாக ஒடிப்பதுபோல. யௌவனத்தில் எல்லாந் தைரியந்தான், அறிவின்மை உந்தும் பொழுது.—இது யார் இங்கே வருவது ?

நந்தக்கோனன் வருகிறான்.

ந. எஜமானே, எஜமானியே, நீங்கள் பார்த்தபடி, அன்றைத் தினம்தரைமீது என் பக்கத்திலுட்கார்ந்துகொண்டு காதலைப் பற்றிக் கடிந்து பேசி, தன்னை வெறுத்த கர்வம் பிடித்த இடைச் சிறுமியின் குணங்களைப் புகழ்ந்து கொண்டிருந்த இடையனைப் பற்றி, நீங்கள் என்னைப் பலதரம் கேட்டிருக்கிறீர்களல்லவா ?

சு. ஆம்; என்ன அவனைப்பற்றி ?

ந. உண்மையான ஆசையின் ஆவலுக்கும், கர்வத்தோடு கூடிய வெறுப்பின் விரோதத்திற்குமுள்ள வித்தியாசத்தின் வேடிக்கையைக் காணவேண்டுமென்று விருப்பமிருந்தால், அதோ சற்று தூரம் வாருங்கள் என்னுடன். அங்கு நடக்கும் ஓர் நாடகத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறேன் உங்களை.

ரா. ஆம், வா போவோம் அங்கு; மற்றவர் காதலைக் காணுதல் மனத்தில் காதலருக்குத் தமது காதலை விர்த்திசெய்யும்.—அழைத்துப்போ எங்களை, அக் காட்சியைக் காண. அவர்களுடைய நாடகத்தில் நானும் ஒரு முக்கியமான பாத்திரமானதாகக் கூறுவாய் பிறகு நீ. [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---



## ஐந்தாம் காட்சி.

இடம்—அருங் காட்டில் மற்றொரு புறம்.

செல்வக்கோனனும் பத்மினியும் வருகிறார்கள்.

செ. கண்ணே, பத்மினி, என்னை வெறுக்காதே. வேண்டாம், கண்ணே; என்மீ துனக்கு இஷ்ட மில்லையென்று சொல்ல வேண்டுமென்றால், ஆனால் அதை வெறுப்புடன் சொல்லாதே. மனிதர்களைக் கொன்று கொன்று அதைக் கண்டு மனம் கல்லாகிய கொலையாளியும், தலை வணங்கி நிற்கும் மனிதனுடைய கழுத்தின்மீது தன் வாளை வீழ்த்துமுன், தன்னை மன்னிக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறான்; மன்னுயிரைக் கொன்று தன்னுயிரைத் தரிக்கும் அம் மறவனையைப் பார்க்கிலும் நீ கடோர மனதுடையவளா யிருக்கலாமா ?

ராஜீவாட்சியும் சுசீலையும் நந்தக்கோனனும் சற்றுதூரத்தில் வருகிறார்கள்.

ப. உன்னைக் கொல்ல எனக்கு இஷ்டமில்லை. உனக்குக் கெடுதி செய்யக்கூடாதென்றே உன் கண் எதிர்படாமல் ஓடுகிறேன். என் கண்கள் உன்னைக் கொல்கின்றன வென்கிறாயே, என்ன அழகு! என்ன விந்தை! நிரம்ப உண்மை! கண்கள்—கடுகளவு தூசு வந்து விழுவதாயினும் இரப்பையால் தம்மை மூடிக்கொள்ளுகிற அற்பக் கண்கள்—உன்னை ஹிம்சித்து வருத்தி வதைத்துக் கொல்கின்றனவோ? எதோ பார்ப்போம், என்னாலான அளவு உன்னைக் கோபமாய் உறுத்துப் பார்க்கிறேன்.—என் கண்கள் உன்னை ஹிம்சிப்பதானால் உன்னைக் கொல்லட்டும் அவைகள்!—எதோ! மூர்ச்சையாய்ப்போ, கீழே விழ்! அல்லது அப்படிச் செய்ய முடியாமற்போனால், என் கண்கள் கொலை செய்கின்றன என்று பொய் பேசாதே; வெட்கக்கேடு!—எதோ, என் கண்கள் உனக்கு என்ன காயத்தை உண்டுபண்ணின காட்டு,

பார்ப்போம்! ஒரு சிறு ஊசி எடுத்து உன் தேகத்தில் மெல்லக் கீறிப்பார், அதனால் உண்டான வடு காணப்படும்; அற்ப நாணலின்மீது அரை க்ஷணம் சாய், அதனாலுண்டான வடு கொஞ்சம் வினாடியாவது உன் உள்ளங் கையில் தங்கி இருக்கிறது பார்.—என் கண்களோ, அவைகளால் இதோ உன்னை உறுத்துப் பார்த்தேன், உன்னை ஏதாவது காயப்படுத்தினவா அவைகள், இல்லையே? கண்களுக்குக் காயப்படுத்தும்படியான சக்தி கிடையாது என்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன்.

சே. கண்ணே பத்மினி, நீ எப்பொழுதாவது ஒரு வாலிபனைக் கண்டு இக் காதலின் வலைக் குட்படுவாயானால், அப்பொழுது தெரியும், கண்ணுக்குப் புலப்படா அக் காமன் கணைகள் செய்யும் காயத்தின் கடுமை.—அக் காலம் சீக்கிரத்தில் வந்தாலும் வரும் ஒரு வேளை.

ப. ஆனால் அதுவரைக்கும் என் அருகில் வரவேண்டாம்; அந்தக் காலம் வரும்பொழுது, என்னை உன் ஏளனத்தினால் வாட்டு; நீ என்மீது பரிதாப மில்லாதிரு அப்பொழுது; ஏனெனில் அதுவரையில் நான் உன்மீது பரிதாபம் கொள்ளமாட்டேன்.

ரா. [முன் வந்து] ஏன்? ஏன் அப்படி? கொஞ்சம் எனக்குச் சொல்லவேண்டும். துக்கப்படுபவனைக் கண்டு பரிதாபப்படாமல், வைகிறாய், கொக்கரிக்கிறாய், எல்லாம் செய்துவிடுகிறாய் ஒன்றாய்! இப்படிப்பட்ட உன்னை யாரம்மா இந்த உலகத்தில் பெற்றது? உன்னிடம் அழகில்லாவிட்டாலென்ன?—உண்மையில் உலகத்தி லில்லாத அழகு உன்னிடம் ஒன்றையுங் காணோம்.—அதற்காக கர்வம்பிடித்துப் பச்சாத்தாப மில்லா திருக்கவேண்டுமோ நீ?—இதென்ன?—இது என்ன சமாசாரம்? என்னையேன் அப்படிப் பார்க்கிறாய்—சாதாரணமான மற்ற பெண்களைப்போல் தானிருக்கிறாய் நீ! விசேஷம் ஒன்றையும் காணோமே உன்னிடம்.—ஓஹோ!



அப்படியா சங்கதி! தன் கண்ணால் என்னை மயக்கப் பார்க்கிறாள் என்று எண்ணுகிறேன்! அம்மா, அந்த எண்ணத்தை விட்டுவிடு. உன் கரும்புருவமும், கரும் பட்டுக் கூந்தலும், கரு விழியும், கன்னத்தின் அழகும், என்னை வசியப்படுத்தி உன்னைப் பூஜிக்கும்படி செய்யாது.—ஏனப்பா இடையா, மடையனாயிருக்கிறாய், பெருமூச் செறிந்து கண்ணீருடன் இவள் பின்னால் நீ ஏன் திரிகிறாய்? அவளிடம் பெண்களுக் குரிய அழ கிருப்பதைவிட, உன்னிடம் ஆடவர்களுக் குரிய அழகு ஆயிரம் மடங்கு அதிகமாயிருக்கிறது. உலகத்தில் அவலட்சணம் பிடித்த குழந்தைகள் அதிகமாய் நிறைந்திருப்பதற்கு உன்னைப்போன்ற மடையர்கள் தான் காரணம். அவளை முக ஸ்துதியால் கெடுப்பது அவளது கண்ணாடி யல்ல, நீ தான். அவளது அங்கங்கள் அவளது கண்ணுக்குத் தோன்றுவதைவிட, அதிக அழகாயிருப்பதாக அவள் எண்ணிக் கொள்வது, உன்னைப்பற்றித்தான்.—அம்மா, இப்பொழுதாவது உன் நிலைமையை யறிந்து புத்திசாலியா யிரு,—இவ்வளவு நல்லபுருஷன் நமக்குக் கிடைத்தானே என்று உன் இஷ்ட தெய்வத்திற்கு விரதமிருந்து பூஜை செய்!—ஒரு ரகசியம் உனக்குச் சொல்லுகிறேன், காதோடு கேள்.—நல்லபருவத்திலேயே கணவனைத் தேடிக்கொள்.—இந்தச் சரக்கு எப்போதும் விலைபோகும் என்று எண்ணாதே! போ, அவனை மன்னிப்பு கேட்டுக்கொள், அவன்மீது ஆசையாயிரு. அவன் வேண்டுகோளுக் கிணங்கி அவனை மணம் செய்துகொள். கெட்ட கர்வத்திலெல்லாம், மற்றவர்களைத் திரஸ்கரிப்பதுதான் கேடுகெட்ட கர்வம்.—அப்பா இடையா, போ, அவளை மணம்புரி—நான் வருகிறேன்.

கண்ணுக் கினிய வாலிபனே, நான் வேண்டிக் கொள்ளுகிறேன்!—என்னைக் கடிந்துபேசு, எத்தனை காலம் வேண்டுமென்றாலும். இவன் என்னோடு காதலுடன் பேசுவதிலும் நீ என்னைக் கடிந்துபேசுதல் எனக்கு விருப்பமாயிருக்கிறது.

ரா. அவளுடைய அவலட்சணத்தைப்பார்த்து அவன் ஆசைப் பட்டதுபோல், என் கோபத்தைக்கண்டு என்மீது காதல் கொள்வான்போலும்; அப்படியானல், முகத்தைச் சுளித்து உனக்குப் பதி லுரைப்பதற்கெல்லாம் வட்டியுடன் நான் வாங்கிவிடுகிறேன், என் கடூரமான வார்த்தைகளால் அவ ளைக் கசக்கி—ஏனடி, என்னை அப்படிப் பார்க்கிருய்?

ப. உன்மீது நான் கொண்டிருக்கும் வெறுப்பினலன்று.

ரா. இப்பொழுதே சொன்னேன், ஜாக்கிரதை!—என்மீது ஆசைப்படவேண்டாம். கள்ளைக் குடித்துவிட்டு அசத்தியம் பேசுவோரைவிட அதிக மோசக்காரன் நான்.—அன்றியும் உன்மீது எனக்கு விருப்பமில்லை.—என் இருப்பிடம் உனக் குத் தெரியவேண்டுமானல், அதோ அந்த அசோக மரத் தருகில் இருக்கிறது, அருகாமையில்.—தங்காய், போக லாமா நாம்?—அப்பா, இடையா, விடாதே அவளை!—வா, தங்காய்,—அடி இடைச்சி, பட்சத்துடன் பார் அவனை, வீணுகக் கர்வப்படாதே! அவனைவிட கண் மழுங்கினவர் ஒருவரு மில்லையென்று உலகத்துக்கெல்லாம் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. எங்கள் மந்தையிடம் வந்து சேர்.

[ராஜீவாட்சி, சசிலை, நந்தகோ னுன் போகிருர்கள்.]

ப. மடிந்த மதனை! இப்பொழுது அறிகிறேன் உனது பாணத் தின் வன்மை, "கண்டவுடன் காதல் கொள்ளார், பிறகு எக்காலம் காதல் கொண்டார்?"

சே. கண்ணே, பத்மினி,—

ப. ஆ!—என்ன சொல்கிருய்?

சே. என் கண் ணல்ல,—என்மீது கொஞ்சம் பச்சாத்தாபப்படு.

ப. ஏன்! உன்னைப் பார்க்கும்பொழு தெனக்கு வருத்தமாகத் தானிருக்கிறது, அப்பா.



சே. எங்கு வருத்தம் உண்டாகிறதோ அங்கு அதற்குப் பரிஹார மும் உண்டாகும். நான் காதலால் துயரப்படுவதைக் கண்டு துக்கப்படுவதானல், நீ என்மீது காதல் கொள்ளுமிடத்து, உன் துக்கமும் என் துயரமும் இரண்டும், இருந்த இடம் தெரியாது பறந்துபோம்.

ப. சரி, உன்மீது பட்சமாயிருக்கிறேன், — அது நீ வேண்டுவ தற்கு அருகாமையி லில்லையா?

சே. நீயே வேண்டுமே எனக்கு.

ப. சீ! அதுபே ராசை யாகும்.—அதுபோகட்டும்.—முன்பு ஒருகால் உன்மீது வெறுப்புகொண்டிருந்தேன்.—ஆயினும் இதற்குள் உன்மீது விருப்பம் கொண்டுவிட்டேன் என்று எண்ணிவிடாதே. ஆயினும், நீ காதலைப்பற்றி நன்றாய்ச் சம் பாஷிக்கக் கற்றிருக்கிறபடியால், உன்னேடுபேசுதல் முன்பி ருந்ததுபோல் அவ்வளவு வெறுப்பாகஇல்லை இப்பொழுது, ஆகவே நான் உன்னைப் பொறுத்து, உனக்கு வேலையிடப் போகிறேன் இப்பொழுது. இவ ளிட்ட வேலையைச் செய் கிறேமே என்கிற திருப்திதா னிருக்க வேண்டுமுனக்கு, வேறுவிதத்தில் உன்னைத் திருப்திசெய்வேன் என்று எண் ணுதே நீ, தெரியுமா?

சே. நான் கொண்டிருக்கும் காதலோ பரிசுத்தமும் பரிபூரணமு மானது, என் காதலிக்கோ யென்மீது கருணையென்பது சிறிதுமில்லை. ஆகவே ஒன்றுமில்லான் ஒருவன் நெற் கதிர் களையெல்லாம் மற்றொருவன் அறுத்துக்கொண்டுபோனபின் சிதறிக்கிடக்கும் தானியங்கள் கிடைத்தலே பெரும்பாக்கியம் என் றெண்ணுவதுபோல, எப்பொழுதாவது என்னைக் கடைக் கண்ணுற் பார்த்தாற் போது மெனக்கு; அதைக் கொண்டு நான் உயிர் தரித்து வருவேன்.

ப. சற்று முன்பாக என்னுடன் பேசின பிள்ளையாண்டான் யார் தெரியுமா உனக்கு?

சே. நன்றாய்த் தெரியாது.—ஆனால் அவரை அடிக்கடி நான் பார்த்திருக்கிறேன். அந்தக் கிழவன் காளனுடைய குடிசை நிலம் முதலியவற்றை அவர்தான் விலைக்கு வாங்கியிருக்கிறார்.

ப. நான் அவனைப்பற்றி கேட்கிறேனே என்று, அவன்மீது நான் காதல் கொண்டிருப்பதாக எண்ணிவிடாதே—கோபக்காரப் பையன் அவன்—ஆயினும் நயமாகப்பேசுகிறான்—பேச்சினால் எனக்கென்ன ஆவது?—இருந்தாலும் கேட்பவர் காதுக்கினிப்பாய் ஒருவன் வார்த்தையாடினால், அந்த வார்த்தைகள் நன்மை பயக்கின்றன. அவன் அழகாய்த்தானிருக்கிறான்,— ஆயினும் நிரம்ப அழகல்ல,—ஆயினும் உண்மையில் மிகுந்த கர்வி, ஆனால் அந்தக்கர்வம் அவனுக்கு ஏற்றதாயிருக்கிறது. வயதில் நல்ல புருஷன் ஆவான்.—அவன் அழகிலெல்லாம் அவனுடைய மேனிஇருக்கிறதே, அதுதான் மிகவும் ரம்யம். அவன் வாயினால் வைததை யெல்லாம் அவன் கண் பார்வையானது சரிப்படுத்திவிட்டது.—உயரம் இல்லை அவன்—ஆயினும் அவன் வயதுக்குத் தக்க உயரந்தான்.—கால்கள் ஒரு மாதிரியாயிருக்கின்றன, ஆயினும் அழகாய்த்தானிருக்கின்றன.—அவனது அதரம் என்ன அழகாய்ச் சிவந்திருந்தது! கன்னத்தைவிட அதிக சிவப்பாயிருந்தது, கோவைக் கனியைப்போல் சற்றேனும் மாறாத வர்ணமாக; சாதாரணமாக ஸ்திரீகள், நான் அவனைக் கவனித்த வண்ணம் கவனித்திருந்தால்—ஒவ்வொரு அவயவமாய்—சற்றேறக்குறைய அவன்மீது காதலை கொண்டிருப்பார்கள்.— எனக்கோ அவன்மீது விருப்பமுமில்லை. வெறுப்புமில்லை.—ஆயினும் நான் அவனை விரும்புவதைவிட வெறுப்பதற்கு அதிக காரணம் உண்டு.—அவன் என்னை வைது பேசவேண்டிய காரணமென்ன?—என் கண் கறுப்பாயிருக்கிற தென்றான், கேசம் கறுப்பா யிருக்கிற தென்றான். எனக்கு இப்பொழுது ஞாபகம் வருகிறது, என்னை ஏளனமுஞ்செய்தான். நான் அதற்கு உடனே ஏன் பதில்



உரைக்க வில்லையென்று எனக்கு இப்பொழுது ஆச்சரியமாயிருக்கிறது—அதனால் ஒன்றும் கெட்டுப் போகவில்லை, பதில் சொல்லாவிட்டால் மன்னித்ததாகாது. அவனை நன்றாய் வைது நான் ஒரு லிகிதம் எழுதுகிறேன், நீ அதை அவனிடம் கொண்டுபோய்க் கொடு. செய்கிறாயா நீ?

சி. அப்படியே ஆகட்டும், சந்தோஷமாய்ச் செய்கிறேன், பத்மினி.

அ. உடனே அதை எழுதுகிறேன்.—எழுதவேண்டியதெல்லாம் என் மனத்தில் இருக்கிறது, என் ஹிருதயத்திலுமிருக்கிறது. ஒரு சிறிய கடிதமாய் நன்றாய்த் திட்டி எழுதுகிறேன்.—நீ வா என்னோடு. [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---

# நான்காவது அங்கம்.

:o:

## முதல் காட்சி.

இடம்—அருங் காடு.

ராஜீவாட்சி, சுசீலை, ஜகந்நாதன் வருகிறார்கள்.

ஜ. அழகிய குழந்தாய், உன்னை இன்னும் நன்றாய் அறிய விரும்புகிறேன்.

ரா. நீர் சோகை பிடித்தவரென்று சொல்லுகிறார்களே:

ஜ. ஆம் அப்படிப் பட்டவனே நான். எந்நேரமும் சிரித்துக் கொண்டிருப்பதைவிட சோகையோடிருப்பது எனக் கிஷ்டம்.

ரா. எந்நேரமும் சிரித்துக் கொண்டிருப்பவர்களும், எந்நேரமும் சோகை பிடித்துத் திரிபவர்களும், கேடுகெட்டவர்

களே. அப்படிப்பட்டவர்கள் எல்லாவித நிந்தைகளுக்கும் இலக்காகிறார்கள், ஓயாக்குடியர்களை விட அதிகமாய்.

ஜ. ஏன், சோகை பிடித்துச் சும்மா யிருந்தல் எவ்வளவு சுகம்!

ரா. அப்படியானால் அதைவிட சுவராயிருத்தல் மிகவும் சுகமாகும்.

ஜ. எனக்கிருக்கும் சோகை பண்டிதர்களுக் குண்டாகிறதே முந்தும் தன்மையைப்பற்றி, அம்மாதிரியான தன்று; சங்கீத வித்வான்களுக் குண்டாகிறதே சமயோசிதமாய் மனம் போனவழி, அம்மாதிரியானது மன்று; மந்திரிகளுக் குண்டாகிறதே மதச்செருக்கால், அம்மாதிரியானது மன்று; போர்வீரர்களுக் குண்டாகிறதே பேராசையால், அம்மாதிரி யானதுமன்று; நியாயவாதிகளுக் குண்டாகிறதே கட்சிக்காரர்களின் கண்ணில் மண்ணைப்போட, அம்மாதிரி யானது மன்று; காரிகைகளுக் குண்டாகிறதே அவர்கள் கவினை எடுத்துக்காட்ட, அம்மாதிரியானதுமன்று; எல்லாக் காரணமும் ஒன்றாய்ச்சேர்ந்து காதலர்களுக் குண்டாகிறதே, அம்மாதிரியானது மன்று; எனக்கிருக்கும் சோகை இவைகளெல்லா மின்றி எனக்கே சொந்தமான ஒரு விதமானது, அநேக சொல்ப விஷயங்கள் சேர்ந்து உண்டானது இந்தச் சோகை, அநேகம் வஸ்துக்களிலிருந்து பொறுக்கி எடுக்கப் பட்டது, நான் ஆங்காங்கு தேச சஞ்சாரம் செய்ததனால் அடைந்த பலனது; நான் ஆங்காங்கு அறிந்த விஷயங்களை யெல்லாம் பற்றி அடிக்கடி யோசிக்க என்னை ஒருவிதமான வேடிக்கையான சோகையானது சூழ்கிறது.

ரா. ஊர் சுற்றினவரா? ஆனால் இந்த உன்மத்தம் உமக் கிருக்க வேண்டியதுதான். உம்முடைய நிலங்களை விற்று மற்றவர்களுடைய நிலங்களைப் பார்க்கப் போயிருந்தாற் போலிருக்கிறது. எல்லாவற்றையும் கண்டும் ஏழையாயிருப்பது, கண் செய்த பாக்கியம், கைசெய்த துரதிர்ஷ்டம்.



ஜ. அப்படியா? அதனால் என்னுடைய உலக அனுபவம் அதிகப்பட வில்லையா?

ரா. அப்படி அனுபவம் அதிகமாகி இவ்வாறு சோகை பிடிக்கச் செய்தது. அனுபவ முணர்ந்தவன் என்னை அந்தச் சோகத்திற்கு ஆளாக்குவதைவிட, ஒரு சடையன் என்னைச் சந்தோஷப்படுத்துவதை விரும்புவேன். அதுவும் அப்படிப் பட்ட அறிவைப்பெற ஆங்காங்கு தேச சஞ்சாரம் செய்ய வேண்டுமா?

அமரசிம்ஹன் வருகிறான்.

அ. கண்ணே, ராஜிவாட்சி! க்ஷேமம்தானா?

ஜ. என்ன! நீர் பேசுவது உமக்குத்தான் அர்த்த மாகும்; நான் வருகிறேன்.

ரா. போய்வாரும் ஐயா தேசாந்திரியாரே, வாய் கோணிப் பேசும்; வகை யற்ற வஸ்திரங்களையெல்லாம் அணியும்; உமது நாட்டி லுள்ள நன்மைகளையெல்லாம் பழித்துப் பேசும்; நீர் பிறந்ததற்காக உம்மை வெறுத்துக் கொள்ளும்; உமக்கு இக்கோலம் கொடுத்ததற்காக ஈஸ்வரனை இழிவு படக்கூறும்; இல்லாவிட்டால் நீர் படகேறி பலதேசங்களுக்குப் போயிருந்ததாக நான் எண்ணமாட்டேன்.

[ஜகந்நாதன் போகிறான்.]

அதிருக்கட்டும்.—இதென்ன பிராணநாதா! இத்தனைநேரம் எங்கே போயிருந்தீர்?—நீரும் ஒரு காதலனா?—இன்னொரு முறை இங்ஙனம் மோசம் செய்வீராயின் என் கண்முன் வர வேண்டாம் நீர்.

அ. கண்ணே, ராஜீவாட்சி, நான் கூறியதற்கு ஒரு மணிக் குள்ளாக வந்து விட்டேனே.

ரா. காதல் விஷயத்தில் ஒரு மணி சாவகாசம் தவறுவதாவது! ஒரு கணப்பொழுதை ஆயிரம் கூறாக்கி, அந்த ஒரு கூறில்

ஆயிரத்தி லொருபங்கு காலம் கழித்து வருவாராயின், காதல் என்கிற காற்று அவர் மீதடித்ததாகக் கூறலாம், அவ்வளவே, அந்த வலைக் குட்பட்டவராகக் கூறலாகாது அவரை.

அ. கண்ணே, ராஜ்வாட்சி, என்னை மன்னிப்பாய்.

ரா. சரி, போம். இப்படித் தாமதஞ் செய்வதானால் தாம் என் முன்பாக இனி வரவேண்டாம். இதைவிட ஒரு நத்தை என்மீது காதல் கொள்வதை விரும்புவேன்.

அ. ஒரு நத்தையா ?

ரா. ஆம், நத்தைதான்; அது மெல்ல நகர்ந்து வந்தபோதிலும், தன் விட்டையும் தன்னுடன் கொண்டுவருகிறது. ஒரு பெண்ணுக்கு நீர் கொடுக்கக் கூடிய ஸ்திரீதனத்தைவிட அதிகமாகத்தான் கொடுக்கிறது அது.

அ. என்னுடைய ராஜ்வாட்சி இவ்வாறு என்மீது கோபங்கொள்ளமாட்டாள்.

ரா. நான்தானே உம்முடைய ராஜ்வாட்சி?

சு. அப்படி உன்னை அழைத்தல் அவருக்கு வேடிக்கையாயிருக்கிறது. அவருக்கு உன்னைவிட உத்தமமான ராஜ்வாட்சி ஒருத்தியிருக்கிறாள்.

ரா. சரி, வாரும், வாரும்; இப்பொழுது சந்தோஷத்துடனிருக்கிறேன். இப்பொழுது என்னை வேண்டுவீராயின் உமது வேண்டுகோளுக்கு உடன்படுவேன்.—நான் உம்முடைய சொந்த, சொந்த, ராஜ்வாட்சியாயிருந்தால், இப்பொழுது என்னுடன் என்ன பேசுவீர்?

அ. ஏதாவது பேசுவதன்முன்பு முதலில் முத்தம் கொடுப்பேன்.

ரா. சே! அது தவறு; முன்பு ஏதாவது பேசுதல்தான் நலம். மேலே பேசுவதற்கு சமாசாரம் அகப்படாவிட்டால், அப்பொழுது முத்தங் கொடுப்பதைப்பற்றிப் பார்க்கலாம்: பெருஞ் சபைகளில் பிரசங்கம் செய்பவர்கள், வார்த்தைகள்



விரைவில் வாராது தடைப்பட்டால், தொண்டையைக் கனைத்துக் கொள்ளுவார்கள்; அம்மாதிரி காதலர்கள், பேசச் சமா சாரம் இல்லாவிட்டால், தப்பித்துக்கொள்ள சுலபமான மார்க்கம் முத்தம் கொடுப்பதேயாம்.

அ. முத்தம் வேண்டாமென்று தடுக்கப்பட்டாலோ ?

ரா. அப்பொழுது நீர் வேண்டவேண்டிவருகிறது. அதன் மூலமாகப் பேச்சு ஆரம்பம் மறுபடியும் !

அ. தன் காதலியைக் கண்ணெதிரில் வைத்துக்கொண்டு எந்தக் காதலனுக்குப் பேசச் சமாசாரம் இல்லாமற்போகும் ?

ரா. நான் உம்முடைய காதலி யாயின் அங்ஙனந்தான் ஆவீர் நீர்.

அ. அதிருக்கட்டும். எனக்கென்ன பதில் சொல்லுகிறாய் ?

ரா. நான் உம்முடைய ராஜ்வாட்சிதானே ?

அ. உன்னை அப்படி அழைப்பதும் எனக்கொரு சந்தோஷத் தைத் தருகிறது, அப்படியாவது அவளைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்க மார்க்கமுண்டாகிறதே என்று.

ரா. சரி, அவளுக்காகப் பதில் சொல்லுகிறேன்;—நான் உம்மை மணம் புரியேன்.

அ. சரி, ஆனால் எனக்காக நான் சாகிறேன்.

ரா. அன்று, உமக்காக மற்றொருவரைச் சாகச்சொல்லும். இந்த உலகம் படைக்கப்பட்டு எத்தனை யுக மாகிறதோ அத் தனை யுகங்களாக, ஒரு பெண்ணின்மீது கொண்ட காதலினால் ஒருவனாவது உயிர் துறந்தா னென்பதைக் கண்டோமில்லை. ராவணன் தலை உருண்டது ராம பாணத்தால்; அதற்கு முன் தன்னா லியன்ற அளவு முயன்றான் மடிய, அவனைவிட அதிக காதல் கொண்டார் யார் ? திரௌபதியின்மீது கொண்ட மையலினாலோ மடிந்தான் கீசகன்?

ஏதோ அவனுக்குப் பீமனுடன் மல் யுத்தம் பிடிக்கவேண்டுமென்று புத்தி போச்சுது, இல்லாவிட்டால் இன்னும் நூறாண்டு வாழ்ந்திருப்பான். மல் யுத்தத்தில் மாண்டதை மடையர்களாகிய பாரத மெழுதியவர்கள், திரௌபதிதான் அதற்குக் காரணம் என்று எழுதிவைத்தார்கள். இதெல்லாம் பொய். மண்ணுலக முண்டானது முதல் எத்தனையோ மனிதர்கள் மடிந்திருக்கிறார்கள், மண்ணாய்ப்போயிருக்கிறார்கள்—ஒருவனாவது காதலால் மாண்டதாகக் காணோம்.

அ. என்னுடைய நிஜமான ராஜீவாட்சி இம்மாதிரி எண்ணாதிருப்பாளாக! ஏனெனில், அவள் முகத்தைச் சுளித்து என்னை நோக்கினும் என்னுயிர்போம்.

ரா. இக்கரத்தின் மீதாணை! அவள் கோபத்தினால் ஒரு கொசுவும் சாகாது. அது போனால் போகட்டும். வாரும், இப்போது உம்முடைய கோபமில்லாத மன மகிழ்ச்சி யுடைய ராஜீவாட்சியா யிருக்கிறேன்; உமக்கு என்ன வேண்டுமோ கேளும், தருகிறேன்.

அ. ஆனால் என்மீது காதலோடிரு, ராஜீவாட்சி.

ரா. அப்படியே ஆகட்டும்,—வாரம் ஏழு நாளும்.

அ. ஆனால் என்னை மணம்புரிகிறாயா?

ரா. அப்படியே உம்மையும், உம்மைப்போன்ற இருபது பெயரையும்.

அ. என்ன சொல்லுகிறாய்?

ரா. நீர் யோக்யர் அல்லவா?

அ. அப்படித்தான் எண்ணுகிறேன்.

ரா. ஏன், யோக்யர்களுடைய சகவாசம் அதிகமாய விரும்புவது நல்லதுதானே?—தங்காய், இங்கே வா,—நீதான் குருக்



களாம், எங்களுக்கு விவாகம் செய்விப்பாயாம்,—பிராணநாதா, கையைப் பிடித்துக்கொள்ளும்.—என்ன சொல்லுகிறாய், தங்காய்?

அ. ஆமாம், எங்களுக்கு விவாகம் செய்துவிடு.

சு. மந்திரம் ஒன்றும் தெரியாதே எனக்கு.

ரா. ஆரம்பஞ் செய். "ஐயா கலியாண மாப்பிள்ளையே, இந்தக் கன்னிகையை."

சு. ஐயா கலியாண மாப்பிள்ளையே, இந்தக் கன்னிகையைத் தானமாகப் பெற்றுக்கொள்ளுகிறீரா?

அ. அப்படியே செய்கிறேன்.

ரா. ஆம், எப்பொழுது?

அ. ஏன், இப்பொழுதே; நம் மிருவருக்கும் உன் தங்கை எவ்வளவு விரைவில் விவாஹஞ் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில்.

ரா. ஆனால், சொல்லும். "நான் இந்தக் கன்னிகையைத் தானமாகப் பெற்றுக்கொண்டேன்" என்று.

அ. நான் இந்தக் கன்னிகையை தானமாகப் பெற்றுக்கொண்டேன்.

ரா. உமக்கு மந்திரமெல்லாம் சரியாகத் தெரியுமா என்று கேட்கலாம். ஆயினும், உம்மை எனது பிராணநாதனாக ஏற்றுக்கொண்டேன் என்று நானே சொல்லிவிடுகிறேன், குருக்கள் கேளாததற்கு முன்பாக. உண்மையில் மங்கையரின் மனமானது அவர்கள் செய்கைகளுக்கு முந்திச் செல்கிறது.

அ. எல்லோருடைய எண்ணங்களும் அப்படித்தான். மனோவேகத்திற்கு மிஞ்சியது எது?

ரா. அதிருக்கட்டும், கலியாண மானபின் எத்தனை காலம் அவளுடன் கூடி வாழ்வீர், சொல்லும் எனக்கு.

அ. எப்பொழுதும்.

ரா. எப்பொழுதும் என்பதைவிட்டு ஒரு பொழுது என்று கூறும். ஐயா, ஆடவர் சமாசாரம் எல்லாம் நான் நன்றாயறிவேன். கலியாண மாகிறவரையில் காதல்தான், பிறகு ஆசை அறுபதுநாள், மோகம் முப்பதுநாள், இந்தத் தொண்ணூறு நாட்களும் கழிந்தால்-என்று சொல்லுகிறார்களே அம்மாதிரிதான். அதிருக்கட்டும், இப்பொழுதே சொல்கிறேன் கேளும். துர்க்கிதேசத்து ஆண் புறா தன் பெட்டையிடம் கொள்ளும் பொறாமைபோல, நீர் வேறொருத்தியைக் கண்ணெடுத்துப் பார்த்தாலும் பொறாமைப்படுவேன், மழையின் வரவைக்கண்டுமயில்குதூகலிப்பதுபோலகுதூகலிப்பேன், மந்தியைப்போல மணிக்கொருதரம் குணம் மாறுவேன், குரங்கைப்போல் கண்டதை யெல்லாம் விரும்புவேன், காரணமின்றிக் கதறி அழுவேன், அதுவும் நீர் சந்தோஷமாயிருக்கும்பொழுது; கழுதைக்குட்டியைப் போல் சிரிப்பேன், அதுவும் நீர் நித்திரையை விரும்புங்கால்.

அ. அப்படி யெல்லாம் செய்வாளோ என் ராஜீவாட்சி?

ரா. என் மீதாணைப்படி, நான் செய்கிறபடி யெல்லாம் அவள் செய்வாள்.

அ. அவள் புத்திசாலி யாயிற்றே!

ரா. அப்படி யிருப்பதினாற்றான் இப்படிச் செய்ய யுக்தி யுண்டாகிறது; எவ்வளவு புத்தி அதிகமோ அவ்வளவு யுக்தி அதிகம். ஒரு ஸ்திரீயின் புத்தியை நீர் எவ்விதமாகத் தளையிட்டு வைத்தபோதிலும் எந்த வழியிலாவது தப்பித்து வெளியில் ஓடும்.

அ. அப்படிப்பட்ட மதியையுடைய மங்கையை மனைவியாக ஒருவன் பெற்றால், அவன் கதி அதோகதிதான்!

ரா. எந்தக் கதிக்கு வந்தாலும் நாவொன்றிருக்குமளவும் அதற்கு நியாயம் ஒன்று கூறிவிடுவாள். தானிழைக்கும் தவறெல்லாம் தன் புருஷனால்தான் நேர்ந்தது என்று எடுத்துக்கூறச்



சக்தி யற்றவள் தன் குழந்தைக்குப் பாலூட்டி வளர்க்கத் தக்கவளல்ல; ஏனெனில் அப்படிப்பட்டவள் தன் மகனை மடயனாக வளர்ப்பாள்.

அ. ராஜீவாட்சி, நான் வருகிறேன். இன்னும் இரண்டு மணி நேரம் உன்னைவிட்டுப் பிரிந்திருக்கவேண்டும் நான்.

ரா. ஐயோ! பிராணநாதா! உம்மைவிட்டு நான் எப்படி இரண்டு மணி நேரம் பிரிந்திருப்பேன்?

அ. மஹாராஜா என்னைப் போஜனத்துக் கழைத்திருக்கிறார். சரியாக இரண்டு மணிக்கு உன்னிடம் வந்து சேர்கிறேன்.

ரா. சரி, போம் போம், உம் இஷ்டப்படி. முன்பே தெரியுமெனக்கு இப்படி ஆகுவீரென்று; என் சிநேகிதர்களும் எனக்குச் சொன்னார்கள், நானுமப்படியே எண்ணினேன். ஆயினும் உமது வார்த்தையால் என்னை மயக்கி உம்மை மணம்புரியச் செய்தீர். காதல் தீர்ந்தபின் களைந் தெரியப்பட்ட காரிகைகளுள் நானும் ஒருத்தி; ஆகவே மரணமே என் கதி!—சரியாக இரண்டு மணிக்கா வருவதாகக் கூறினீர்?

அ. ஆம், கண்ணே, ராஜீவாட்சி.

ரா. சரி! உம்மீதாணைப்படி, உண்மையில், சங்கடத்திற்குக் கொண்டுவராத எல்லாச் சத்தியங்களின்மீதும், நீர் கூறியதினின்றும் கொஞ்சமேனும் தவறினபோதிலும், சொன்ன மணிக்கு ஒரு நிமிஷம் பொறுத்து வந்தபோதிலும், உம்மைப்போல் அசத்தியவான் உலகில் இல்லையென்றெண்ணுவேன், உம்முடைய காதலெல்லாம் மேல் வேஷமென்று நினைப்பேன், யாரை நீர் ராஜீவாட்சி என்றழைக்கிறீரோ அவளுடைய காதலுக்குக் கொஞ்சமேனும் ஏற்றவரல்லவென்று மதிப்பேன், பேச்சு தவறினவர்களுடைய பெருங் கூட்டத்தினின்றும் பொறுக்கி யெடுக்கப்பட்டவர் நீரே என்று தீர்மானிப்பேன். ஆகவே எனக்குக் கோபம் வரும் என்று கவனத்தில் வைத்து சொன்னபடி வந்து சேரும்,

அ. அப்படியே, நீ என் சொந்த ராஜ்வாட்சியா யிருந்தால் எப்படி ஜாக்கிரதையாய் வருவேனோ, அப்படியே வருகிறேன். நான் வருகிறேன்.

ரா. சரி, வாரும். காலம் என்கிற நியாயாதிபதி எல்லோரையும் பரீட்சித்துத் தவறிழைப்போர்க்குத் தண்டனை விதிக்கும். ஆகவே காலம் தீர்மானிக்கட்டும். போய் வாரும்.

[அமரசிம்ஹன் போகிறான்.]

சு. ஏனடி ? காதலைப்பற்றி நீ. குளறுவதில், காரிகையர்களை யெல்லாம் வைவதா ? உன் ஆண் வேஷத்தை யெல்லாம் களைந்தெறிந்து, அணங்காய்ப் பிறந்த ஒருத்தி அரிவைகளை யெல்லாம் என்ன அவமானம் செய்தாள் என்று காண்பிக்க வேண்டும் உலகத்தோர்க்கு.

ரா. தங்காய், தங்காய் ! என் சின்ன தங்காய் ! என் நல்ல தங்காய் ! நானவர்மீது கொண்டிருக்கும் காதலின் ஆழத்தை அறிவாயாக ! ஆயினும் அது உன்னால் முடியாது, கடலின் ஆழத்தை அறிவது எங்ஙனம் அசாத்தியமோ, அங்ஙனம் என் காதலின் ஆழத்தையும் அறிவது அசாத்தியம்.

சு. ஆழமே யில்லை, அதுதான் வழிந்துவிடுகிறது, ஏதாவது ஆழமிருந்தா லல்லவோ அதில் நிலைத்திருக்கும்.

ரா. அன்று அன்று, கருப்பையே வில்லாகவும், புஷ்பத்தையே பாணமாகவும், இருளையே வாகனமாகவும், கருங் கடலையே முரசமாகவு முடைய அனங்கனே அறிவான் அரிவை நான் கொண்ட காதலின் திறம்.—தங்காய், உனக்கொரு வார்த்தை சொல்கிறேன். அவரை விட்டு அரைக் கணமும் பிரிந்திருக்க என் மனம் தாளாது. ஏதாவது குளிர்ந்த நிழலை அடைந்து அவர் வருகிறவரையில் நெடிதுயிர்த்துக் காலம் போக்குகிறேன்.

சு. நான்.—தூங்குகிறேன். [போகிறார்கள்.

காட்சி முடிகிறது.

---



## இரண்டாம் காட்சி.

இடம்:—காட்டில் மற்றொரு புறம்.

வேடர்கள் கோலத்தில், ஜகந்நாதனும் மந்திரிகளும் வருகின்றனர்.

ஜ. உங்களில் மானைக் கொன்றது எவன் ?

மு. ம. ஐயா, நான் தான்.

ஜ. சரி, வெற்றி வீரனைப்போல் இவரை நாம் மஹாராஜாவிடம் அழைத்துப் போவோம். இவருக்குப் பின்பாக அந்த மான் கொம்புகளை வெற்றிக் கொடிபோல் பிடித்தால் நலமாகும். —ஐயா, காட்டுவாசியாரே, இதற்குத் தகுந்த பாட்டொன்று மில்லையா உம்மிடம் ?

இ. ம. இருக்கிறது ஐயா.

ஜ. ஆனால் பாடும் அதை ; ராகம் எப்படி யிருந்தாலும் பெரிதன்று, சப்தம் மாத்திரம் அதிகமாக இருக்கவேண்டும்.

இ. ம. [பாடுகிறான்.]

எல்லோரும் ஆடும் வேட்டை
எலி வேட்டை பூனை வேட்டை.
எங்கள் துரை ஆடும் வேட்டை
ஏழுமலை யானை வேட்டை. (நானனை)
குறவஞ்சி என்ன செய்தாள்
கூறவோ நாணுமையோ,
மறவனைக் கண்டு மல்லோ
மன்னவனைக் கைவிட்டாளே. (நானனை)

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது

## மூன்றாம் காட்சி.

இடம்—காட்டில் மற்றொரு புறம்.

ராஜீவாட்சியும் சுசீலையும் வருகிறார்கள்.

ரா. இப்பொழுது என்ன சொல்லுகிறாய்? இரண்டு மணியாகி எத்தனைக் கால மாயது! இன்னும் என் பிராணநாதர் வரவில்லையே!

சு. நான் வாஸ்தவத்தைச் சொல்லுகிறேன் கேள்; உன் பிராணநாதர் மாசற்ற காதலினால் மனங் கலங்கினவராகி, தன்னை வருத்தும் மதனனை வெல்லும் பொருட்டு, கையில் வில்லும் அம்புமாய்ப் போயிருக்கிறார்—தூங்க. அதோ பார், யாரோ வருகிறார்கள் இங்கு.

செல்வக்கோனான் வருகிறான்.

செ. ஐயா, நான் வந்த வேலை உம்மிடம்தான். என் பிரியமுள்ள பத்மினி இதை உம்மிடம் கொடுக்கச் சொன்னாள்.

[ஒரு கிருபத்தைக் கொடுத்து]

அதில் என்ன எழுதியிருக்கிறதோ தெரியாதெனக்கு; ஆனால் அவள் அதை எழுதும்போது புருவத்தை நெளித்து முகத்தைச் சுளித்தவண்ணம் எழுதியதினால், ஏதோ கோபமான விஷய மாகத்தானிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்; என்னை மன்னிக்கவேண்டும்; இக் கடிதத்தைக் கொண்டுவந்ததே யொழிய வேறொரு பாபமு மறியேன்.

ரா. [கடிதத்தை வாசித்து] எப்படிப்பட்டவர்களுக்கும் இக் கடிதத்தைப் பார்த்தால் பொறுமை யெல்லாம் பறந்தோடிப்போய் கோப முண்டாகும்; இதைப் பொறுக்கும் ஜன்மம் எதையும் பொறுக்கும். நான் அழகா யில்லையாம், எனக்கு நன்னடக்கை தெரியாதாம், நான் கர்வம் பிடித்தவனாம், உலகத்தில் வேறு ஆடவனே கிடைக்காவிட்டாலும் அவள் என் மீது ஆசைப்பட மாட்டாளாம். இதென்ன பிராரப்தம்



இவள் என்மீது ஆசைப்பட வேண்[illegible] வது நாடினேனா? எனக் கேன் இவ்வ[illegible] எழுதுகிறாள் இவள்?—சரி, ஐயா கோனாரே, சரிதான், இந்தக் காகிதம் தங்களுடைய யுக்திபோலும்!

செ. இல்லை, அதில் உள்ள தொன்றும் எனக்குத் தெரியாதென்று உறுதியாய்க் கூறுகிறேன், பத்மினிதான் எழுதினாள் இதை.

ரா. போ, போ! நீ ஒரு புத்தி யற்றவன்; அவள்மீது கொண்ட ஆசையால் உன் புத்தியே மாறி யிருக்கிறது. நான் அவள் கையைப் பார்த்திருக்கிறேன். தோல் கை, சாம்பல் வர்ணம்; நான் முதலில் வாஸ்தவத்தில் ஏதோ கைக்கு உறை போட்டிருந்தாள் என்று எண்ணினேன், பிறகே கண்டு பிடித்தேன் அவள் கைதான் அப்படி யிருக்கிற தென்று; நல்ல வேலை செய்த கை; அது போனாற்போகட்டும்.—நான் உறுதியாகக் கூறுகிறேன், இந்தக் கடிதத்தை உற்பத்தி செய்தது அவளல்ல. இது ஒரு ஆடவனது சூழ்ச்சியே, ஆடவன் கை யெழுத்தே.

செ. இல்லை, வாஸ்தவமாக அவளுடையதுதான்.

ரா. இதென்ன? என்ன அட்டகாசம்! என்ன டம்பம்! வாதுக் கழைக்கிறாற்போ லல்லவோ இருக்கிறது! சண்டைக் கல்லவோ அழைக்கிறாள், ஒரு துலுக்கன் தமிழனை அழைப்பதுபோல்! ஒரு ஸ்திரீயினுடைய மிருதுவான மூளையினின்றும், மேலுக்குக் காட்டுவதைவிட உட் கருத்தில் அதிலும் குரூரமா யிருக்கும், கடினமான இந்த ராட்சஸ வார்த்தைகள், உதித்திருக்கமாட்டா.—கடிதத்தைப் படிக்கிறேன் கேட்கிறாயா?

செ. உம திஷ்டப்படி; கடிதத்தை இன்னும் நான் கேட்கவில்லை. பத்மினியின் குரூரத்தைப்பற்றிதான் அதிகமாய்க் கேட்டேன் இதுவரையில்.

ரா. என்னை என்ன குரூரமாய் ஏளனம் செய்கிறாள்! இந்த நீலி என்ன எழுதுகிறாள் கேள், [படிக்கிறான்.]

விண்ணின் றிழிந்து மண்ணி லுதித்தையோ
பெண்ணென் னுடைபேதை மனம் கவர ?—
இம்மாதிரி ஒரு ஸ்திரீ ஏளனம் செய்வாளா ?

சே. இதை ஏளன மென்று சொல்லுகிறீர் ?

ரா. தெய்வத் தன்மையை ஏனோ விடுத்து
தெரிவை யென் மனத்துடன் போர் புரிகின்றாய் ?

இம்மாதிரி ஏளனத்தை எப்பொழுதாவது கேட்டிருக்கிறாயா ?

ஆடவன் கண்கள் அரிவை யென் மேற்பட
அவற்றால் ஒன்றும் அழிந்திலன் நானும்.

நான் என்ன மிருகம்போலும் ?
வெறுப்புடைக் கண்களே, வெந்துயர்ப் படவெனை
பொறுக்க முடியாக் காதலிற் படச்செயின்
விருப்புட நோக்கின் என் செய்திடுமோ ?
வெறுத்தவக் காலே, விரும்பினேன் நானும்,
வேண்டு மிடத்து, வேறென் செய்வேன் ?
நிருபம் கொண்டுவரும் நின்மல மனத்தான்
அறியா னென்றும் அரிவையின் காதல்.
காதலி என்தன் கருத்திற்கிசைவையேல்
பூதல மிசைதான் பூசித்து வாழ்வன்;
காதலி என்தன் காதலை வெறுப்பையேல்
ஏதமுற்று நானும் இறப்பேன் புவியில்;
கோத்திரம் குலமும் சம்மதியானால்
பாத்திரமாக பதி லனுப்புவாயே.

சே. இதைத்தானோ வெறுப்பதாகக் கூறினீர் ?

சு. ஐயோ பாவம்! ஒன்று மறியாத இடையன்!



அவன்மீது பச்சாத்தாபப் படுகிறாயா என்ன ? அவனுக்காக நாம் பரிதாபப்படவே ஆகாது.—இப்படிப்பட்ட ஒரு பெண்ணின்மீதா ஆசைப்படுவது நீ ? உன்னையே ஒரு தூதாக்கி மோசஞ்செய்து அனுப்பினாளே! இதை நீ பொறுக்க லாகாது; சரி, நீ போ அவளிடம். அவள்மீதுள்ள ஆசையானது அவளுக்குன்னை ஊழியனாக்கியிருக்கிறது என்பதை அறிந்தேன்—போய், இதை அவளிடம் சொல்.—அவள் என்மீது ஆசைப்பட்டால், நான் அவளை உன்மீது ஆசை வைக்கும்படி கட்டளையிட்டதாகச் சொல்; அப்படிச் செய்யாவிட்டால், நான் அவளை ஒருகாலும் மணம்புரியேன்.—நீயாக அவளுக்காக வேண்டினா லன்றி. நீ அவள்மீது உண்மையான ஆசை வைத்தவனானால், ஒரு வார்த்தையும் பேசாமல் புறப்படு உடனே!—இதோ வேறு யாரோ வருகிறார்கள்.

[செல்வக்கோனான் போகிறான்.]

ஊலவீரன் வருகிறான்.

ஊ. வந்தனம் உங்களுக்கு, இந்த ஆரண்யத்தின் ஓர் புறமாக அவரைக் கொடி படர்ந்த ஒரு குடிசை இருக்கிறதாம் அந்த இடம் உங்களுக்குத் தெரிந்தால் கொஞ்சம் தயை செய்து கொல்ல வேண்டும்.

சு. இப்படி மேற்கே திரும்பி, பள்ளத் தாக்கி லிறங்கினால், சிற்றாறு ஒன்று ஓடுகிறது இருபுறமும் நாணல் செறிந்து; அதற்கு வலது புறம் சென்றால், தாம் தேடும் இடத்திற்குக் கொண்டுபோய்விடும். ஆனால் இந்தச் சமயம் வீட்டுக்குக் காவல் அதுதான், உள்ளே ஒருவரு மில்லை.

ஊ. நான் கேட்டதைக் கொண்டு, பார்த்ததை யறிவதானால், நீங்களாகத்தா னிருக்க வேண்டும் நான் தேடிச் செல்பவர்கள். [illegible]டை உடை வயதெல்லாம் சரியாகத்தா னிருக்கிறது. “சிறுவன் அழகா யிருப்பான், ஸ்திரீ ஜாடை; மூத்த சகோதரியைப்போல் நடந்து கொள்வான். அவனது தங்கை உயரத்

தில் கொஞ்சம் குறைவு, அவனைப் பார்க்கிலும் நிறம் மட்டு", நீங்கள் தானே நான் விசாரித்த விட்டுக்காரர்கள் ?

ஸு. கேட்டபிறகு, ஆம் என்று கூறுவது, டம்பம் ஆகாது.

ஓஹ. அமரசிம்ஹன் உங்களிருவரையும் விசாரித்ததாகச் சொல்லச் சொன்னான். தான் ராஜிவாட்சியென்றழைக்கிற சிறுவனுக்கு இந்த ரத்தம் படிந்த குட்டையைக் கொடுக்கச் சொன்னான்—நீதானே அவன் ?

ரா. நான்தான், இதனால் நாங்கள் என்ன தெரிந்துகொள்ள வேண்டும் ?

ஓஹ. எனது வெட்கத்தில் கொஞ்சம்; என் இடமிருந்து, நான் யார், இந்தக் குட்டை, எப்படி, எப்பொழுது, எங்கே, இம்மாதிரியாக இரத்தம் படிந்தது, என்று அறிய உங்களுக்கு விருப்பமிருந்தால்.

ஸு. சொல்லும், நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஓஹ. கடைசியில் அமரசிம்ஹன் உங்களைவிட்டுப் பிரிந்தபொழுது, தான் இன்னும் ஒரு மணிக்குள்ளாக உம்மிடம் திரும்பி வருவதாக வாக்களித்துச் சென்றானல்லவா ? உங்களை விட்டுப் புறப்பட்டவன், இன்பத்தையும் துன்பத்தையும் தரும்படியான தன் காதலைக் குறித்து உள்ளத்தில் பலவாறெண்ணினவனாய் கானகத்தூடே கடந்து செல்லுங்கால், கண்டனன் ஓர் காட்சியை ! ஏதென உரைப்பேன் ? கண்ணெடுத்து நோக்கினன், புலப்பட்டது இக்காட்சி ! வானுடனாவி வளம்பெறச் செறிந்த வயதுடை வட வால விருட்சமொன்றின்கீழ், மெலிந்த தரித்திரன் ஒருவன் தரைமீது மல்லார்ந்துறங்கக் கண்டான். அவன் கழுத்தில், பிரகாசமுடைய பச்சை நாகமொன்று சுற்றிக்கொண்டு தன் படத்தை விரித்துப் பயங்கரமாய், பகுவாயுட் புகக் கிட்டியது; திடீரென்று அமர சிம்ஹனைக் கண்டதும், சுற்றிய உடலை மெல்லெனக் கழற்றிக்கொண்டு, பக்கத்திலுள்ள புதரொன்றிற் புகுந்து



போய்விட்டது. அந்தப் புதரின் நிழலில், குட்டிகளுக்குப் பாலில்லாதபடி பசியினால் வருந்திய பெண் சிங்கம் ஒன்று, பூனையைப்போல் தலையைக் கீழே வைத்துத் தூங்குகிறவன் விழிப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆரண்ய மிருகங்களுக் கரசாகிய சிங்கத்தின் குணம் என்னவென்றால், உயிர் நீத்ததுபோல் கிடப்பதைத் தீண்டாமையே. இதைக் கண்டு அமரசிம்ஹன் அம் மனிதன் அருகிற் செல்ல, அவன் தன் சகோதரன், அண்ணன், என அறிந்தான்.

ஸு. ஆ ! அந்த அண்ணனைப்பற்றி அவர் கூறக் கேட்டிருக்கிறேன்; அவரைப்போல் அவனியில் அறக் கொடியவன் ஆகப்படுவது அரிதெனக் கூறியிருக்கிறார்.

ஓஹ. அவன் அங்ஙனம் கூறியது நியாயமே, அவன் அவ்வளவு கொடியவன் என்பதை நன்றாயறிவேன் நான்.

ரா. அப்புறம் அமரசிம்ஹர்,—தன் அண்ணனை பாலில்லாத அந்த அறப் பசித்த சிங்கத்துக் கிரையாகவா விட்டுவிட்டார்?

ஓஹ. இரு முறை திரும்பினான் அங்ஙனமே தீர்மானித்து; பழி வாங்க வெண்ணியும் பட்சம் தாளவில்லை. தகுந்த சந்தர்ப்பம் வாய்த்தும் அதையெல்லாம் மறந்து, தன் தமயன் என்கிற உதிர சம்பந்தம் உந்த, உத்தமன் அந்தச் சிங்கத்துடன் எதிர்த்து, அதைக்கொன்றான் விரைவில், கடும் போர் புரிந்து. அந்த ஆரவாரத்தில் அயர்ந்த நித்திரையிலிருந்த அதிர்ஷ்டஹீனனாகிய நான் விழித்துக்கொண்டேன்—

ஸு. நீரா அவருடைய தமயன் ?

ரா. அவர் காப்பாற்றியது உம்மையா ?

ஸு. நீரா அவரை அத்தனை முறை கொல்லப் பிரயத்னப்பட்டவர் ?

ஓஹ. நான் தான்.—ஆயினும் நான் அன்று—அத்தீய குணமெல்லாம் போய் நற்குணத்தைப் பெற்று சந்துஷ்டி அடைந்த

பின், அத்தீய குணமுடையவனா யிருந்தவன் நான்தான் என்று கூற எனக்கு லஜ்ஜையில்லை.

ரா. பிற்கு, இந்த ரத்தம் படிந்த குட்டை ?

ஓம. இதோ வந்துவிட்டேன். நாங்கள் இக்காட்டிற்கு வந்தது முதலிய விர்த்தாந்தங்களை யெல்லாம், ஆதியோ டந்தமாக ஆனந்த பாஷ்பம் சொரிய, ஒருவருக்கொருவர் கூறியபின்—சுருக்கிச் சொல்லுமிடத்து—இக் கானகத்திலிருக்கும் குல சேகர மஹாராஜாவிடம் அவன் அழைத்துச் சென்றான் என்னை. அவர் எனக்குப் புதிய ஆடை முதலியனவெல்லாம் கொடுத்து விருந்திட்டபின், அமரசிம்ஹனிடம் அவனது அன்பிற்குப் பாத்திரமாக ஒப்புவித்தார் என்னை. அமரசிம்ஹன் உடனே என்னைத் தன் குகைக்கு அழைத்துச் சென்றான். அங்கு போனவுடன் தன் ஆடையைக் களைய, அவன் கையில் இந்த இடத்தில் சிங்கம் கொஞ்சம் சதையைப் பிறி யிருந்தது, அவ்விடமிருந்து ரத்தம் வடிந்துகொண்டே யிருந்தது. அவன் உடனே மூர்ச்சையானான். அந்தச் சமயத்திலும் ராஜீவாட்சி யென்று அழைத்துக்கொண்டே மூர்ச்சை யானான். நான் உடனே மூர்ச்சை தெளிவித்து அக் காயத்தைக் கட்டினேன். கொஞ்சம் பொறுத்து, மனோதிட முடையவனாதலால், நான் உங்களை அறியாதவனா யிருந்த போதிலும், என்னை இவ் விஷயங்களெல்லாம் உங்களுக்குக் கூற இங் கனுப்பினான், தான் வாக்களித்தபடி வாராத குற்றத்தை மன்னிக்கும் பொருட்டும், வேடிக்கையாக ராஜீவாட்சியென்று தான் அழைக்கும் இடைச் சிறுவனிடம் தன் ரத்தம் படிந்த இந்தக் குட்டையை அதற் கறி குறியாகக் கொடுக்கும் பொருட்டும். [ராஜீவாட்சி மூர்ச்சை யாகிறான்.]

சு. ஆ! ஆ! என்ன, என்ன! அண்ணா அண்ணா!

ஓம. ரத்தத்தைக் கண்டால் அநேகர் மூர்ச்சையாகிற துண்டு.

சு. ஐயோ! இதில் விசேஷ மிருக்கிறது. அண்ணா! அண்ணா!



ஓம. அதோ பார்! மூர்ச்சை தெளிகிறான்

ரா. நான் வீட்டிற்குப் போகவேண்டும்.

சு உன்னை அங்கே அழைத்துப்போகிறோம்.—ஐயா, அப்படி அந்தக் கையைப் பிடித்துக் கொள்கிறீகளா ?

ஓம. இளைஞனே, தைரியமாயிரு!—நீயும் ஒரு புருஷனா! புருஷனுக் கிருக்கவேண்டிய தைரியமில்லை உன்னிடம்.

ரா. ஆம், உண்மையே, ஒப்புக்கொள்ளுகிறேன். ஆ! என்ன விந்தை! பார்த்தவர்கள் நான் நன்றாக மூர்ச்சை யானது போல் நடித்தேன் என்று நினைப்பார்கள்—ஐயா, நீர் உமது தம்பியிடம் நான் எவ்வளவு நன்றாக மூர்ச்சையானதுபோல் நடித்தேன் என்று கூறும்—ஐயோ சாமி!

ஓம. இது நடித்த தல்ல, உன் முகத்திலேயே விளங்குகிறது உண்மையில் நீ மூர்ச்சையான விஷயம்.

ரா. நடித்தது தான், நான் உண்மையாகச் சொல்லுகிறேன் உமக்கு.

ஓம. சரி, ஆனால்; தைரியமா யிரு, புருஷனைப்போல் நடி ஆனால்.

ரா. அப்படித்தான் செய்கிறேன், ஆயினும் உண்மையில் நான் ஸ்திரீயாகத்தான் பிறந்திருக்க வேண்டும்.

சு. வா வா! முகம் வெளுத்துக் காட்டுகிறது, விரைந்து போவோம் வீட்டுக்கு.—ஐயா, கொஞ்சம் எங்களுடன் வாரும்.

ஓம. அப்படியே செய்கிறேன், ஏனெனில், நீ என் தம்பியை மன்னித்தபடி நான் பதில் கொண்டுபோகவேண்டும், ராஜீவாட்சி.

ரா. நான் ஏதாவது யுக்தி செய்கிறேன். ஆயினும் உம்மை வேண்டிக் கொள்கிறேன், நான் மூர்ச்சையானதுபோல் நடித்ததை மாத்திரம் எடுத்துக் கூறும் அவருக்கு.—போகலாமா ?

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

# ஐந்தாம் அங்கம்.

—:o:—

## முதல் காட்சி.

இடம்—அருங் காடு.

அச்சுதனும், ஆதிரையும் வருகிறார்கள்.

அச். தக்க சமயம் கண்டு பிடிப்போம் நாம், ஆதிரை, அவசரப் படாதே, பொறு ஆதிரை.

ஆ. அந்தக் கெழவ என்னென்னமோ சொன்னாலும், அந்தப் பாப்பா, நமக்கு போதும் இண்ணு.

அச். கெடுகெட்ட பிராமணன் ஆதிரை, மந்திரங்கள் எல்லாம் தாறுமாறாய்ச் சொல்பவன்.— அதிருக்கட்டும்.— ஆதிரை, இந்தக் காட்டில் ஒருவன், நீ தனக்குச் சொந்தம் என்கிறானே, அது என்ன சமாசாரம்?

ஆ. ஓ! யாரெப்பத்தி சொல்றாங்க எனக்கு தெரியும்; அவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?— நீங்க சொல்ர மனுஷெ இதோ வர்ரான்.

வில்லியன் வருகிறான்.

அச். இப்படிப்பட்ட மடையர்களைப் பார்த்தாலே என் மனத்திற்கு உணவாகும். ஆனைப்படி, என்னைப்போன்ற புத்திசாலிகளிடத்தில் ஒரு பெருங்குறை யிருக்கிறது; எங்கள் வாய் சும்மா யிராது, எந் நேரமும் ஆடிக்கொண்டே யிருக்கும், அதை அடக்க முடியாது எங்களால்.

வி. ஏ! ஆதிரெ,—சேமந்தானா?

ஆ. சேமந்தா, அப்பா.

வி. ஐயா, நீங்க சேமந்தானா?—



அச். க்ஷேமம், அப்பனே; இப்படி வா. உன் தலையை மூடு, மூடு உன் தலையை! இருக்கிறதும் போகப் போகிறது, மூடிக்கொள், நான் வேண்டுகிறேன். நண்பனே, உன்னுடைய வயதென்ன?

வி. இருவத்தஞ்சி, ஐயா.

அச். நல்ல முதிர்ந்த வயது!—உன்னுடைய பெயர் வில்லியனா?

வி. வில்லியன்தா, ஐயா.

அச். நல்ல அழகான பெயர்!—இந்தக் காட்டில் இங்கே பிறந்தவனா?

வி. ஆமா அய்யா.—எல்லா சாமி தயவு.

அச். சாமி தயவு!—நல்ல பதில்! பணம் இருக்கிறதா?

வி. சுமாரு, அப்படி அப்படி.

அச். சுமாராக அப்படி அப்படி இருப்பது நல்லது!—மிகவும் நல்லது!—நிரம்பவும் நல்லது!—ஆயினும் நல்லதல்ல!—சுமாரு அப்படி அப்படிதானே!—புத்திசாலிதானா?

வி. ஆமாய்யா, நானு நல்ல புத்திசாலிதா.

அச். ஏன், நன்றாய்ச் சொன்னாய்! "மடையன் தான் புத்திசாலி என்று எண்ணிக்கொள்கிறான், புத்திசாலிக்குத் தெரியும் தான் மடையனென்று" என்னும் பழமொழி இப்பொழுது எனக்கு ஞாபகம் வருகிறது. சைனா தேசத்துத் தத்துவ சாஸ்திரி திராட்சைப் பழத்தைத் தின்ன வேண்டுமென்று விருப்ப மிருந்தால், வாயைத் திறப்பான் அந்தப் பழத்தை வாய்க்குள் போட்டுக்கொள்ளும்பொழுது. அர்த்தம் என்ன? பழங்கள் தின்னப்படுவதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டனவென்றும், வாய் தின்பதற்காகச் சிருஷ்டிக்கப் பட்டதென்றும் அனைவரும் அறியும்பொருட்டு.—இந்தப் பெண்மீது இச்சைப்படுகிறாயா?

வி. ஆமா, ஐயா.

அச். உன் கையைக் கொடு சற்று,—நீ படித்திருக்கிறாயா?

வி. இல்லே, ஐயா.

அச். ஆனால் இதை என்னிடமிருந்து கற்றுக்கொள். உலகத்தில் உண்டு என்றால் உண்டு என்று அர்த்தம். தர்க்க சாஸ்திரப்படி ஜலம் ஒரு பாத்திரத்திலிருந்து இன்னொரு பாத்திரத்தில் கொட்டப்பட்டால் முதல் பாத்திரத்தில் இராது!—ஏனெனில், பெரியோர்களெல்லாம் ஒப்புக்கொள்ளுகிறார்கள், புருஷன் என்பது அவன் என்று—தற்காலம் நீ அவன் அன்று, ஏனெனில் அந்த அவன் என்பது நான்!—

வி. எந்த அவன் ஐயா?

அச். அவன், அவன்! இந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டியவன்!—ஆகையால் இடையா மடையா,—இந்தப் பெண்ணை—அதாவது இந்த ஸ்திரீயை, விட்டுவிட வேண்டும். அதாவது, கண்ணெடுத்துப் பார்க்க லாகாது;—அதாவது, பின் தொடர லாகாது,— அதாவது, அவள்மீது ஆசைப்படலாகாது!—எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்தால், நீ இந்தப் பெண்ணின்மீது ஆசைப்படலாகாது—இல்லாவிட்டால் மடையா, நீமரிக்கவேண்டும்,—அதாவது, இறக்கவேண்டும்; அதாவது, நான் உன்னைக் கொன்றுவிடுவேன்! அதாவது, நான் உன் உயிரைப் போக்கிவிடுவேன்!—உன்னை பஸ்மீகரப்படுத்திவிடுவேன்! காற்றாய்ப் போகச் செய்வேன்!—விஷ மூட்டி வேகவைப்பேன்! இருக்கை வாளினால் முறுக்கிவிடுவேன்! கத்தியினால் கண்டதுண்ட மாக்கிவிடுவேன்! எதிர்த்து வாதாடுவேன் உன்னுடன்! சூழ்ச்சிசெய்து முறியடிப்பேன்! உன்னைக் குறைந்த பட்சம் நாற்றைம்பது விதத்தில் கொன்று விடுவேன்! ஆகவே பயந்து நடுநடுங்கி நடந்துவிடு.

ஆ. அப்பா, அப்படியே செய்யி.

வி. ஐயா, நீங்க சொகமா இருங்க, நானு வர்ரேன். [போகிறான்.]



நந்தக்கோனன் வருகிறான்.

ஐயா, நம்முடைய எஜமானும் எஜமானிச்சியும்தேடுகிறார்கள் உம்மை; வாரும், சீக்கிரம்!

நட ஆதிரை, நட ஆதிரை!— இதோ வந்து விட்டேன். இதோ வந்துவிட்டேன்! [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---

## இரண்டாவது காட்சி.

இடம்—காட்டின் மற்றொரு புறம்.

அமரசிம்ஹனும், ஹலவீரனும் வருகிறார்கள்.

அ. என்ன விந்தை! அவளை அறிந்த அரை நாழிகைக்கெல்லாம் அவள்மீது இச்சை கொண்டாய், கண்டதும் அவள் மேல் காதல் கொண்டாய், காதல் கொண்டவுடன் அவளைக் கேட்டாய், கேட்டதும் அவள் சம்மதித்தாள்! இந்தக் காதல் என்றும் மாறாதிருக்குமா?

ஹ. அவளது ஏழ்மை, எங்களது சில கால நேசம், நான் திடீரென்றுகாதல்கொண்டது, அதிசீக்கிரம் அவள்சம்மதித்தது, இவைகளெல்லாம் மூடத் தனமாய்த் தோற்றியபோதிலும், அவைகளையெல்லாம்பற்றி அதிகமாய் ஆராயாதே. நான் அவள்மீது காதல் கொண்டிருப்பதாக என்னுடன் சொல், அவள் என்மீது காதல் கொண்டிருப்பதாக அவளுடன் சொல். ஆகவே நாங்கள் இருவரும் மணம்புரிந்து ஒருவரையொருவர் அடைய எங்களுக்கு விடைகொடு. உனக்கும் இதனால் நன்மை யுண்டு. நமது தந்தையின் வீட்டையும் நமது பிதிரார்ஜித முழுவதையும் உனக்கு நான் கொடுத்துவிட்டு இவ்விடத்திலேயே வாழ்ந்து, என் காலத்தைக் கழிக்கிறேன் ஓர் இடையனாக.

அ. அண்ணா, எனக் கொரு ஆட்சேபனையு மில்லை. நாளைத் தினமே உமக்கு விவாகத்தை முடிப்போம். நான் மஹாராஜாவையும் சுக வாசிகளான அவரது பரிவாரங்களையும் வரவழைக்கிறேன். நீர் போய் இதற்கு உம்முடைய காதலியின் சம்மதத்தைப் பெற்று வாரும்,—போம்.—இதோ பாரும், என் ராஜீவாட்சி இங்கு வருகிறாள்.

ராஜீவாட்சி வருகிறாள்.

ரா. அண்ணா, க்ஷேமந்தானா ?

ஹ. க்ஷேமந்தான், தங்காய். [போகிறான்.]

ரா. ஆ ! பிராணநாதா ! உம்முடைய ஹிருதயத்தில் காயம் பட்டதாகக் கேள்விப்பட்ட எனக்குமிகவும் துக்கமாயிருக்கிறது.

அ. காயம்பட்டது என் கையில்.

ரா. இவ்வளவுதானா ? சிங்கத்தின் நகத்தினால் உமது ஹிருதயமல்லவோ புண்பட்டதென்று நினைத்தேன்.

அ. என் ஹிருதயம் புண்பட்டிருக்கிற துண்மையே, [ஆனால் சிங்கத்தின் நகத்தினாலன்று, ஒரு பெண்மணியின் கண்மணியினால்.

ரா. உமது தமயன் உமக்குக் கூறினாரா, அவர் உமது கை குட்டையைக் காண்பித்தபொழுது, என்ன நன்றாய் நான் மூர்ச்சையானதுபோல நடித்தேன் என்று ?

அ. ஆம்; அதுவும் கூறினார், அதிலும் ஆச்சரியமான விஷயங்களும் கூறினார்.—

ரா. ஓ! தெரியு மெனக்கு, நீர் எதைப்பற்றி கூறுகிறீர் என்று; ஆம், அது உண்மைதான். அதி சீக்கிரத்தில்தான் முடிந்தது. இதற்குச் சமானமாக, இரண்டு ஆட்டுக்கடாவின் சண்டையையும், கேசரி என்னும் தெலுங்கன் ராயாயணத்தை மூன்று பதத்தில் "கட்டினாடு, கொட்டினாடு, தெச்சினாடு "என்று முடித்ததையுந்தான் கூறவேண்டும். உமது தமயனும் என் தங்கையும் ஒருவரை யொருவர் சந்தித்ததும் கண்டார்கள்; கண்டதும் காதல் கொண்டார்கள் காதல் கொண்டதும் கவலைப் பட்டார்கள்; கவலைபட்டதும் காரணம் ஒருவரை யொருவர் கேட்டார்கள்; காரண மறிந்ததும் பரிகாரமாகக் கடிமணம் புரியத் தீர்மானித்தார்கள். இவ்வாறு அவர்கள் படிப்படியாக விவாகம் என்கிற சோபானம் ஒன்று செய்துகொண்டனர்; ஆகவே அவர்களுக்கு உடனே மணம் புரிவிக்கவேண்டியதுதான்; இல்லாவிடின் அவர்களாக மணம் புரிந்து விடுவார்கள். அவர்களுக்குக் காதல் என்னும் பித்தம் தலைக் கேறியிருக்கிறது, எப்படியும் ஒருங்கு சேர்வார்கள், கழி கொண்டடித்தாலும் அவர்கள் பிரியார்கள்.

அ. நாளைத்தினமே அவர்களுக்கு விவாஹம் செய்விப்போம். நான் மணத்துக்கு மஹாராஜாவை வரவழைக்கிறேன். ஆயினும், மற்றவர் கண்ணாடு மகிழ்ச்சியைக் காணுதலினும், மா நினிலத் துண்டோ மன்னுயுர்க்குத் துயரம்? தான் விரும்பிய பொருளைப் பெற்று என் தமயன் எத்தனை மன மகிழ்ச்சியுடன் இருக்கிறானென எண்ணுகிறேனோ, அத்தனை மனத் துயரம் எனக் கிருக்கும் நாளை, நான் விரும்பியதைப் பெறுவதற் கில்லையே யென்று !

ரா. நான் நாளைத்தினம் உமக்கு ராஜீவாட்சியா யிருக்கமுடியாது ஆனால் ?

அ. இனிமேல் அங்கனம் எண்ணி வாழ முடியா தென்றால்.

ரா. ஆனால் வீண் வார்த்தை யாடி உமக்கு இனி வருத்த மூண்டாக்கமாட்டேன். ஆனால்—இனி இதை யறியும், இப்பொழுது நான் சொல்வது ஒரு யோசனையோடு சொல்கிறேன்.—நீர் கொஞ்சம் தெரிந்தவர் என்று எண்ணி உம்மிடம் கூறுகிறேன். நான் சொல்லப்போகிறது, நீர் என் புத்தியை மெச்சும் பொருட்டன்று,—அப்படிச்செய்கிறீர் என்று எனக்கு முன்பெ தெரியும். இதை நம்பி அதனால்

நீர் பயனடைந்தால் போது மெனக்கு, வேறொரு பயனும் வேண்டாம், பெருமையும் வேண்டாம். ஆகையால் உமக் கிஷ்ட மிருந்தால், எனக்கு ஆச்சரியகரமான செய்கைகள் செய்யச் சக்தியுண்டு என்று நம்பும். என்னுடைய மூன்றாம் வயதுமுதல், ஓர் மந்திரவாதியின் உபதேசம் உண்டு; அவர் மந்திர விஷயத்தில் மஹா மேதாவி, ஆயினும் துர் விஷயங்களில் பிரவேசியாதவர். உமது செய்கைகள் வெளிப்படுத்துவதுபோல் நீர் ராஜ்வாட்சியின் மீது உள்ளத்தில் அவ்வளவு காதல் கொண் டிருப்பது உண்மையானால், உமது தமயன் என் தங்கையை மணக்கும் பொழுது, நீர் ராஜ்வாட்சியை மணம்புரியும்படிச் செய்கிறேன். அவள் இப்பொழுது எக்கதியி லிருக்கிறாள் என்று எனக்கு நன்றாய்த் தெரியும். உமக்கு அது கஷ்டமாய்த் தோன்றாவிட்டால், நாளைத்தினம் அவளைத் தத்ரூபத்துடன், ஒரு அபாயமுமின்றி, உமது கண்முன் கொண்டுவந்து காண்பிப்பது எனக்கு அசாத்யம் அன்று.

அ. நீ என்ன வாஸ்தவமாய்ப் பேசுகிறாயா?

ரா. என் உயிர்மீ தாணைப்படி நான் உண்மையாகத்தான் பேசுகிறேன். நான் மந்திரவாதி என்று ஒப்புக்கொண்—போதிலும், என் உயிர்மீது எனக்கு அதிக பிரியம் உண்டு, ஆகவே நாளைத்தினம் நீர் மணக் கோலம் கொண்டிரும், உமது நண்பர்களையும் வரவழையும்; உமக்கு விருப்பமிருந்தால் நாளைக்கே உமது மணத்தை முடிக்கிறேன்—உமது ராஜீ வாட்சியுடன்—உமக்கு ஆட்சேபனை யில்லாத பட்சத்தில். இதோ பாரும், என்மீது காதல்கொண்ட ஒருத்தியும், அவள் மீது காதல்கொண்ட ஒருவனும் வருகிறார்கள்.

செல்வக்கோனும், பத்மினியும் வருகிறார்கள்.

ப. ஐயா! நான் உமக்கு எழுதிய கடிதத்தை இவனுக்குக் காட்டி என்னை மிகவும் அவமரியாதை செய்தீர்.



ரா. அப்படிச் செய்திருந்தால் எனக் கொன்றும் பய மில்லை. உன்னிடம் வெறுப்புடனும் மரியாதை யின்றியும் நடிப்பதே எனக்கு விருப்பம். அதோ, அந்தக் கோனன் உன் மீது உண்மையில் காதல் கொண்டு உன் பின்னால் திரிகிறான். அவனைக் கண் ணெடுத்துப் பார், அவன்மீது பட்சம் வை; அவன் உன்னைத் தொழுது வருகிறான்.

ப. அப்பா, நீயாகிலும் கூறு, காதல்கொள்வ தென்றால் இன்ன தென்று இவருக்கு?

செ. காதல் கொண்டால் எந் நேரமும் கண்ணீரும் கவலையுமா யிருக்கவேண்டும். அப்படித்தா னிருக்கிறேன் நான் பத்மினியின் பொருட்டு.

ப. அப்படித்தா னிருக்கிறே நான் கானமேதியின் பொருட்டு.

அ. அப்படித்தா னிருக்கிறே நான் ராஜீவாட்சியின்பொருட்டு.

ரா. அப்படித்தா னிருக்கிறேன் நானும்—ஆனால் ஒரு பெண் பொருட் டல்ல.

செ. காதல் கொண்டால் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்யவேண்டும். அப்படித்தான் செய்கிறேன் நான் பத்மினியின் பொருட்டு.

ப. அப்படித்தான் செய்கிறேன் நான் கானமேதியின்பொருட்டு.

அ. அப்படித்தான் செய்கிறேன் நான் ராஜீ வாட்சியின் பொருட்டு.

ரா. அப்படித்தான் செய்கிறேன் நானும்—ஆனால் ஒரு பெண் பொருட் டல்ல.

செ. காதல் கொண்டால் எந்நேரமும் அதே மனத்தில் குடிகொண் டிருக்கவேண்டும், அதே கவலையா யிருக்க வேண்டும், அதைப்பற்றியே எண்ணிக்கொண் டிருக்கவேண்டும், அதையே பூஜையாகக் கொள்ளவேண்டும், பெருங் கடமையாகக்

கொள்ளல் வேண்டும், எல்லாக் கட்டளைகளையும் நிறைவேற்றவேண்டும், மிகவும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும், மிகுந்த பொறுமையுட னிருக்கவேண்டும், பொறுமை யில்லாமலு மிருக்கவேண்டும், திரிகரண சுத்தியா யிருக்கவேண்டும், எவ்வித பரீட்சைக்கு முட்படவேண்டும், அதே தியானமா யிருக்கவேண்டும். அப்படித்தா னிருக்கிறேன் நான் பத்மினியின் பொருட்டு.

ப். அப்படித்தா னிருக்கிறேன் நான் கானமேதியின் பொருட்டு.

அ. அப்படித்தா னிருக்கிறேன் நான் ராஜீவாட்சியின் பொருட்டு.

ரா. அப்படித்தா னிருக்கிறேன் நானும்—ஆனால் ஒரு பெண் பொருட் டன்று.

ப. [ராஜீவாட்சியிடம்] அப்படியானால் உம்மீது காதல் கொண்டதற்காக என்னை ஏன் தூஷிக்கிறீர்?

செ. [பத்மினியிடம்] அப்படியானால் உன்மீது காதல் கொண்டதற்காக என்னை ஏன் தூஷிக்கிறாய்?

அ. அப்படியானால் உன்மீது காதல் கொண்டதற்காக என்னை யேன் தூஷிக்கிறாய்?

ரா. உன்மீது காதல் கொண்டதற்காக என்னை யேன் தூஷிக்கிறாயென்று யாரைக் கேட்கிறீர் நீர்?

அ. இங்கு இல்லாது நான் சொல்வதைக் கேளாதிருக்கிறாளே அவளை!

ரா. போதும் நிறுத்துங்கள், இது வேண்டா மினி; இது பனங் காட்டு நரிகள் பானுவை நோக்கிக் கூச்ச லிடுவதுபோ லிருக்கிறது—[செல்வக்கோனுக்கு] என்னால் முடியு மானால் உனக்கு உதவி செய்கிறேன்—[பத்மினிக்கு] என்னால் கூடு மானால் உன்னை மணம்புரிகிறேன்.—நாளைத்தினம் எல்லோ



ரும் வந்து சேருங்கள் என்னிடம். [பத்மினிக்கு] நான் ஒரு பெண்ணை மணம் புரிவதானால் உன்னை மணம்புரிகிறேன். எனக்குக் கல்யாணம் நாளை. [அமரசிம்ஹனுக்கு] நான் ஆடவன் மனத்தைத் திர்ப்தி செய்வதானால் நாளை உமது மனத்தைத் திர்ப்தி செய்விக்கிறேன்; உமக்குக் கலியாணம் நாளை. [செல்வக்கோனுக்கு] உனது மனத்தைப் பூர்த்தி செய்விக்கிறேன், உனக்கு விருப்பமானது உன் மனத்தைப் பூர்த்தி செய்விப்பதானால், உனக்கும் விவாஹம் நாளை.—[அமரசிம்ஹனுக்கு] ராஜீவாட்சியின்மீது காதல் கொண்ட துண்மையானால் நாளை வந்து சேரும்.—[செல்வக்கோனுக்கு] பத்மினியின்மீது காதல்கொண்ட துண்மையானால் நாளைவந்து சேர்.—நான் எந்த ஸ்திரீயின்மீதும் காதல் கொள்ளாததினால் நானும் வந்து சேர்கிறேன். ஆகவே போய் வாருங்கள். உங்களுக்கு நான் கட்டளையிட்டிருப்பது ஞாபக மிருக்கட்டும்.

செ. நான் உயிரோ டிருந்தால் தவறமாட்டேன்.

ப. நானும் தவறமாட்டேன்.

அ. நானும் தவறமாட்டேன். [போகிறார்கள்]

காட்சி முடிகிறது.

## மூன்றாவது காட்சி.

இடம்—காட்டின் மற்றொரு புறம்.

அச்சுதனும் ஆதிரையும் வருகிறார்கள்.

அச். நாளைக்குத்தான் நமக்குச் சந்தோஷமான நாள், ஆதிரை நா மிருவரும் மணந்திடுவோம் நாளை.

ஆ. அத்தெதா நானும் எம் மனஸ்லே கோர்ரேன்; ஒலகத்லே மத்தவங்களைபோலே எனக்கும் கண்ணாலம் ஆவணுமின்னு கோர்ரத்லே தப்பு இல்லே அல்லா?— இதோ, காட்லே இர்க்றாரே மகாராஜா, அவரு வேலெக்காரருங்க ரெண்டு பேரு வர்ராங்க.

இரண்டு வேலையாட்கள் வருகிறார்கள்.

மு. வே. வாருமையா, விதூஷகரே.

அச். வாரும், வாரும்; உண்மையில், உங்களைச் சந்தித்தது மிகவும் சந்தோஷம் வாருங்கள், உட்காருங்கள், உட்காருங்கள்,— எதோ, ஒரு பாட்டு.

இ.வே. அப்படியே ஆகட்டும். எங்கள் மத்தியில் உட்காரும்.

மு.வே. சாரீரம் நன்றா யிராததற்குப் பீடிகையாக, கனைத்துக்கொள்ளாமலும், காரி யுமிழாமலும், தொண்டை கம்மலா யிருக்கிறதென்று கூறாமலும், உடனே ஆரம்பிப்போமா பாட்டை?

இ.வே. ஆம், ஆம்; அங்ஙனமே ஆரம்பிப்போம் இரண்டு பெயரும் ஒரே சுருதியில், தும்புரு நாரதரைப்போல். [பாடுகிறார்கள்.]

இராகம்—பைரவி; தாளம்—ரூபகம்.

பல்லவி.

வசந்த காலப் பெருமை யனைத்தும்
வகுத் துரைத்திட எம்மா லாமோ (வ)

அநுபல்லவி.

இசைந்தவர்க்கு நல் லின்பத்தை யூட்டும்
இருவரையும் பிரியாமற் கூட்டும். (வ)



சரணம்.

தென்றல்வந் துலாவுதே
சின்னங் குயிலது கூவுதே
அன் றலர்ந்த மலர் வாசனை வீசுது
ஆர்வமுடன் கிளி பேடுடன் பேசுது. (வ)

அச். அப்பா, பிள்ளையாண்டான்களே, பாட்டில் சாஹித்யம் அவ்வளவாக நன்றா யிராவிட்டாலும், சங்கீத மென்னவோ ஆபாசமாகத்தா னிருந்தது.

மு. வே. இல்லை, ஐயா, நீர் கவனிக்க வில்லை: நாங்கள் தாளம் சரியாகத் தான் போட்டோம்.

அச். ஆம், தாளம் போட்டீர்கள் பாடுவதற்கு, உண்மையே. இந்த ஓலத்தைக் கேட்டுக் காலத்தைப் போக்கினேனே மடையன் நான். ஸ்வாமி உங்களை ரட்சித்து உங்கள் குரலைச் சரிப்படுத்துவாராக! ஆதிரை, வா. நாம் போவோம்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

---

## நான்காவது காட்சி.

இடம்—காட்டின் மற் றொரு புறம்.

குலசேகர மஹாராஜன், ஹேமநாதன், ஜகந்நாதன், அமரசிம்ஹன், ஹலவீரன், சுசீலை வருகின்றனர்.

கு. நீ நம்புகிறாயா, அமரசிம்ஹா, இச் சிறுவன் தான் கூறியபடி யெல்லாம் செய்து முடிப்பானென்று?

அ. சில வேளைகளில் நம்புகிறேன். சில வேலைகளில் சந்தேகப் படுகிறேன், தங்கள் கோரிக்கை நிறைவேறாது என்று பயபபட்டு, அங்ஙனம் பயப்படுவதை அறிந்தவர்களைப்போல்.

ராஜிவாட்சி செல்வக்கோனன் பத்மினி வருகிறார்கள்,

ரா. பொறுங்கள் கொஞ்சம். நம்முடைய நிபந்தனைகளெல்லாம் ஏற்பா டாகட்டும்.--[மஹாராஜாவுக்கு]நான் உமது மகளைக் கொண்டுவந்தால் இதோ இருக்கும் அமரசிம்ஹருக்கு விவாஹம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொள்ளுகிறீர்?

கு. அப்படியே செய்வேன், அவளுடன் அநேக ராஜ்யங்களையும் ஸ்திரீதனமாகக் கொடுக்க எனக்குச சக்தி யிருப்பினும்.

ரா. [அமரசிம்ஹனுக்கு] நீர் அவளை மணம்புரிவதாக ஒப்புக்கொள்ளுகிறீர், அவளை நான் கொண்டுவரும்பொழுது?

அ. அப்படியே செய்வேன் நான், எல்லா ராஜ்யங்களுக்கும் அரசனாயிருந்தபோதிலும்.

ரா. [பத்மினிக்கு]நான் சம்மதப்பட்டால் நீ என்னை மணம்புரிவதாக ஒப்புக்கொள்ளுகிறாய்?

ப. அப்படியே செய்வேன், மறு நிமிஷம் மடிவதாயினும்.

ரா. ஆனால் நீயாகவே என்னை மணம்புரிய இசையாவிட்டால்— இதோ இருக்கும் உன்மீது உண்மையில் காதல் கொண்டுள்ள இந்தக் கோனனை நீ மணம்புரிவாய்?

ப. அப்படித்தான் ஏற்பாடு.

ரா. [செல்வக்கோனனுக்கு] பத்மினி உன்னை மணம் புரிய இச்சைப்பட்டால் நீ அவளை ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொள்ளுகிறாய்?

செ. அப்படியே செய்கிறேன், அவளை மணந்தவுடன் மரிப்பதே யாயினும்.

ரா. இந்த விஷயங்களை யெல்லாம் சரிப்படுத்துவதாக நான் வாக்களித்திருக்கிறேன். மஹாராஜா, தாங்கள் தங்களுடைய வாக்கைக் காப்பாற்றவேண்டும், உம்முடைய மகளை விவாகம் செய்துகொடுப்பதில்,— அமரசிம்ஹரே, தாம் தமது வாக்கைக் காப்பாற்றவேண்டும், அவளை மணஞ்செய்துகொள்ளுவதில்,—பத்மினி, நீ உன் வாக்கைக் காப்பாற்றவேண்டும் என்னை மணப்பதில், அப்படி யில்லாவிட்டால், என்னை வெறுப்பதானால், இந்தக் கோனனை மணக்க வேண்டும்.— செல்வக்கோனன், அவள் என்னை வெறுக்கும் பட்சத்தில் நீ உன் வாக்கைக் காப்பாற்றவேண்டும் அவளை மணப்பதில். இதோ இங்கிருந்து நான் போகிறேன், இந்தச் சந்தேகங்களை யெல்லாம் தீர்க்க.



(ராஜீவாட்சியும், சசிலையும் போகிறார்கள்.)

கு. இச் சிறுவன் முகத்தில் என் பெண் ஜாடை கொஞ்சம் இருப்பதாக நினைக்கிறேன்.

அ. மஹாராஜா, நான் முதலில் அவனைப்பார்த்தபொழுது உமது பெண்ணின் தம்பி என்று எண்ணினேன். ஆயினும், மஹாராஜா, இவன் இக் காட்டில் பிறந்தவனே. இப் பெருங் காட்டில் எங்கேயோ மறைவிடத்திலிருக்கும் மஹா மாயாவியாகிய இவனுடைய சிற்றப்பன் ஒருவன் இவனுக்கு மாய வித்தைகள் சிலவற்றைக் கற்பித்திருக்கிறானாம்.

அச்சுதனும், ஆதிரையும் வருகிறார்கள்.

ஜ. இதேது! பிரளயம் அணுகிவிட்டாற்போ லிருக்கிறது, ஜதை ஜதையாக எல்லாம் வந்து சேர்கிறது! இதோ வெகு விந்தையான ஒரு ஜதைக் காட்டு மிருகங்கள் வருகின்றன, இந்த ஜாதி மிருகங்களுக்கு, கங்காளி மிருகங்கள், என்று எல்லாப் பாஷையிலும் பெயர்.

அச். எல்லோருக்கும் வந்தனம்,—நமஸ்காரம் அனைவருக்கும்.

ஜ. மஹாராஜா, தாம் இவனை வரவு அழைக்கவேண்டும். நான் காட்டில் அநேக முறை சந்தித்த கங்காளி ஆசாமி இவன்

நான். நான் அரண்மனையில் ஒரு காலத்தில் வசித்ததாகக் கூறுகிறான்.

அச். அதைப்பற்றி யாருக்காவது சந்தேக மிருந்தால் என்னை விசாரித் தறியலாம்; நான் நடனம் செய்திருக்கிறேன், மங்கையரைக் கண்டு மயங்கி யிருக்கிறேன், எனது நேசர்களை ஏமாற்றி யிருக்கிறேன், பகைவரோடு உறவாடி யிருக்கிறேன், மூன்று தையற்காரர்களை மோசம் செய்திருக்கிறேன், நான்கு சண்டைகள் போட்டிருக்கிறேன்.—அவைகளில் ஒன்று வினையாய் முடிய இருந்தது.

ஜ. அது எப்படி நேர்ந்தது?

அச். எப்படி யென்றால்,—நாங்கள் சந்தித்தபொழுது, அது ஏழாவது காரணத்தைப்பற்றி என்று கண்டறிந்தோம்.

ஜ. எப்படி ஏழாவது காரணத்தைப்பற்றி?-மஹாராஜா, இவன் உமக்குச் சம்மதந்தானா?

டு. மிகவும் சம்மதம்.

அச். சுவாமி உம்மை ரட்சிப்பாராக! என்னையும் ரட்சிக்கும்படி தாங்கள் கோரவேண்டும்! மற்றவர்களைப்போல், நானும் இங்கே கடிமணமென்னும் கால்தளையால் பூட்டப்பட வந்திருக்கிறேன்—வேளை வந்தால் செய்த சத்யம் தவறி அவ்விலங்கினை உடைத்துக்கொள்ளும் பொருட்டு.-ஒரு ஏழ்மையான கன்னிகை, ஐயா, விசேஷ அழ கில்லாவிட்டாலும், ஐயா,, எனக்குச் சொந்தம்—என் இஷ்டம், மற்றவர்களெல்லாம் விரும்பாததை விரும்ப வேண்டுமென்று;—அசங்கியமான முத்துச் சிப்பியில் அழகிய முத்து இருப்பதுபோல உத்தமமான கற்பானது லோபியைப்போல எளிய குடிசையில் குடிகொண் டிருக்கிறது.

டு. உண்மையில், தக்கபடியும் தாராளமாயும் பேசுகிறான்.



அச். வித்தூஷகன் கற்ற வித்தையின்படியும், அதற் கேற்ற சட்டக் கல்வியின்படியும், ஐயா.

ஜ. அதிருக்கட்டும், அந்த ஏழாவது காரண மென்ன சமாசாரம்? எப்படி ஏழாவது காரணத்தால் வந்த சண்டை என்று அறிந்தீர்கள்?

அச். ஏழாவது முறை அசத்யம் என்று கூறியபடியால்,—ஆதிரை, முகத்தைக் குனிந்து நில்:—இவ்வாறு ஐயா, அரண்மனையி லிருந்த ஒருவருடைய மீசை முறுக்கு எனக் கிஷ்டமில்லை. நான் அவரது மீசை முறுக்கு சரியாக இல்லையென்று சொன்னால், சரியாக இருப்பதாகத் தான் எண்ணுவதாக, அவர் எனக்குப் பதில் சொல்லி அனுப்பினார்; இது மரியாதையான பதில். நான் மறுபடியும் அந்த முறுக்கு சரியா யில்லையென்று அவருக்குச் சொல்லி யனுப்பினால், அவர் தன் இஷ்டப்படி முறுக்கிவிட்டதாகப் பதில் சொல்லி அனுப்புவார்; இது சாந்தமான பதில். நான் மறுபடியும் சரியா யில்லையென்று சொன்னால், உமக்கு ஒன்றும் தெரியாது இவ் விஷயத்தில், என்று பதில் அனுப்புவார்; இது துடுக்கான பதில். மறுபடியும் சரியா யில்லையென்று சொல்வேனாயின், அவர் நீர் வாஸ்தவம் பேச வில்லையென்று பதில் அனுப்புவார்; இது வைரியான பதில். மறுபடியும் நான் சரியா யில்லையென்று சொன்னால், அவர் நான் பொய் பேசுவதாகச் சொல்லுவார்; இது சச்சரவு பதில். இங்ஙனமே சுற்று வழிப் பொய்ப் பதிலும், நேரான பொய்ப் பதிலும்.

ஜ. நீ எத்தனைதரம் அவர் மீசை முறுக்கு சரியாக இல்லையென்று சொன்னாய்?

அச். சுற்று வழிப் பொய்ப் பதிலுக்குமேல் போக எனக்குத் தைரிய மில்லை. அவரும் எனக்கு நேரான பொய்ப் பதில் சொல்லி யனுப்பத் துணிய வில்லை. ஆகவே நாங்கள் சந்தித்து சமாதானமாய்ப் போனோம்.

ஜ. இப்பொழுது மறுபடியும் வரிசைக் கிரமமாக அந்தப் பதில்களைக் கூறக் கூடுமா உன்னால்?

அச். ஐயா, புஸ்தகங்களில் அச்சிட்டிருக்கிறபடி நாங்கள் சண்டைபோடுவது; ஆசாரங்களுக்காக கிரந்தங்கள் இருப்பதுபோல, சண்டைகளுக்கும் கிரந்தங்கள் இருக்கின்றன. அந்த வரிசைக் கிரமத்தைச் சொல்கிறேன் உமக்கு. முதல் மரியாதையான பதில், இரண்டாவது சார்தமான பதில், மூன்றுவது துடுக்கான பதில், நான்காவது வைரியான பதில், ஐந்தாவது சச்சரவு பதில், ஆறுவது சுற்று வழிப் பொய்ப் பதில், ஏழாவது நேரான பொய்ப் பதில். நேரான பொய்ப் பதில் தவிர, மற்றவைகளினின்றும் நீர் தப்பித்துக்கொள்ள முடியும். அதினின்றுங்கூட 'ஆல்' என்கிற ஒரு பதப் பிரயோகம் பண்ணிவிட்டால் தப்பித்துக்கொள்ளலாம். ஒரு முறை, நான் அறிந்தபடி, ஏழு மத்யஸ்தர்கள் சேர்ந்து ஒரு சண்டையைத் தீர்க்க முடியாமற் கைவிட்டார்கள். பிறகு சச்சரவிட்டவர்கள் சந்தித்தபொழுது, அவர்களிலொருவனுக்கு இந்த 'ஆல்' என்கிற பதம் ஞாபகம் வந்தது. "நீ அப்படிச்சொன்னால், நான் இப்படிச்சொன்னேன்" என்றான், உடனே சண்டை தீர்ந்து சமாதானமாகி, இனி சகோதரர்களாக வாழ்வதாகச் சத்யம் செய்தார்கள். அந்த 'ஆல்' என்கிற பதம் இருக்கிறதே, பெரிய மத்யஸ்தன்!—அந்தப் பதத்தில் நிரம்ப நன்மையிருக்கிறது.

ஜ. மஹாராஜா, இப்படிப்பட்டவன் அகப்படுவது கடினமல்லவா? எந்த விஷயத்திலும் தெரிந்தவனாயிருக்கிறான்—இத்தனைக்கும் கங்காளி!

கு. விதூஷகன் வேஷம் தரித்து வேடிக்கையாய்ப் பேசியபோதிலும், அறிவிருக்கிறது அவன் பேசும் வார்த்தைகளில்.



ராஜீவாட்சி தன் சுயரூபத்துடனும், சுசீலையும் வருகிறார்கள்.

ரா. (மஹாராஜாவுக்கு) தந்தையே, நமஸ்காரம் செய்கிறேன். நான் உம்முடையவள், உமது மகள்.—(அமரசிம்ஹனுக்கு) பிராணநாதா, நமஸ்காரம் செய்கிறேன். நான் உம்முடையவள், உமது காதலி.

கு. நான் காண்பது மெய்யானால் நீ தான் என் மகள்!

அ. நான் காண்பது மெய்யானால் நீதான் என் ராஜீவாட்சி!

ப. உருவமும் தோற்றமும் உண்மையானால் என் காதலை நான் விடவேண்டியதே.

ரா. (மஹாராஜாவுக்கு) நீர் எனக்குத் தந்தையாயில்லாவிட்டால், எனக்கு வேறு தந்தை கிடையாது.—[அமரசிம்ஹனுக்கு] நீர் எனக்கு கணவனாகாவிட்டால் வேறு கணவனைக் கொள்ளேன்.—[பத்மினிக்கு] நான் ஒரு ஸ்திரீயை மணப்பதானால் உன்னையன்றி வேறொருத்தியை மணம்புரியேன்.

கு. சரி, எல்லாம் சுபமாய் முடிந்தது!—அமரசிம்ஹா, என் மகளைப் பெற்றுக்கொள், ஒரு துக்கமும் உங்களைப் பிரிக்காதிருக்குமாக.—ஹலவீரா:—இவளும் என் மகள் தான், சுசீலையைப் பெற்றுக்கொள்; உங்களிருவருடைய மனமும் என்றும் ஒத்திருக்குமாக.—பத்மினி, செல்வக்கோனுடைய காதலுக்கு நீ இசைய வேண்டியதுதான்,—அன்றேல் ஒரு பெண்ணை மணக்கவேண்டும்.—அச்சுதா, ஆதிரையைப் பெற்றுக்கொள். காற்றும் மழையும் கலந்தது போல் நீங்கள் ஒத்திருக்கிறீர்கள்.—கண்ணே சுசிலா, கண்ணே ராஜீவாட்சி, உங்களிருவரையும் நான் காணப்பெற்றது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது.

ப. [செல்வக்கோனுக்கு] நான் சொன்ன வார்த்தையை மறுக்க மாட்டேன்; உன்னை மணம்புரிகிறேன். நீ என்மீதுகொண்ட

காதலின் திறமானது உன்னை நான் விரும்பும்படிச் செய்து விட்டது.

பாஸ்கர ஜகந்நாதன் வருகிறான்.

பா. ஜ. ராஜாதி ராஜனே, நமஸ்காரம் நான் இரண்டொரு வார்த்தைகள் கூற எனக்கு விடையளிக்க வேண்டும். இச் சபைக்குச் சமாசாரம் கொண்டுவரும் நான் சத்தவீரரான பாஸ்கரருடைய இரண்டாவது மைந்தன். பிரதாப வீர மஹாராஜன் தினந்தோறும் பெருங் கனவான்களெல்லாம் இக் காட்டையடைவதைக் கேள்விப்பட்டு கோபங்கொண்டு தனது சகோதரரான உம்மைப் பிடித்துக் கொல்லவேண்டி, தன் பெருஞ் சைனியத்தை சித்தம் செய்து தானே அவைகளை நடத்தி இவ்வாரண்யத்தின் ஓரத்தில் வந்துசேர்ந்தார். இங்கே ஓர் மகரிஷியைச் சந்தித்து அம் மகரிஷியின் புத்திமதியால் சித்தம் மாறினவராய் தன் துர் எண்ணத்துடன் இவ்வுலக வாசையையும் விட்டு, தானும் தபோதனராகத் தீர்மானித்து தனது ராஜ்ய முழுவதையும் தன்னால் துரத்தப்பட்ட தன் தமயனுக்குக் கொடுத்துவிட்டார், அன்றியும் அவருடன் துரத்தப்பட்டவர்களுடைய நிலங்களை அவரவர்களுக்கு மீட்டும் கொடுத்துவிட்டார்; என் உயிர்மீதாணைப்படி இது சத்தியம்!

கு. வாராய் இளைஞனே! உனது சகோதரர்களுடைய கலியாணத்திற்கு தக்க பஹுமானம் கொண்டுவந்தாய்! ஒருவனுக்கு அபகரிக்கப்பட்ட அவனது நிலங்களைக் கொடுத்தாய், மற்றொருவனுக்கு இவ்விரு நிலத்திற்கே ஒரு பெரும் ராஜ்யத்திற்கு வழிகாட்டினாய், முதலில் நாம் இக்கானகத்திலேயே ஆரம்பமாகி முதிர்ந்த இச் சுப காரியங்களையெல்லாம் நன்கு முடிப்போம். பிறகு நம்முடன் இத்தனைக் காலமாக இக்காட்டின் கண் இராப் பகலாகக் கஷ்டம் அனுபவித்த நமது பிரஜைகளுக்கெல்லாம் நாம் திரும்பவும் பெற்ற அதிர்ஷ்டத்தை அவரவர்கள் அந்தஸ்துக் கேற்றபடி



பகிர்ந்து கொடுப்போம். அதுவரைக்கும் புதிதாய் நேர்ந்த இந்தக் கௌரவத்தை மறந்து, பழையபடியே நாம் வனவாசிகளைப்போல் இச் சுப காரியத்தைக் கொண்டாடுவோம்.—ஏதோ, கொஞ்சம சங்கீதம்!—கலியாணப் பிள்ளைகளே, கலியாணப் பெண்களே, புறப்படுங்கள் நமது சடங்குகளையெல்லாம் சந்தோஷமாய்ச் செய்துமுடிப்போம்.

ஜ. ஐயா, கொஞ்சம் பொறுக்கவேண்டும்.—நீர் கூறியதை நான் சரியாகக் கேட்டிருந்தால், பிரதாபவீர மஹாராஜா ராஜரீகத்தையெல்லாம் திரஸ்கரித்து சன்யாசம் வாங்கிக்கொண்டதாக வல்லவா கூறினீர்?

பா. ஜ. ஆம், அங்ஙனமே செய்தார்.

ஜ. அவரிடம் போய்ச் சேர்கிறேன் நான். இவ்விதம் மாறினவர்களிடமிருந்து நான் கேட்டுக் கற்கவேண்டிய விஷயங்கள் நிரம்ப இருக்கின்றன.—[குலசேகர மஹாராஜாவுக்கு] தாம் பழையபடி மஹாராஜா பட்டம் வகித்து அரசராள்வீராக! உமது பொறுமையும் நற் குணமும் இந்த அதிர்ஷ்டத்தை நன்றாய் வஹிக்க வல்லன.—[அமரசிம்ஹனுக்கு] நீர் உமது மெய்க் காதலுக் கேற்ற காதலியுடன் நீடூழி காலம் சுகமாய் வாழ்வீராக!—[ஹலவீரனுக்கு] நீர் உமது மனைவியுடனும் நிலங்களுடனும் சிறந்த நண்பர்களுடனும் சந்தோஷமாய் வாழ்வீராக! [செல்வக்கோனனுக்கு] நீ நெடு நாள் வருந்திப் பெற்ற மனைவியுடன் மகிழ்ந்து வாழ்வாயாக!—[அச்சுதனுக்கு] நீ எக் காலமும் இம் மாதிரியாகவே வாயாடிக்கொண்டு வாழ்வாயாக! ஏனெனில், உனது ஆசையும் மோகமும் அறுபது முப்பதுடன் தீர்ந்துவிடும்.—ஆகவே, உங்களுடைய இன்பத்தை நாடுங்கள். நான் நாடுவது இம் மாதிரியான இன்ப மல்ல.

கு. பொறு, ஜகந்நாதா, பொறு.

ஜ. வேடிக்கையில் விருதாவாகக் காலம் கழிக்கமாட்டேன் நான், ஏதாவது என்னிடமிருந்து அறிய வேண்டின் நீர் விட்டுப்

போகும் குகைக்குப் போயிருக்கிறேன், அங்கே வந்து தெரிந்துகொள்ளலாம். [போகிறான்.

கு. சரி, புறப்படுங்கள் எல்லோரும், இச் சுப காரியங்களை யெல்லாம் ஆரம்பஞ் செய்வோம், ஜகதீசன் கருணையினால் அவைகளெல்லாம் ஒரு விக்னமுமின்றி சந்தோஷமாய் நிறைவேறுமாக! [எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

O-,3MSM,V
M2
149452
சென்னை-600 008

நாடகம் முற்றியது.

Printed by S. Murthy and Co., at the "Kapalee Press," Madras.